# கைத்தலம் பற்றி



தமிழ்நிவேதா

## பதிப்புரை

புதிதாக எத்தனையோ எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டு தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோம். அதில் பலர் புகழின் உச்சிக்கே போயுள்ளார்கள்.

அந்த வழியிலே திருமதி. தமிழ்நிவேதாவையும் அறிமுகப்படுத்தினோம். இந்த நூல் அவரது நாலாவது நாவல். வாசகர்களின் மனம் கவர ஆரம்பமாகியுள்ளது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

புதிய சிந்தனைகள், நல்ல கருத்துக்கள், படிப்பவர் மனதைப் பண்படுத்தும் நிகழ்வுகள் அனைவரையும் கவரக் காரணமாக உள்ளது.

அருணோதயத்தின் தரம் குறையாமல் அற்புதமாக எழுதுகிறார்கள் என வாசகர்கள் கருதுகிறார்கள். மிக்க நன்றி.

தொடர்ந்து நல்ல நூல்களை மேலும் எழுதி உங்கள் பாராட்டுகளைப் பெற வேண்டுகிறோம்.

- அருணாதயம் அருணன்

# கைத்தலம் பற்றி

## 1

அலாரத்தின் பெரிய சப்தம் அந்த அறையின் அமைதியை குலைத்தது. நல்ல உறக்கத்திலிருந்த நைனிதா தலையை உயர்த்தி மணியைப் பார்த்தாள். மணி ஏழாகி விட்டிருந்தது. சுற்றுப்புறமெங்கும் வெளிச்சம் பரவியிருந்தாலும் அறையின் ஏசியில் வெப்பம் உறைக்கவில்லை. ரிமோட் கண்ட்ரோலை எடுத்து ஏ.சி.யை நிறுத்தி விட்டு குளியலறைக்குச் சென்றாள்.

பத்து நிமிடத்தில் பல் துலக்கி குளித்துத் தயாராகி கண்ணாடி முன் நின்றபோது ஒப்பனையே இல்லாத முகம் காலை நேர புத்துணர்ச்சியுடன் பளபளத்தது.

தலையை வாரி ஒரு ரப்பர் பாண்டை மாட்டியவள், காட்டன் புடவையும் சின்ன பொட்டுமாய் மேஜை மீதிருந்த பேப்பர்களையும் ஹேண்ட் பேக்கையும் எடுத்துக் கொண்டு கிளம்பும்போது தோற்றத்தில் தனிக் கம்பீரம் வந்து விட்டிருந்தது. ஒவ்வொரு விடியலும் ஒரு புதிய நாளை தொடங்கி வைக்கிறது. அந்த தொடக்கத்தை எதிர்கொள்ளும் பரபரப்புடன் அறைக்கதவை தாழிட்டு விட்டு வெளியே வந்த நைனிதா, கதாநாயகிகள் அழகாகத் தான் இருக்க வேண்டும் என்ற எழுதப்படாத விதிகளின் படி மிக அழகாக இருந்தாள். சமீபத்தில்தான் படிப்பை முடித்து விட்டு தான் பயின்ற கல்லூரியிலேயே வேலை பார்க்கத் தொடங்கியிருந்தாள்.

மனோதத்துவம் அவளுக்கு பிடித்தமான பாடமாக இருந்ததால் அதை மாணவர்களுக்கு கற்பிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது. இருபத்தி ஒண்ணாம் நூற்றாண்டில் மனித வாழ்க்கையும் கம்ப்யூட்டரின் ஒரு பாகமாகி விட்டது. மாணவர்களின் எதிர்காலத்தையும் கம்ப்யூட்டர் சார்ந்த துறைகளே நிர்மாணிப்பதால் அவளது வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருந்தது. கம்ப்யூட்டருக்கும் மனிதனுக்கும் உள்ள மனோ ரீதியான தொடர்பு பற்றி யாராவது ஆராய்ச்சி செய்து பாடமாக்கி னால் மறுபடி இந்த பாடத்தின் மவுசு கூடலாம். தனக்குள் புன்னகைத்தபடி எதிரே உள்ள அறையின் கதவைத் தட்டினாள்.

வெகு நேர தட்டலுக்குப் பின் அவள் தம்பி சரண் கண்களைக் கசக்கியபடி கதவைத் திறந்தான்.

''சரண் உனக்கு காலேஜுக்கு நேரமாகல? போய் ரெடியாகு போ'' என்றாள் நைனிதா.



சரண் பதில் பேசாமல் மறுபடி போய் படுக்கையில் விழுந்து உறங்கத் தொடங்கினான்.

''சரண் எழுந்திரு...'' உலுக்கியவளை கோபத்துடன் திரும்பி முறைத்தான் சரண்.

'தினம் இதே தொல்லையாப் போச்சு உன்னோட. நீ ரெடியானா கிளம்பிப் போ. என்னை ஏன் தொல்லை பண்றே?''

''நீ போக வேண்டாமா காலேஜுக்கு? தினமும் ஊர் சுத்திட்டு லேட்டா வர்றது. காலையில க்ளாசுக்கு லேட்டா போறது. அப்படி எங்க போய் சுத்தற தினமும்?''

''உன் லெக்சரையும் அதட்டலையும் எங்கிட்ட காண்பிக்க வேண்டாம். இது வகுப்பறையும் இல்ல. நான் உன் ஸ்டூடண்டும் இல்ல.''

''சரி நீ சரிப்பட்டு வர மாட்ட. நான் அப்பாவைக் கூப்பிடுகிறேன். அவர்கிட்ட சொல்லிக்கோ. அப்பா...''

அவள் குரல் முடியும் முன்னரே பெட்ஷீட்டை உதறி தலையணையைத் தூக்கி அவள் முகத்தில் எறிந்தான் சரண். 'நீ அப்பாவை கூப்பிட்டால் அம்மாதான் உடனே வந்து ஏதாவது புலம்ப ஆரம்பிப்பாள். அதுக்கு காலேஜ் மேல்.' வேகமாகச் சென்று குளியலறைக் கதவைப் படாரென்று அறைந்து சாத்தினான் சரண். எப்படியோ கிளம்பினால் சரி என்ற நிம்மதியுடன் வெளியே வந்து மாடிப்படியில் இறங்கும்போது கூடத்தில் குரல்கள் உரத்துக் கேட்டன. வழக்கம் போல் அம்மாவும் அப்பாவும் காலையிலேயே தங்கள் சண்டையை தொடங்கி விட் டார்கள் போலும். ஒரு பெருமூச்சுடன் அவர்கள் பார்க்கும் முன்பே சமையலறைக்கு விரைந்தாள். அங்கு சமையல் காரம்மா டேபிள் மீது தயாராய் வைத்திருந்த லஞ்ச் பாக்சை

எடுத்துக் கொள்கையில் அவள் சிறு வயதிலிருந்து அந்த வீட்டுடன் இருக்கும் சாந்தம்மா, "ரெண்டு இட்லி சாப்பிட்டு விட்டு போ பாப்பா. வெறும் வயித்தோட போய் பசங்ககிட்ட கத்த முடியுமா?" என அவசரமாய் ஒரு தட்டில் இட்லியும் சாம்பாரும் எடுத்து வைத்தாள், டம்ளரில் நீரை பிடித்து டேபிள் மீது வைத்தாள்.

பணத்திற்கு வேலை செய்பவள்தான் என்றாலும் நைனிதாவிடமும் சரணிடமும் உண்மையான பாசம் உடையவள் சாந்தம்மா. எனவே அவள் பேச்சைத் தட்ட முடியாமல் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினாள்.

இரண்டு வாய் சாப்பிடுவதற்குள் ஹாலில் எதுவோ கீழே விழும் சத்தம் கேட்டது.

"எதற்காக இப்போது போனை தூக்கி எறிகிறாய்?" அப்பா உரத்த குரலில் அதட்டுவது கேட்டது.

"உங்களுக்கு என்னை விட எப்போதும் அந்த போன் தான் முக்கியமாகப் போய் விட்டது. நாள் முழுவதும் வேலைன்னு வெளியேவே இருக்க வேண்டியது. வீட்டுக்கு வர்ற சமயத்திலும் போன் பேசிட்டே இருக்கறதுன்னா நீங்க ஏன் கல்யாணம் பண்ணிக்கணும்?"

"ஒரு பிஸினஸ்மேனுக்கு போனில் பேச எவ்வளவு விஷயம் இருக்கும். நீ தினமும் வீட்ல காலையிலிருந்து இரவு வரை என்ன செய்யறேன்னு நான் கேட்டேனா?"

"நான் ஒண்ணும் உங்க மாதிரி குடும்பப் பொறுப்பில்லாம சுத்தறதில்ல."

"என்ன, நான் பொறுப்பில்லாம சுத்தறேனா? வீட்ல உன் புடவையை பிடிச்சிட்டே உட்கார்ந்திருந்தா என் வேலையை யார் பார்ப்பார்கள்? உனக்கு இவ்வளவு பெரிய



வீடு, கார், புடவை நகை அந்தஸ்து ஆடம்பரமெல்லாம் எப்படி கிடைக்கும்?"

"நானெல்லாம் பணக்கார வீட்டில் நாலு அண்ணன்களுக்கு பிறகு ஒரே பெண் குழந்தையாய் பிறக்கும் போதே வாயில் கோல்டன் ஸ்பூனுடன் பிறந்தவ. இந்த அந்தஸ்து ஆடம்பரத்தை எல்லாம் அதை பார்க்காமலே வளர்ந்த உங்க வீட்டு ஆட்கள் கிட்ட போய் சொல்லுங்க. எனக்கு எத்தனை சீர்வரிசை எங்கப்பா அள்ளிக் கொடுத்தார். பெரிசா பிஸினஸ்ன்னு அலட்டிக்கிறீங்களே. அந்த பிஸினஸ்சுக்கு எங்கப்பா கொடுத்த பணம் எவ்வளவுன்னு சொல்லுங்க பார்க்கலாம்?"

"நாம பேசிட்டு இருக்கும்போது நீ ஏன் தேவையில்லை எங்க வீட்டு ஆட்களைப் பத்தி கேவலமா பேசற?"

"நீங்க மட்டும் எப்படி என்னைப் பத்திப் பேசலாம்?"

நைனிதாவுக்கு வாயில் இருந்த இட்லி உள்ளே இறங்காமல் விக்கியது. ஒரு டம்ளர் நீரைக் குடித்து விழுங்கியவள், மறுபடி சாப்பிடப் பிடிக்காமல் கையை கழுவிக் கொண்டு விரைந்தாள். சாந்தம்மாவும் வற்புறுத்தாமல் ஒரு பரிதாபப் பார்வையுடன் அமைதியாய் இருந்தாள். போர்டிகோவில் காரைத் தயாராய் நிறுத்திவிட்டு காத்திருந்த போர்டிகோவில் காரைத் தயாராய் நிறுத்திவிட்டு காத்திருந்த டிரைவர் முகத்தில் கூட பரிதாபம் தெரிவதாய் தோன்றுகையில் நைனிதாவுக்கு மிகவும் அவமானமாய் இருந்தது.

திருமணமாகி இத்தனை வருடங்கள் கடந்த பின்னரும் வயதில் முதிர்ந்து விட்ட பெற்றோரின் குணத்தில் ஏன் முதிர்ச்சி ஏற்படவேயில்லை? மனமுதிர்ச்சி என்பது வயதால் மட்டும் ஏற்படுவதில்லை என்பது உண்மைதான்

போதும். இருபத்தி நாலு வயதில் நான் ஐம்பது வயது முதிர்ந்து போனேன். ஐம்பதிலும் அவர்கள் அடித்துக் கொள்கிறார்கள் என்றால் அதற்கு மனோ ரீதியாக என்ன காரணமிருக்கும்?

அப்பாவின் அரவணைத்துப் போகாத குணமும் அதன் காரணமாய் அம்மாவுக்கு ஏற்படும் பாதுகாப்பின்மையும் தான் காரணமாக இருக்க முடியும். யார் ஜெயிப்பது என்று போடப்படும் சண்டையில் சத்தமில்லாமல் தோற்றுப் போவது வாழ்க்கைதான் என்பதை எப்போது உணர்வார்கள்? இயல்பான குடும்பச் சூழல் அமையாததால் குடும்பத்தில் இருக்கும் நால்வரும் தனித்தனி கார்னர்களாய் நின்று போன நிலை எப்போது மாறும்?

கார் ஒரு குலுக்கலுடன் கல்லூரி வாயிலில் நின்றிருந்தது. பணிவாக ஓடிவந்து கதவைத் திறந்துவிட்ட காரோட்டியிடம் தலையசைத்துவிட்டு இறங்கி காம்பவுண்டினுள் நுழைந்தாள்.

மரத்தடியிலும், மைதானத்திலும் மாணவ மாணவிகள் முடிச்சு முடிச்சாய் சிரிப்பும் கூச்சலுமாக இருந்தார்கள். அவர்கள் முகத்தில் கொப்பளிக்கும் குறும்பையும், உற்சாகத்தையும் பார்க்கையில் இவர்களுடைய உலகம் வேறு. நமக்கு தெரியாத உலகம் அது என்று தோன்றியது. அன்றாடப் பிரச்சனை பகிர்ந்து கொள்ளவும். தாங்கிப் பிடிக்கவும் பெற்றோர்கள் துணை இருக்கும் எண்ணத்தில் இயல்பாக ஏற்படும் உற்சாகம் அது. அலுவலக ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டு விட்டு வரும்போது வகுப்பு தொடங்குவதற்கான மணி அடித்தது. தற்காலிகமாய் பேச்சை நிறுத்தி விட்டு வகுப்பறைக்கு விரைந்த மாணவ மாணவிகளுடன் தானும் சென்று வகுப்பறைக்குள் நுழைந்தாள்.



மாணவர்களின் 'குட்மார்னிங்'கிற்கு பதில் சொல்லி விட்டு பாடத்தை தொடங்கியதும் வகுப்பின் சலசலப்பு அடங்கிப் போனது. வழக்கம்போல அவள் ஈடுபாட்டுடன் பாடத்தில் ஒன்றிப் போகையில் மாணவர்களும் கட்டுண்டவர்களாக அமர்ந்திருந்தனர். மாணவர்களின் ஆர்வத்தைப் பார்க்கையில் முதல் நாள் இரவு வெகு நேரம் வரை இதற்காகத் தான் தயாரித்துக் கொண்டது வீணாகவில்லை என்று மகிழ்ச்சியாக இருந்தது. வகுப்பு முடிந்ததற்காக மணி சத்தம் கேட்டதும் தான் எல்லோரும் உணர்வு பெற்றவர்களாக எழுந்தார்கள்.

காலை வகுப்புகள் முடிந்ததும் மதியம் சாப்பாட்டு இடை வேளையில் ஸ்டாப் ரூமில் அமர்ந்து டிபன் பாக்சை திறக்கையிலேயே பசி வயிற்றைக் கிள்ளியது. சாப்பிட்டுக் கொண்டிருந்த மற்ற ஆசிரியைகள் இவளைப் பார்த்ததும் சொன்ன 'ஹலோ'வுக்கு பதில் 'ஹலோ' சொல்லிவிட்டு நைனிதா சாப்பிடத் தொடங்கினாள்.

வகுப்புகளை முடித்துவிட்டு எல்லா ஆசிரியர் ஆசிரியைகளும் வந்துவிட ஸ்டாப் ரூம் களை கட்டியது. அவர்கள் நியூக்ளியர் அக்ரிமெண்ட்டை விமர்சித்து, டி.வி. நிகழ்ச்சிகளை பற்றி அலசி, தங்கள் குடும்பக் கதைகளைப் பேசி முடிப்பதற்குள் நைனிதா சாப்பிட்டு முடித்து ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்து படிக்கத் தொடங்கினாள்.

அந்தக் கல்லூரியில் சீனியரும், நைனிதாவின் பழைய டீச்சருமான கரோலினா உரிமையுடன் நைனிதாவின் கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்கினாள்.

"நைனிதா, நீ ஸ்டூடண்டாய் இருந்த போதுதான் எப்பவும் புத்தகமும் கையுமாய் இருப்பாய். டீச்சரான பிறகும் புத்தகத்தையே படிச்சிட்டு இருந்தா எப்படி?"

''இன்னிக்கு கடைசி பீரியட் எடுக்க வேண்டிய க்ளாசுக்கு ப்ரிப்பேர் பண்ணிட்டு இருந்தேன் மேடம்...''

''எங்களுக்கெல்லாம் க்ளாஸ் இல்லையா? இல்ல, அதற்கு தயாரித்துக் கொள்ள வேண்டாமா? எப்பவும் வேலை பார்த்துட்டே இருந்தா மனசு சோர்ந்து போகும். நாளடைவில் அந்த வேலையிலும் ஆர்வம் குறைந்து போய் இயந்திரத்தனமாய் செய்ய ஆரம்பித்து விடுவோம். கொஞ்ச நேரம் எங்களோடு உட்கார்ந்து பேசு. பிறகு உன் வேலையை கவனிக்கலாம்.'' கட்டாயப்படுத்தி நைனிதாவை எழுப்பி தங்கள் அருகே அமர வைத்தாள் கரோலின்.

''மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் காண்பிக்க இந்த வாரத்தில் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். உங்களில் யார் போகிறீர்கள்?'' என்றார் ஹெச்.ஓ.டி.சங்கர்ராமன்.

''ஐயோ, மெண்டல் ஆஸ்பத்திரிக்கா?''

''நான் நிறைய முறை மாணவர்களுடன் போயிருக்கிறேன். நான் போகல.''

''இந்த வருடம் ஜூனியர்ஸ் யாரையாவது அனுப்புங்க'' என ஆளுக்காள் பின்வாங்க, ''ஸார் நான் போகிறேன்'' என்றாள் நைனிதா ஆர்வத்துடன்.

''நானே மெண்டல் ஹாஸ்பெட்டலைப் பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்.''

''சரி உங்க ஆசையும் நிறைவேறட்டும். நீங்களே போங்க'' என்றபடி சிரிப்புடன் சங்கர்ராமன் கிளம்பிப் போனார்.

''நைனிதா மெண்டல் ஹாஸ்பெட்டல் போனால் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். ஆபத்தான சில



கேஸ்கள் எந்த நேரம் என்ன செய்யும்னு யாருக்கும் தெரியாது'' என்றாள் சக ஆசிரியை யசோதா.

''போன வருடம் போனபோது நம்ம கண்ணன் சார் மீது ஒரு பைத்தியம் கத்தியால் குத்த வந்ததாம்'' என்றார் பரசுராமன்.

''மருத்துவமனையில் கத்தி எங்கிருந்து வந்தது?'' என்றாள் நைனிதா யோசனையுடன்.

ஒரு நிமிடம் திகைத்த பரசுராமன் ''எதாவது ஆபரேஷன் கத்தியாய் இருக்கும்'' என்றார்.

''ஆபரேஷன் கத்தியை அவ்வளவு அலட்சியமாகவா போட்டு வைப்பார்கள்?'' என்றாள் நைனிதா சந்தேகம் தீராமல்.

மேலும் ஆளாளுக்கு தாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் கற்பனை சேர்த்து விவரிக்க, நைனிதாவுக்கு வியப்பாக இருந்தது.

மனோதத்துவ பாடமாக மற்றவர்களுக்கு கற்றுத்தரும் இவர்கள் மனோ ரீதியாக பாதிக்கப்பட்டவர்களிடம் அனுதாபப்படாமல் பேய், பிசாசைப் போல் ஏன் பயப்படுகிறார்கள்?

''எனக்கு எந்தத் தயக்கமும் பயமும் இல்லை. நான் போகத்தான் போகிறேன்'' என்றாள் நைனிதா முடிவாக.

''ஐ. நோ. யு வா ரீ குட்'' என்றாள் கரோலினா அவள் முதுகைத் தட்டி.

அன்றைய வகுப்பில் நைனிதா மருத்துவமனைக்கு போகப் போவதை சொன்னதும் மாணவர்கள் ஆர்வத்துடன் டேபிளைத் தட்டினார்கள்.

''எப்போது போகிறோம் மேடம்?''

''அங்கே போய் நோட்ஸ் எடுத்துக் கொள்ள வேண்டுமா?''

''மனச்சிதைவு நோய்க்குக் காரணம் என்ன?'' ஆளுக்காள் கேள்வி கேட்கத் தொடங்கினார்கள். அவர்கள் கையமர்த்திய நைனிதா ஒவ்வொரு கேள்விக்காய் பதில் சொன்னாள். மனச்சிதைவு நோய்க்கான அறிவியல் காரணங்களை விளக்கினாள்.

''மனிதர்களின் ஒவ்வொரு பெக்யூலியர் நடத்தைக்குப் பின்னாலும் ஒரு காரணம் இருக்கும். காரணத்தைக் கண்டு பிடித்து அதற்கு நிவர்த்தி செய்யத்தான் சைக் கேட்ரி என்கிற ஸயன்ஸ் முயற்சி செய்கிறது'' என தொடங்கியவள் பாடத்தை விளக்கி முடிக்கவும் வகுப்பு முடியவும் சரியாக இருந்தது.

மாணவ மாணவிகளிடம் விடைபெற்று நுழைவாயிலில் காத்திருந்த காரில் ஏறி திரும்ப பயணித்து வீட்டு வாயிலில் நின்று பிரம்மாண்டமான அந்த மாளிகையை நிமிர்ந்து பார்க்கையில் மனசில் இனம்புரியாத சோர்வு ஏற்பட்டது. காசை வாரி இறைத்து அப்பாவும் அம்மாவும் எழுப்பியிருக்கும் பிரம்மாண்ட சூன்யம் இந்த வீடு. மேற்கொண்டு வீட்டைப் பார்க்கப் பிடிக்காமல் நைனிதா அவசரமாய் உள்ளே சென்றாள்.

## 2

''ரோஹித் சாப்பிட வர்றியாப்பா?'' லட்சுமி மகனின் அறையை நோக்கி குரல் கொடுத்தாள்.

''இதோ, வந்துட்டே இருக்கேன். எடுத்து வைங்கம்மா'' என குரல் கொடுத்த ரோஹித் இரண்டு நிமிடங்களில் டைனிங் டேபிளில் வந்து அமர்ந்தான்.



ஆறடி உயரமும், மாநிறமும் அதற்கேற்ற கம்பீரமுமாய் அமர்ந்து, நாசூக்காய் சாப்பிடுகிற மகனைப் பார்த்ததும் கண்ணும் மனமும் நிறைந்தது லட்சுமிக்கு.

''அண்ணா ரெண்டு பேரும் கிளம்பிட்டாங்களாம்மா?'' என்றான் ரோஹித்.

''ஆமாம்ப்பா, கம்பெனியில என்னவோ வேலைன்னு காலையில சாப்பிடாம கூடப் போயிட்டாங்க'' என்றாள் லட்சுமி அங்கலாய்ப்புடன்.

''இது என்ன புதுசா? அடிக்கடி இப்படித்தான் ஓடிடறாங்க. விடுங்கத்தை'' என்றாள் மூத்த மருமகள் சுகுணா.

''என் சமையலை இன்னிக்கு சாப்பிட அவங்களுக்கு குடுத்து வெக்கல'' என்றாள் இரண்டாவது மருமகள் சபிதா.

''அம்மா இவங்க சொல்றதை எல்லாம் நம்பாதீங்க. ரெண்டு பேரும் கூட்டு சேர்ந்து சதி செய்யறாங்க'' ரோஹித் அலறினான்.

''என்ன... என்ன செய்தோம்?'' இருவரும் பரபரத்தனர்.

''அம்மா ரெண்டு பேரும் சேர்ந்து நல்ல சாப்பாடு சாப்பிடச் சொல்லி அண்ணன்களை தினமும் ஹோட்டலுக்கு அனுப்பி வெச்சிட்டு இவங்க சமையலறையில் செய்கிற பரிசோதனை முயற்சிகளுக்கு நம்மை பலிகடாவாக்க பார்க்கிறாங்க. உஷாரா இருந்துக்குங்க'' ரோஹித் சிரித்தபடியே அண்ணிகளை கிண்டல் செய்தான்.

''போடா நீயும்.. உன் ஜோக்கும்'' என்றாள் லட்சுமி செல்லமாய்.

ரோஹித் கைகழுவப் போகும்போது நிஜமாவே உங்களுக்கு சாப்பாடு பிடிக்கலையா தம்பி? அதுக்குள் எழுந்துட்டீங்களே!'' என்றாள் சபிதா வாடிய முகத்துடன்.

''ஐயோ. என்ன அண்ணி இதுக்குப் போய் சீரியஸ்
ஆகறீங்க? எனக்கு இன்னிக்கு சீக்கிரம் போகணும்.
கல்லூரி மாணவர்கள் சிலர் மருத்துவமனைக்கு நோயாளி
களைப் பார்க்க வரப் போறாங்க. வழக்கமான வேலை
களுடன், அவர்களை கவனித்து, விளக்கம் சொல்லி
அனுப்ப வேண்டிய வேலை வேறு. அதனால்தான்
கிளம்புகிறேன்'' பேசியபடியே நீலசட்டை மீது வெள்ளை
கோட்டை அணிந்து ஸ்டெதஸ்கோப்பை கோட் பாக்கெட்
டில் போட்டபடி வீட்டிலுள்ளவர்களிடம் விடைபெற்றுக்
கிளம்பினான்.

மருத்துவமனையின் டாக்டர்ஸ் கார்பாக்கிங்கில் காரை
நிறுத்தி விட்டு உள்ளே நுழையும்போது எதிர்ப்பட்ட
சீனியர் டாக்டர் சிவசண்முகம் ரோஹித்தைப் பார்த்து
புன்னகைத்தார். அவனது 'குட்மார்னிங்'கை ஒரு தலை
யசைப்பில் அங்கீகரித்தவர் ''கல்லூரி மாணவ மாணவி
கள் குரூப் ஒன்று உனக்காக லாபியில் காத்திருக்கிறது.
போய் அட்டெண்ட் பண்ணு'' என்று விட்டு வார்டுக்குள்
நோயாளிகளை கவனிக்கச் சென்றார்.

ரோஹித் லாபிக்குச் சென்றபோது கிசுகிசுத்த குரலில்
பேசி சிரித்தபடி மாணவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்
களுக்கு நடுவே ஒரு பெண் மிக அழகான பெண் நின்று
கொண்டிருந்தாள். அவர்களின் வகுப்பு தலைவி போலும்.
ரோஹித் அவர்களை நோக்கி நடக்கவும் ஏதேச்சையாக
அவன் பக்கம் திரும்பியவளின் கண்களை சந்தித்த நீலேஷ்
ஒரு நிமிடம் பார்வையை விலக்க முடியாமல் திகைத்
தான். ஏனென்றால் அவள் கண்கள் மிக விசாலமாக ஒரு
ஓவிய பெண்ணின் கண்களைப் போல் வடிவாக இருந்தது.
அத்தனை அழகும் கவர்ச்சியும் நிரம்பிய விழிகளில்
அவனைப் பார்த்ததும் எந்த உணர்வும் பிரதிபலிக்க



வில்லை. யோசனையுடன் ரோஹித் அவர்களை அணுகி
'ஹலோ' என்றான் பொதுவாய்.

''நான் டாக்டர் ரோஹித். இன்று உங்களுக்கு இந்த
மருத்துவமனையை காண்பிப்பதுடன் சில நோயாளி
களைப் பற்றியும் விளக்கம் தரப் போகிறேன். உங்களுடன்
உங்கள் லெக்சரர்ஸ் யாரும் வரவில்லையா'' என்றான்
ஆங்கிலத்தில்.

பலத்த சிரிப்புக்கிடையே எல்லோரும் அந்த அழகிய
பெண்ணை சுட்டிக் காட்டினார்கள். ''இவர்கள்தான் எங்க
லெக்சரர்.'' வியப்புடன் அவளைப் பார்த்துப் புன்னகைத்
தான் ரோஹித். ''நான் எதிர்பார்க்கவேயில்லை. இத்தனை
அழகான இளமையான லெக்சரரை.''

மேற்கொண்டு அவன் பேசுமுன் குறுக்கிட்ட அவள்,
''நாம நோயாளிகளைப் பார்க்கப் போகலாமே!'' என்றாள்.

சகஜமான பேச்சை விரும்பவில்லை என்பதை அவள்
குரல் உணர்த்த ''போகலாம்'' என தோள்களைக் குலுக்
கியபடி அவள் முன்னே நடந்தான்.

முதலில் மருத்துவமனையை மேலோட்டமாக சுற்றிக்
காண்பித்த அவன் ''இன்று சாதாரண நோயாளிகளை மட்
டும் சந்தியுங்கள். ஸீரியஸ் கேஸ் இன்னொரு நாள் பார்க்க
லாம்'' என்றபடி ஒரு வார்டுக்குள் அழைத்துப் போனான்.

நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள், மனச்சிதை
வுக்கு ஆளானவர்கள்.

விபத்தினாலோ அதிர்ச்சியாலோ சித்த பிரமை ஏற்
பட்டவர்கள் என ஒவ்வொன்றாய் காண்பித்து விளக்கிக்
கொண்டு போனான். மாணவர்கள் ஆர்வத்துடன் ஒவ்
வொரு விஷயத்தைப் பற்றியும் விளக்கம் கேட்டார்கள்.

"மனச்சிதைவின் அறிகுறி என்ன? அது எதனால் ஏற்படுகிறது?" ரோஹித் அங்கிருந்த நோயாளிகளில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவரைக் காட்டினான். "இவர் ஒரு டிரிங்கர். தினமும் மது அருந்துபவர். வெளியூரில் தங்கி வேலை பார்த்து வரும் இவர் தன் குடும்பத்துடன் இருக்கும் போது குடிக்கமாட்டார். நாளடைவில் இவர் தன் குடும்பத்தைப் பார்க்க ஊருக்கு சென்றபோதெல்லாம் அவர் காதருகே ஏதேதோ குரல்கள் கேட்கத் தொடங்கின. வீட்டில் மாந்த்ரீக விஷயம் இருப்பதாக கருதி வீட்டை மாற்றினார். நாளடைவில் ஏ.சி. சத்தத்திலிருந்தும், பேன் சத்தும்போதும் உன்னை விட மாட்டேன் என யாரோ மிரட்டுவது போலிருந்தது. தெருவில் பாடும் திருவிழா ஸ்பீக்கர்களில் கூட யாரோ தன்னை மிரட்டுவதாக தோன்றவும் எங்களிடம் வந்தார். அவரை பரிசோதித்த போது மனச்சிதைவு நோய்க்கு ஆளாகியிருப்பது தெரிந்தது.

"இதோ இந்த பெண்ணும் மனச்சிதைவுக்கு ஆளானவர் தான். இவர் வீட்டிலுள்ள எல்லா பைப்பையும் திறந்து விட்டு விடுவார். தண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்க வேண்டும். எப்பவும் யாராவது பைப்பை மூடினால் மூச்சு திணறும் இவருக்கு. மூச்சு விட முடியாமல் துடிப்பார். இந்த மாதிரி வித்தியாசமான கேஸ்கள் நிறைய இருக்கிறார்கள்."

"இவர்களுக்கு எப்படி சிகிச்சை அளிக்கிறீர்கள் டாக்டர்?"

"முதலில் அவர்கள் நோய்க்கான காரணத்தை உறவினர்கள், நண்பர்கள் மூலம் தெரிந்து கொண்டு மருந்தின் மூலமாகவும், கவுன்சிலிங் செய்தும் குணப்படுத்தலாம். குடும்பத்தினர் ஒத்துழைப்பு இருந்தால்தான் இவர்கள் முழுக்க குணமாவது சாத்தியம்."



அவ்வளவு நேரமும் சப்ஜெக்டில் ஆழ்ந்து போய் நின்றிருந்த நைனிதா "மற்ற நோய் வந்தால் டாக்டர்கள் நோயுடன் போராட வேண்டும். இதில் நோயாளியுடனும் போராட வேண்டியிருக்கும்" என்றாள் மாணவிகளிடம்.

"யெஸ். யு ஆர் ரைட்" என்றான் ரோஹித் முகம் மலர்ந்து.

மேலும் சிறிது நேரம் அங்கே செலவிட்ட பின் எல்லோரும் கிளம்பினார்கள். வழியனுப்பும் பொருட்டு ரிஷப்சன் வரை கூட வந்த ரோஹித் "உங்க பெயரை நீங்க சொல்லவேயில்லையே!" என்றான் நைனிதாவிடம்.

"அது உங்களுக்கு அவசியம் இல்லைன்னு நினைக்கிறேன்" சட்டென்று கத்தரித்தாள் நைனிதா.

"எனக்கு அது அவசியமோ இல்லையோ, உங்களுக்கு ரொம்ப அவசியம்."

நைனிதா புரியாமல் பார்க்க, "உங்களை எங்காவது மறுபடி நான் சந்திக்க நேர்ந்தால் மென்டல் ஹாஸ்பெட்டலில் சந்தித்த பெண்ணேன்னு நான் கூப்பிட்டா, பார்க்கிறவங்க உங்களை மென்டல்ன்னு நினைக்க மாட்டாங்களா? சோ உங்க நன்மைக்காகத்தான் உங்க பெயரைக் கேட்கிறேன்."

சிரிப்புடன் ரோஹித் பேசிக் கொண்டிருக்க நைனிதா பதில் பேசாமல் நடந்து போய் கல்லூரி பேருந்தில் அமர்ந்தாள்.

மாணவ மாணவியர் ரோஹித்திற்கு நன்றி கூறி விடை பெற்று சென்று அமர்ந்ததும் பேருந்து கிளம்பியது. உள்ளே போகத் திரும்பிய ரோஹித் வண்டி காம்பவுண்டின் முனை திரும்பியதும் தன்னையறியாமல் திரும்பிப் பார்த்தான். பேருந்தும் அதில் அமர்ந்திருந்த அத்தனை

முகங்களும் அவுட் ஆப் போகஸில் தெரிய அவள் முகம் மட்டும் மின்னலாய் மின்னி மறைவதை ஒரு ஆச்சரியத்துடன் கவனித்தான்.

மாலையில் வேலை முடிந்து ரோஹித் வீட்டிற்கு போனபோது குடும்பம் மொத்தமும் ஹாலில் கூடியிருந்தது. அப்பா பாலசுந்தரம், பெரிய அண்ணா ராஜா, இரண்டாவது அண்ணன் கார்த்திக், அம்மா, அண்ணிகள் எல்லோரும் அமர்ந்து ஏதோ சாப்பிட்டபடி அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

பாலசுந்தரம் ரெடிமேட் ஆடைகள் ஏற்றுமதி நிறுவனம் நடத்தி வந்தார். ராஜா அப்பாவுடன் சேர்ந்து தொழிலில் ஈடுபட்டிருக்க கார்த்திக் ஆடிட்டராக தொழில் செய்வதுடன் அப்பாவுக்கும் உதவி செய்து வந்தான்.

காபி டம்ளருடன் சமையலறையிலிருந்து ஹாலுக்கு வந்த சபிதா தன் கணவன் கையில் டம்ளரை கொடுக்கையில் உள்ளே நுழைந்த ரோஹித் கார்த்திக் கையிலிருந்த டம்ளரை பிடுங்கிக் கொண்டு நிதானமாய் சோபாவில் சாய்ந்து குடிக்கத் தொடங்கினான்.

"இன்னிக்கு காலையில் யாரோ என் சமையல் மோசம்னு சொல்லிட்டு இப்ப காபியை பிடுங்கி குடிக்கறாங்க. அது யார்னு தெரியுமா தம்பி?" சபிதா ரோஹித்தை சீண்டினாள்.

"அது உங்க முட்டாள் புருஷனாய்த்தான் இருக்கும். டேய் அண்ணா ஏண்டா அண்ணியை அழ வெக்கற?" கார்த்திக்கின் முதுகில் ஓங்கி அடித்தான் ரோஹித்.

"நா எப்படா அழ வெச்சேன்? நீயும் உங்கண்ணியும் சண்டை போட்டுகிட்டு அதுக்காக என்னை அடிக்கிறியடா?" முதுகைத் தடவினான் கார்த்திக்.



"சரி.. சரி.. விடு கார்த்திக்" ராஜா சமாதானப்படுத்தினான்.

"உன் பொண்டாட்டி அடிக்காத அடியா ரோஹித் அடிச்சிட்டான்?"

"அடப்பாவி அண்ணனா நீ? சப்போர்ட் பண்ணுவேன்னு பாத்தா கலாக்கிறியா?"

கார்த்திக் கத்தவும் எல்லோரும் சிரித்தனர்.

"வைஷூ... இங்க வாடா" என்றான் ரோஹித்.

"ம்ஹூம்" என கொஞ்சலாய் தலையசைத்த ராஜாவின் பத்து வயது பெண் வைஷாலி கார்த்திக்கின் ஒரு வயது குழந்தை ப்ரணவை மடியில் அமர்த்தி கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

"வைஷாலிக்கு தம்பி மேல ரொம்ப பாசம் மாமா. ஸ்கூல்ல இருந்து வந்ததும் முதலில் அவனைத்தான் தேடுவாள்" என்றாள் சுகுணா பெருமையுடன்.

"ராஜா, கார்த்தி எல்லாம் கூட அப்படித்தான் சுகுணா. சின்ன வயசுலயிருந்து தம்பின்னா உயிரா இருப்பாங்க. அது இன்னிக்கு வரைக்கும் தொடருது." என்ற லட்சுமி "சீக்கிரமா நம்ம ரோஹித்துக்கு கல்யாணமாகி உங்களை மாதிரியே ஒரு நல்ல பெண் வீட்டுக்கு வந்துவிட்டால் எங்களுக்கு முழு நிம்மதியாய் இருக்கும்" என்றாள்.

"அம்மா அந்த கலெக்டரோட பெண்ணை பாத்தீங்களே என்னாச்சு?" என்றான் ராஜா.

"பெண் நல்ல லட்சணமாய் இருக்கா. படிப்பு, அந்தஸ்து எல்லாம் இருந்தும் உன் தம்பிக்கு பிடிக்கல. நான் என்ன செய்ய?"

"நம்ம சாதி யில் ஒனர் பெண்ணை ரோஹித்துக்கு கல்யாணம் பணணிக்கச் சொல்லி எங்கிட்ட நடையா நடக்கிறார்" என்றான் கார்த்திக்.

"உங்கிட்ட நடந்து என்ன பிரயோஜனம்? ரோஹித்தைக் கேள். பிடிச்சிருந்தா யார் மறுப்பு சொல்லப் போகிறோம்?" என்றார் பாலசுந்தரம்.

"என்ன ரோஹித் நீ கூட ஒருமுறை பெண்ணை பார்த்திருக்கிறாய். என்ன சொல்கிறாய்?" என்றான் கார்த்திக்.

"ஏதோ ஒரு கல்யாணத்துல உன் க்ளையண்டோட டாட்டர்ன்னு அறிமுகப்படுத்தினியே அந்த பொண்ணா?"

"யெஸ்.. யெஸ்.. அதே பெண்தான்."

"கார்த்திக், நீ பேமஸான ஆடிட்டர்னு நினைச்சேன். எனக்கு பெண் பார்க்கிற சாக்கில் உன் க்ளையண்டை எப்படி பெருக்கிக் கொள்கிறாய்னு இப்பதான் தெரியுது" ரோஹித் சிரிக்கவும் கார்த்திக் முறைத்தான்.

"பாருங்கப்பா இவன் சொல்றதை" என அப்பாவிடம் கார்த்திக் புகார் சொல்லவும், "கார்த்திக்கின் தொழில் ரகசியத்தை எல்லாம் நீ ஏன் ரோஹித் வெளியே சொல்கிறாய்?" என பாலசுந்தரம் அவன் காலை வாரினார்.

"உங்களுக்கெல்லாம் எப்பவும் கடைக்குட்டிதானே உசத்தி? அதுசரிப்பா, உங்க செல்ல மகனுக்கு எப்பதான் கல்யாணம் பண்ணப் போறீங்களாம்?" என்றான் கார்த்திக் அப்பாவிடம்.

பாலசுந்தரம் ரோஹித்தைப் பார்க்க, ரோஹித் அப்பாவைப் பார்த்து சங்கடத்துடன் சிரித்தான்.

"எனக்கு இப்ப கல்யாணம் பண்ணிக்கணும்னு தோணலப்பா. மெதுவா பார்க்கலாம்."



"உன் வயசில் ராஜாவுக்கும், கார்த்திக்கும் கல்யாணமாகிவிட்டது. நல்ல குடும்பத்து படித்த, அழகான பெண்களைத்தானே நாம் பார்த்தோம். என்ன குறை அவர்களுக்கு? நீ ஏன் வேண்டாம் என்கிறாய்?"

"நல்ல குடும்பத்து பெண்கள்தான் அப்பா. ஆனால் செல்லுலாயிட் பொம்மைகள். வீட்டை நிர்வகிக்கவும், அழகுபடுத்திக் கொள்ளவும், பார்ட்டிகளில் சிரித்து பேசவும் பழக்கப்படுத்தபட்ட பொம்மைகள். ஆனால் எனக்கு அறிவுகளை பொருந்திய, பார்த்தவுடன் வசீகரிக்கும் முகம் வேண்டும். இவளுடன் என்னால் ஆயுசுக்கும் சந்தோஷமாய் வாழ முடியும் என்று தோன்றுகிற பெண்ணைத் தான் நான் மணந்து கொள்வேன்."

பாலசுந்தரம் புன்சிரிப்புடன் ரோஹித்தின் தோள்களில் தட்டினார்.

"சோ, காதலிச்சுதான் கல்யாணம் பண்ணிக்குவேங்கற. உன் ஆசைக்கு அதிர்ஷ்டமும் துணை நிற்கட்டும் ரோஹித். வாழப்போறவன் நீ. உன் மகிழ்ச்சிதான் எங்களுக்கு முக்கியம்."

ரோஹித் திருப்தியுடன் புன்னகைக்க, "அப்பா அது அநியாயம்" என்றான் ராஜா. "எங்களுக்கெல்லாம் நீ இப்படி ஒரு சான்ஸ் கொடுக்கவேயில்லை."

"போடா, சான்ஸே கொடுத்தாலும் அறிவா பொண்ணு வேணும்னு தேடியிருந்தா நமக்கெல்லாம் கல்யாணமே நடந்திருக்காது" என்றான் கார்த்திக்.

"உங்களுக்கெல்லாம் நாங்க கிடைச்சதே பெரிய விஷயம். ரொம்ப கனவு காணாதீங்க" என்று சபிதா சொல்லவும் பெரிய சிரிப்பு எழுந்தது அங்கே.

"ரோஹித் அடுத்த வாரத்தில் டிரேட் சென்டரில் எக்ஸ்போர்ட் எக்ஸிபிஷன் நடக்கிறது. நாமளும் ஸ்டால் போடப் போகிறோம். உனக்கு லீவ் இருக்குமா?" என்றார் பாலசந்தரம்.

"எனக்கு அங்கே என்னப்பா வேலையிருக்கப் போகிறது? ஏதாவது மெடிக்கல் எக்ஸிபிஷனாய் இருந்தாலும் பரவாயில்லை."

"இது நம்ம குடும்பத்தொழில் ஹரி. உங்க தாத்தா கைத்தறியில் துணி நெசவு செய்து விற்பனை செய்து கொண்டிருந்தார். எங்கப்பா பவர்லும் போட்டார். நான் ரெடிமேட் உடைகள் தயாரிக்கத் தொடங்கினேன். ராஜா வந்தப்புறம் வெளிநாட்டு ஆர்டர்கள் பிடித்தான். கார்த்திக்கும் அவனுக்கு துணை நின்றான். நீ ஆசைப்பட்டதால் மருத்துவம் படிக்க வைத்தோமே தவிர. குடும்பத் தொழிலைப் பற்றி நீ தெரிந்து கொள்ள வேண்டாமா? எப்படியிருந்தாலும் நீயும் அதில் ஒரு பங்குதாரர்தான் ரோஹித்?"

"ஆமாம் ரோஹித். எங்களுக்கு உதவி செய்யவாவது வாயேன்" என்றார்கள் ராஜாவும் கார்த்திக்கும்.

"சரி வருகிறேன்" என்ற ரோஹித் எழுந்து தன் அறைக்கு போனான்.

## 3

ஜே.கே. கிருஷ்ணமூர்த்தியின் புத்தகத்தை படித்தபடி நைனிதா லானில் அமர்ந்திருந்தாள்.



போர்டிகோவில் டிரைவர் காருடன் காத்திருக்க, பட்டு புடவை சரசரக்க வந்த கலாவதி மகளைப் பார்த்ததும் "நைனிதா கோயிலுக்கு போகலாம் வர்றியா?" என்றாள் அவளிடம்.

"இல்லேம்மா, எனக்கு கொஞ்சம் படிக்கணும்."

"இன்னிக்கு ஆடிவெள்ளி. அம்மனுக்கு ரொம்ப விசேஷம். அப்புறமா படிச்சிக்கலாம் வா."

அம்மாவிடம் என்ன சொல்லி மறுப்பது என்று யோசித்து முடிப்பதற்குள் அப்பாவின் கார் உள்ளே வந்து நின்றது.

அம்மா மகளை கோவிலுக்கு அழைத்ததையே மறந்து போய் காரில் ஏறிச்செல்வதையும், அம்மாவை திரும்பியும் பார்க்காமல் அப்பா உள்ளே விரைவதையும் நைனிதா வருத்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அம்மாவும் அப்பாவும் பேசி சிரித்தோ, வெளி இடங்களுக்கு சேர்ந்து சென்றோ அவள் பார்த்ததேயில்லை.

அம்மா பணக்கார குடும்பத்தில் பிறந்தவள். இன்றளவும் அப்பாவிடம் பணத்திற்காக கையேந்த வேண்டிய தேவை இல்லாதவள். அப்பா சாதாரண குடும்பத்தில் பிறந்து தன் உழைப்பில் முன்னேறி அந்த கர்வத்துடன் இருப்பவர். இருவரின் ஈகோவும் ஒத்துப்போகவேயில்லை. பெற்ற குழந்தைகள் தங்களை விட்டு விலகிப் போனதையும் கூட அவர்கள் உணரவில்லை.

இன்ஜினியரிங் இரண்டாவது வருடம் படிக்கும் சரண், புத்தகத்தை எடுத்து வைத்து படித்து அவள் பார்த்ததேயில்லை. கல்லூரிக்கும் அவன் அடிக்கடி மட்டம் போடுவதாக கேள்விப்பட்டிருந்தாள்.

அம்மாவிடம் அடிக்கடி எதற்காகவாவது தர்க்கம் செய்து கொண்டிருப்பான். தன்னிடமும் அவனுக்கு பயமில்லாத நிலையில் அப்பாவிடம் சொல்லித்தான் ஏதாவது செய்ய வேண்டும்.

சுற்றிலும் இருட்டத் தொடங்கவும் நைனிதா எழுந்து உள்ளே போனாள்.

சிதாம்பரம் ஹாலில் தனியே அமர்ந்திருந்தார். அவளைப் பார்த்ததும் ''சாந்தம்மா எங்கேன்னு பார் நைனிதா. வீட்டில் யாரையும் காணோம். எனக்கு ஒரு டீ வேணும்'' என்றார்.

நைனிதாவுக்கு அந்த நிமிடம் அப்பாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

வெளியே அலைந்துவிட்டு களைத்துப்போய் வரும் கணவனையும், குழந்தைகளையும் கவனிக்காத அம்மா, கோவிலில் யாருக்காக வேண்டிக் கொள்ளப் போகிறாள்? சாந்தம்மா மார்க்கெட்டுக்கு போய் இருந்ததால் நைனிதா தானே டீயை கலந்து கப் அன் ஸாசரில் ஊற்றி எடுத்து வந்தாள்.

சிதம்பரம் எதையோ யோசித்தபடி நிதானமாய் டீயைக் குடிக்கையில் அப்பாவிடம் பேச இதுதான் சரியான நேரம் என்று தோன்றியது.

''சரணை நீங்க கொஞ்சம் கவனிக்கணும்ப்பா. அவன் படிப்போ, சிநேகிதமோ சரியானதா இல்லேன்னு நினைக்கிறேன். இந்த சமயத்தில் நாம அவன் மேல் கவனம் வெக்கலைன்னா அவன் திசைமாறிப் போக வாய்ப்பிருக்கு.''

சிதம்பரத்தின் முகத்தில் சடாரென ஒரு கோபம் தெரிந்தது.

''இதையெல்லாம் கவனிக்காம உங்கம்மா தினமும் வீட்டில் என்ன செய்கிறாள்? இர்ரெஸ்பான்சிபிள் உமன்.



எனக்கு தினம் எத்தனையோ வேலை இருக்கும். வீட்டில் இருக்கும் பெண், பிள்ளைகளை கவனிக்க வேண்டாமா?''

''அப்பா, சரண் அம்மாவின் பேச்சை பொருட்படுத்துவதேயில்லை.''

''எப்படி பொருட்படுத்துவான்? உங்கம்மா அடங்கியிருந்தால் தானே பசங்களுக்கு அவள் மீது மரியாதை இருக்கும்.''

அப்பா.. ப்ளீஸ்...'' தயக்கத்துடன் குறுக்கிட்டாள் நைனிதா. ''நீங்களோ அம்மாவோ ஒருத்தரை ஒருத்தர் குறை சொல்ற விஷயமில்லை இது. சரியான சமயத்துல கவனிக்கலேன்னா அவன் எதிர்காலம் வீணாயிடும்,'' மேற்கொண்டு அவள் பேசுமுன் அம்மாவின் கார் வந்து வாயிலில் நின்றது.

நைனிதா பேச்சைத் தொடராமல் காலிகப்பை சிங்கில் போட்டு விட்டு திரும்புகையில் அம்மாவின் குரல் உரக்க கேட்டது.

''எப்பவும் என்னையே குறை சொல்றீங்களே. அவன் எனக்கு மட்டும்தான் மகனா? நீங்க கவனிக்க மாட்டீங்களா? நீங்க நேரத்தோட வீட்டுக்கு வந்தாத்தானே பசங்களுக்கு அந்த பழக்கம் வரும்.''

அப்பா பதிலுக்கு கத்துவதை கேட்டபடியே நைனிதா தன் அறைக்கு சென்றாள். இவர்களுக்கு இன்றைய சண்டையை நாமே தொடங்கி வைத்து விட்டோம் என்று அலுப்பாக இருந்தது. உடையை மாற்றி படுக்கையில் சரிகையில் போன் மணியடித்தது.

போனை எடுத்த நைனிதா, ''ஹலோ அங்கிள் எப்ப இந்தியா வந்தீங்க?'' என்றாள் உற்சாகத்துடன்.

''டைட் டின்னருக்கு கண்டிப்பா வந்துடுங்க'' என்று போனை வைத்துவிட்டு கீழே இறங்கி சென்றாள். தங்கள்

சண்டையை தற்காலிகமாய் நிறுத்திவிட்டு அம்மாவும் அப்பாவும் அவரவர் அறைகளில் முடங்கி விட்டிருந்தனர். நைனிதா சாந்தம்மாவிடம் விருந்து சமையல் செய்யச் சொன்னாள். அந்த வீட்டிற்கு விருந்தினர் வருவதே அபூர்வம் என்பதால் ''யார் பாப்பா வர்றாங்க?'' என்றாள் சாந்தம்மா ஆர்வத்துடன்.

''கேசவன் அங்கிள் அவருடைய பிஸினஸ் விஷயமா வர்றார்'' என்றாள் நைனிதா.

கேசவன் அவர்களுக்கு தூரத்து சொந்தம்தான் என்றாலும் சொந்தம் விட்டுப் போகாமல் பற்றிக் கொண்டிருப்பவர்.

நைனிதாவின் சிறுவயதில் இவர்கள் வீட்டுக்கருகிலேயே கேசவன் குடும்பத்தினர் வசித்தார்கள். அவர்களுக்கு ஒரே மகன்தான். அதனால் அவருக்கும் அவர் மனைவிக்கும் நைனிதாதான் செல்லப் பெண்ணாக இருந்தாள். நைனிதா கல்லூரியில் படிக்கும் சமயம் அவர் மகனுடன் ஸ்வீடன் கிளம்பிச் செல்லவும், நைனிதா மிக தனிமையை உணர்ந்தாள். அடிக்கடி கேசவன் குடும்பத்தினர் அவளுடன் போனில் பேசுவார்கள். இந்தியா வரும் போதெல்லாம் வீட்டுக்கு வராமல் போகமாட்டார்கள்.

இரவு ஒன்பதுமணி வாக்கில் வந்த கேசவனைப் பார்த்ததும், ''அங்கிள்'' என்று ஓடிவந்து கைகளைப் பிடித்துக் கொண்ட நைனிதா அவர் கண்களுக்கு குழந்தையாகவே தெரிந்தாள்.

''வாங்க'' என்று வரவேற்ற கலாவதி மரியாதையுடன் ஒதுங்கி நின்றாள்.

என்ன பேசுவதென்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்த சரணைப் பார்த்த கேசவன், ''நம்ம சரண் ரொம்ப வளர்ந்துட்டானே! ஆளே அடையாளம் தெரியல'' என்றார் வியப்புடன்.



அவனுக்காக அவர் வாங்கி வந்த கிப்ட் பார்சலை கொடுத்ததும், வாங்கிக் கொண்டு ''தேங்க்யூ அங்கிள்'' என்று நழுவினான் சரண்.

கேசவனும் நைனிதாவும் சாப்பிட அமர்ந்தனர். ''சிதம்பரம் இன்னும் வரலையாம்மா?'' என கேசவன் கலாவதியிடம் கேட்டதும் ''அவர் என்னிக்கு சீக்கிரம் வந்திருக்கிறார்?'' என்றாள் கலாவதி.

மேற்கொண்டு அவள் ஏதும் பேசத் தொடங்கும் முன் ''ஆன்ட்டி எப்படி இருக்காங்க அங்கிள்? கௌசிக் நலமா?'' என கேசவனிடம் பேசத் தொடங்கினாள் நைனிதா.

அப்பா வரும்வரை கேசவனிடம் பேசிக் கொண்டு அமர்ந்திருந்த நைனிதா சிதம்பரம் வந்ததும் அவர்களை பேசவிட்டு விட்டு தன் அறைக்கு வந்தாள்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் தயாராகும்போது யாரோ அறைக் கதவைத் தட்டினார்கள். திறந்த போது கேசவன் நின்றிருந்தார்.

''குட் மார்னிங் மை சைல்ட்.. நீ பாட்டுக்கு வழக்கம் போல காலேஜுக்கு கிளம்பிப் போயிடாதே! நான் இங்கிருக்கும் ஒரு வாரத்துக்கு நீதான் எனக்கு கம்பெனி குடுக்கணும். காலேஜுக்கு லீவ் போடுவியோ இல்ல ரிசைன் பண்ணுவியோ அது உன்னோட இஷ்டம். இன்னும் ஏழுநாள் இந்த கிழவன் கூடத்தான் சுத்தியாகணும்.''

''அங்கிள் நீங்களா கிழவன்? கௌசிக்கோட அண்ணா மாதிரியில்ல இருக்கீங்க?'' என்றாள் நைனிதா.

''ஓ... அப்படின்னா இந்த இளைஞனோட சுத்தறதில உனக்கு ஆட்சேபணை இல்லேன்னு சொல்.''

''இல்லை'' எல்'று தலையசைத்தாள் நைனிதா. ஒவ்வொரு முறையும் கேசவன் இவர்களுக்காக நாட்களை

ஒதுக்கிக் கொண்டு கைநிறைய பரிசுப் பொருட்களுடன் ஓடி வருவார். சிறுவயதிலிருந்து ஏற்பட்டுப் போன பிரியத்தை தவிர அவர் இங்கு வரக் காரணமே இல்லை என்று அவளுக்கு நன்றாகத் தெரியும்.

"நைனிதா இன்னும் ஒன் அவர் இருக்கு நீ தயாராக" என்றதும்.

"பத்துநிமிடத்தில் வந்துவிடுகிறேன் அங்கிள்" என்றாள் நைனிதா.

"குட்" என்றபடி தன் ப்ரீப்கேசுடன் சென்று காரில் அமர்ந்தார் கேசவன். சில நிமிடங்களில் நைனிதா வந்துவிட செல்லும் வழியில் கேசவன் பேசிக் கொண்டே வந்தார்.

"உங்கம்மாவும் அப்பாவும் உன்னைப் பத்தி ரொம்ப கவலைப்படறாங்க நைனிதா."

"என்னைப் பத்தியா? நான் உண்டு, என் வேலையுண்டுன்னு இருக்கேன். எதுக்காக என்னைப் பத்திக் கவலைப்படணும்?"

"கல்யாண வயசில பொண்ணை வெச்சிருக்கிறவங்களுக்கு கவலை இருக்காதா? நீ கல்யாணம் வேண்டாம்னு சொல்றேன்னு ரொம்ப கவலைப்படறாங்க. இந்த ஒரு வாரத்தில் உன்னை ஒத்துக்க வெக்கறதா சொல்லியிருக்கேன்."

"அங்கிள் நீங்க ஒருவாரம் தங்க ஒத்துகிட்டது என் மீதுள்ள பிரியத்தினாலன்னு நினைச்சேன்."

"கல்யாணம் பண்ணிக்கச் சொல்றதால உன் மீது பிரியம் இல்லைன்னு அர்த்தமா நைனிதா?"

நைனிதா பதில் பேசாமல் அமர்ந்திருக்க, கேசவன் சொன்னார்.



"பெத்தவங்களுக்கு பிள்ளைங்க மேல ஏற்படற கவலை நியாயமானதில்லையா. அவங்க சொல்றதைக் கேட்டால்..."

அவர் முடிக்கும் முன் குறுக்கிட்ட நைனிதா "அங்கிள் அப்பா அம்மா ரெண்டுபேரும் சேர்ந்து உங்ககிட்ட என்னைப் பத்திக் கவலைப்பட்டாங்களா?" என்றாள்.

"இல்லை... எங்கிட்ட தனித்தனியாகத்தான் வந்து பேசினாங்க."

"இதுதான் அங்கிள் பிரச்சனை. நாங்கள் ஒரே கட்டிடத்தில்தான் வசிக்கிறோம். ஆனால் ஒரு குடும்பமாக வாழவில்லை. இருக்க இடமும், உடுக்க உடையும் மட்டும் கிடைச்சா போதாது. பிள்ளைகளுக்கு பெற்றோரிடமிருந்து அன்பும் அனுசரணையும் வேண்டும். அடிபட்டு வரும் போது தாங்கிக் கொள்ளவும், தவறு செய்யும்போது கண்டிப்புடன் கூடிய கவனமும் வேண்டும். இதெல்லாம் எதுவுமே கிடைக்காத இந்த வீட்டில் வளர்ந்த நான் திருமண விஷயத்தை சந்தோஷமாய் எதிர்கொள்வேன் என்று எப்படி நீங்கள் எதிர்பார்க்கலாம்?"

"நைனிதா திருமணவாழ்க்கை வெற்றியடைவது சம்பந்தப்பட்டவர்களின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. குடும்பப் பின்னணியால் அதிர்ஷ்டம் வருவதில்லை. நானும் ஆன்ட்டியும் எங்கள் திருமணத்தின் போதுதான் முதன் முதலாய் பார்த்துக் கொண்டோம். நன்றாகத்தான் இருக்கிறோம். கௌசிக் ஒரு ஸ்வீடிஷ் பெண்ணை காதலித்து மணந்து கொண்டான். அவனும் சந்தோஷமாகத் தான் இருக்கிறான். நைனிதா நீ ஒரு டீச்சர். நீயே சொல். அடிக்கடி ஒரு மாணவன் பெயிலானால் அவனை தேர்வே எழுத வேண்டாம் என்று சொல்வாயா? வாழ்க்கையை பரிட்சித்துப் பார்த்துதான் தெரிந்து கொள்ள வேண்டும்."

"பரீட்சையில் பெயிலானால் அடுத்தவருடம் எழுதிக் கொள்ளலாம் அங்கிள். மணவாழ்க்கையில் தோத்துப் போனால் வாழ்க்கை விரயமாகிவிடும். நான் பரிட்சித்துப் பார்க்கிற மூடில் இல்லை."

கேசவனுக்கு வருத்தமாக இருந்தது. நல்ல புத்திசாலித்தனமான குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழத் தெரியாமல், அவர்கள் மனதை காயப்படுத்தியிருக்கும் சிதம்பரத்தின் மீதும் கலாவதி மீதும் கோபம் வந்தது. இவர்களின் தவறால் நைனிதாவின் வாழ்க்கை கேள்விக்குறியாக விட்டுவிடக்கூடாது என மனதினுள் முடிவு செய்தார் கேசவன்.

நைனிதாவுக்கு துக்கமும் கோபமும் ஒன்றாய் வந்தது. தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் வாழத் தெரியாதவர்கள் எப்படி எனக்கொரு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தர முடியும்? தன் பெற்றோரைப் போல வேஷதாரிகள் யாரும் இல்லை என்று தோன்றியது. தங்கள் சந்தோஷமே திருமணத்தால் போய்விட்டதாக கருதும் அவர்கள் அந்த பந்தத்திலிருந்து முறித்துக் கொள்ளவும் துணிய மாட்டார்கள். ஆயுசுக்கும் தங்கள் நடிப்பால் வெளி உலகை ஏமாற்றிக் கொண்டே இருப்பார்கள். தங்கள் மகன் பாதை மாறிப்போவதையும், மகள் முகத்தில் சிரிப்பையே மறந்து போய் வளைய வருவதையும் பற்றி அவர்களுக்கு கவலையில்லை. மகள் திருமணத்தின் மூலமாய் பெரிய இடத்தில் சம்பந்தம் செய்து கொண்டு தங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொள்வது பற்றிதான் அவர்களுக்கு கவலை.

நைனிதாவும் சட்டென்று அன்று மெண்டல் ஹாஸ்பிட்டலில் சந்தித்த டாக்டரின் நினைவு வந்தது. அவன் மிக உற்சாகமாக எப்பவும் சிரித்துக் கொண்டே இருந்தான்.



சாதாரண விஷயத்தையும் புன்னகையுடனே பேசினான். அவன் குடும்பம் சந்தோஷமானது என்பது அவன் முகத்தில் தெரிந்தது. கிளம்பும்போது சிரித்தபடியே அவன் பெயரைக் கேட்ட சம்பவம் நினைவு வர தானாய் இதழ்கள் சிரிக்க முற்படுகையில் கேசவன் "இறங்குமா" என்றார்.

நைனிதா சட்டென்று உணர்வு பெற்றவளாய் இறங்கினாள். டிரேட் சென்டரில் ஏற்றுமதியாளர்களின் கண்காட்சி நடப்பதால் வழியெங்கும் பேனர்களும், கம்பெனிகளின் விளம்பர போஸ்டருமாய் நடக்கும் வழியெங்கும் கோலாகலமாக இருந்தது. நைனிதா சுற்றிலும் வேடிக்கை பார்த்தபடி நடந்தாள். கேசவன் நைனிதாவை ஒரு எக்ஸிபிஷன் ஹாலுக்கு அழைத்துச் சென்று தன் வாடிக்கையாளரை அறிமுகப்படுத்தினார்.

"இவர் மிஸ்டர் பாலசுந்தரம். இந்தியாவிலிருந்த போது நான் இவரிடம் துணி வாங்கி விற்பனை செய்து கொண்டிருந்தேன். இப்போது இவர் மகன்கள் ரெடிமேட் ஆடைகளாக அனுப்பி வைக்கிறார்கள். கௌசிக் ஸ்வீடனிலும் நான் நார்வேயிலும் விற்பனை செய்கிறோம். இரண்டாவது தலைமுறையாக எங்கள் தொழில் தொடர்பு நீடித்திருக்கிறது. இது அவாது முதல் மகன் மிஸ்டர் ராஜா. இவர் இரண்டாவது மகன் மிஸ்டர் கார்த்திக்."

பாலசுந்தரம் எல்லோருடனும் கை குலுக்க, நைனிதா வணக்கம் தெரிவித்தாள். "இவள் நைனிதா. என் தம்பி பெண். என் வளர்ப்பு மகளும் கூட" என நைனிதாவை அவர்களுக்கு கேசவன் அறிமுகப்படுத்தினார்.

மரியாதைக்காக சிறிது நேரம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த பின்னர் கேசவன் நைனிதாவிடம் சொன்னார். "நைனிதா நாங்கள் தொழில் விஷயமாய் பேசப்

போகிறோம். உனக்கு போர் அடித்தால் எழுந்து போய் இந்த ஸ்டாலை சுற்றிப்பார். இங்கிருக்கிற உடைகளை எல்லாம் அணிந்து பார்த்து உனக்கு பிடித்ததை எடுத்துக் கொள். அப்புறம் நேரம் போவதே தெரியாது உனக்கு" கேசவன் சிரிக்கவும் விளையாட்டாய் அவரை முறைத்து விட்டு நைனிதா எழுந்தாள்.

காட்டனில், சில்க்கில் குர்த்தாக்கள், பேண்ட், இரவு உடைகள், பெட்ஷீட் தலையணை உறைகள், புடவைகள் என்று துணிவகைகள் நிறைய இருந்தது. விலையும் மிக அதிகமாகத்தான் இருந்தது. அங்கிருந்த பணியாள், "இவையெல்லாம் ப்யூர் சில்க்கில், ப்யூர் காட்டனில் தயாராகுபவை. ஹேண்ட் ஒர்க் என்பதால் விலை கூட இருக்கும். வெளிநாட்டினர் இதுபோல கைவேலைப்பாடு செய்த டிசைன்களைத்தான் மிகவும் விரும்புகிறார்கள்" என்றான்.

ஒரு ரோஸ்நிற குர்த்தாவை பிரித்து தோள்மீது வழிய விட்டபடி எதிரே இருந்த ஆளுயரக் கண்ணாடியில் பார்த்தாள் நைனிதா.

அந்த ரோஜா நிற பட்டு அவளுக்கு மிகவும் பொருத்த மாக இருப்பதாக தோன்றியது. பார்த்துக் கொண்டிருக்கையி லேயே கண்ணாடியில் அவளுக்கு பின்னால் நுழைவாயிலும், வாயிலின் வழியே உள்ளே வந்து கொண்டிருக்கும் டாக்டர் ரோஹித்தும் தெரிந்தார்கள்.

காரில் வரும்போதுதானே இவனைப் பற்றி நினைத் தோம் என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ரோஹித் சுற்றிலும் பார்வையை ஓட்டியபடி வந்து கொண்டிருந் தான். நடையில் வேகம் இருந்தாலும் டென்னிஸ் ஆடு வனின் கிரேஸ் தெரிந்தது. அவளால் பார்வையை



விலக்கிக் கொள்ள முடியவில்லை. அருகில் வந்த ரோஹித்திடம் அவளை எதிர்பாராமல் சந்தித்த சந்தோஷம் வெளிப்படையாக தெரிந்தது. முகம் மலர்ந்து வரிசைப் பற்கள் பளிரிட்டன. அவளிடம் எதுவும் பேசாமல் அவ ளுக்கு அவளுக்கு பின்னால் தேடவும் "என்ன தேடறீங்க?" என்றாள் நைனிதா.

"இல்ல உங்களுக்கு இறக்கை எதும் இருக்கான்னு பார்க்கிறேன். எதிர்பாராத இடத்துல எதிர்பாராத நேரத்துல வந்து நிக்கறீங்க."

பதிலுக்கு புன்னகைத்த நைனிதா, "என் பெயரையே தெரிந்து கொள்ளாதவங்களுக்கு இறக்கை எப்படி கண் ணுக்கு தெரியும்?" என்றாள்.

"எனக்கு பெயரை தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமே இல்லேன்னு தோணுது."

"பின்னே, அன்னிக்கு சொன்ன மாதிரி மென்டல் ஹாஸ்பெட்டல்ல சந்தித்த பெண்ணேன்னு கூப்பிடப் போறீங்களா?"

அவன் மறுப்புடன் தலையசைத்தான். "இந்த ரோஸ் நிற உடையை நீங்க மேலே போட்டிருக்கும் போது தோணுது, ஒரு ரோஜாவை என்ன பெயர் சொல்லி அழைத்தால் என்ன? அதன் அழகும் வாசமும் குறைந்து விடவா போகிறது?"

நைனிதா மனதின் படபடப்பை காட்டிக் கொள்ளாமல் சிரித்தாள்.

"ஹே.. இது ரொம்ப பழசு ஸார். ஷேக்ஸ்பியர் இதை யெல்லாம் எப்பவோ சொல்லிட்டார்."

"அப்படியா? அப்ப இப்படி செய்தால் என்ன?" என் றான் ரோஹனித் சீரியசாய்.

"எப்படி?"

"நாம தினமும் சந்திக்கலாம். உங்களைப் பார்க்கிறப்ப எல்லாம் எனக்கு புதுசா ஏதாவது கற்பனை வரும்."

"மெடிக்கல் சையன்சை விட்டுவிட்டு எப்ப லிட்ரேச்சருக்கு போனீங்க?"

"அழகான பெண்ணைப் பார்க்கும் போது ஏற்படும் ஹார்மோன் சுரப்பினால் கவிதை எழுதத் தோணும்னு மெடிக்கல் சையன்ஸ்தான் சொல்லுது."

"எந்த அழகான பெண்ணைப் பார்த்தாலும் கவிதை எழுத ஆரம்பிச்சீங்கன்னா அது ஹார்மோன் வேலையில்ல மிஸ்டர். அப்பட்டமான ஜொள்ளு!"

"சேச்சே! ஐ யெம் வெரி ஹானஸ்ட். எனக்கு ஒரே ஒரு பெண்தான் கவிதையா, பூவா, ஓவியமா தெரியறா."

"அப்ப அவளை நீங்க ஒரு மனுஷியாவே நினைக்கலேன்னு சொல்லுங்க."

இருவரும் வாய்விட்டு சிரித்தனர். முதன்முறையாக அவனது இயல்பான பேச்சையும் சிரிப்பையும் ரோஹித் ஆர்வத்துடன் பார்ப்பதை கண்ட நைனிதா பேச்சை மாற்றினாள்.

"இந்த சென்டரில் ஏதாவது டாக்டர்ஸ் கான்பரன்ஸ் நடக்கிறதா? அதற்காக வந்தீர்களா?"

"ஏன் நான் என் வேலை சம்பந்தப்பட்டவை தவிர வேறு எதற்காகவும் எங்கும் வரக் கூடாதா என்ன?"

"இது ஒரு துணிக்கடை கூட இல்லை. வியாபாரிகள் சம்பந்தப்பட்ட கண்காட்சியில் உங்களுக்கு என்ன வேலை?"



"உங்களுக்கு இங்கே என்ன வேலைன்னு பார்க்க நான் வந்திருக்கலாம். நீங்க செலக்ட் பண்ணின உடை உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டது போல் இருப்பதை பாராட்டக் கூட வந்திருப்பேன்."

ஒரு டாக்டராக இருந்து கொண்டு அவன் பொறுப் பற்று பேசுவது நைனிதாவுக்கு மெல்லிய நமைச்சலை ஏற்படுத்தியது. அதை சொல்லிவிட வாயைத் திறக் கையில் "ஹலோ ரோஹித்" என்றபடி கேசவன் வந்தார்.

"ரோஹித் பாலசுந்தரத்தின் மூன்றாவது மகன். டாக்டராக இருக்கிறான்" என்றார் நைனிதாவிடம்.

"நான் வந்ததற்கான காரணம் சரிதானே!" என்றான் ரோஹித் குறும்பு சிரிப்புடன்.

"அப்ப நீங்களும் ஒரு ஓனர்னு சொல்லுங்க" என்றாள் நைனிதா.

"ஓனர்ங்கிறது பெரிய வார்த்தை. அப்பாவும் அண்ணன்களும்தான் தொழிலைப் பாத்துக்கறாங்க. நான் இன்னிக்கு சும்மா ஒரு உதவிக்காக வந்தேன்," என்றான் ரோஹித்.

கேசவன் மேலும் இரண்டு நிமிடம் ரோஹித்திடம் பேசிவிட்டு கிளம்பினார்.

"நைனிதா போகலாமா?" என அவர் முன்னால் நடந்ததும் ரோஹித் சடாரெனத் திரும்பிப் பார்த்தான்.

கண்கள் குறுகுறுக்க, உதட்டில் சிரிப்பு விரிய "என் காதில் எந்த பெயரும் விழவில்லை" என்றான் அவளிடம்.

"விழுந்தாலும் தப்பில்லை" என்றபடி அவள் கேச வனைப் பின் தொடர "பை நைனி" என்றான் ரோஹித் உற்சாகத்துடன் கையசைத்து.

# 4

நைனிதாவுக்கு அன்று முழுவதும் மனம் உற்சாகமாக இருந்தது.

கண்ணாடியில் பார்த்தபோது முகத்தில் மலர்ந்திருந்த புன்னகை அதற்கு தனி மெருகை கொடுத்திருந்தது. சில நிமிடங்கள் வாய்விட்டு சிரித்ததற்கே மனம் இத்தனை உற்சாகம் கொள்ளுமானால் சந்தோஷமான குடும்ப சூழலில் வாழ்பவர்களின் வாழ்க்கை எத்தனை மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்று தோன்றியது.

இரவில் கேசவனும் அவளும் சாப்பிடுகையில் அன்று போய் வந்த எக்ஸிபிஷனைப் பற்றி பேசினார்கள்.

''அங்கிள் ஸ்காண்டிநேவிய நாடுகளில் மற்ற வெளி நாடுகளை விட இந்தியர்கள் குறைவாகத்தானே இருப்பார்கள்? நம் பாரம்பரிய உடைகள் அங்கே எந்த அளவு விற்பனையாகும்? துணியாக வாங்கி அந்த நாட்டு ஸ்டைலில் தைத்து விற்றாலாவது பரவாயில்லை.''

''என்னம்மா இப்படி கேட்டுவிட்டாய்? நார்வே தலைநகர் ஆஸ்லோவில் இருக்கும் 'க்ரோண்ட் லாண்ட்' என்ற இடத்தை லிட்டில் ஏசியா என்றுதான் சொல்லுவார்கள். இலங்கை தமிழ் குடும்பங்கள் நிறைய அங்கிருக்கின்றன. இந்தியர்களும், பாகிஸ்தானியரும் நடத்தும் மளிகை கடைகளும், ஹோட்டல்களும் நிறைய இருக்கின்றன. அங்கு விற்பது பூராவும் இந்தியசாமான்தான். இந்த மாதிரி உடைகள், பப்படம், ஊறுகாய், சினிமா கேசட்டுகள் கிடைக்கும்.''



''ஐரோப்பிய கண்டத்தில் இருக்கும் மற்ற நாடுகளை விட நார்வே வித்தியாசமானது இல்லையா அங்கிள்?''

''நார்வே அமைதியை விரும்பும் நாடு நைனிதா. உலகின் எந்த மூலையில் அத்துமீறல்கள் நடந்தாலும் நார்வே மக்கள் மனிதாபிமானத்துடன் குரல் கொடுப்பார்கள். உலகின் சமாதானத் தூதுவன் நார்வே. சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் அங்கு எண்ணெய் வளம் கண்டு பிடிக்கப்பட்டபின்தான் நார்வே பணக்கார நாடாகியது. ஆனால் அந்த பணத்தை தன் நாட்டு மக்களுக்காக மட்டும் செலவழிக்காமல் உலகில் தேவை இருக்கும் இனமக்களுக்கெல்லாம் பகிர்ந்து கொடுக்கிறது. உலகில் எந்த மூலையிலிருந்தும் அகதிகளாக வருபவர்களுக்கு நார்வேயில் கைச்செலவுக்கு பணமும், வேலையும் எளிதாக கிடைத்துவிடும். நம் நாட்டு பிரஜைகளுக்கு கிடைக்காத வசதிகள் அந்நாட்டு மக்களுக்கு கிடைக்கிறது. நானும் ஆன்ட்டியும் ரொம்ப நாட்களாக உன்னைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். நீதான் படிக்கணும் எக்ஸாம்னே சொல்லிட்டு இருந்த. இப்ப படிப்பு முடிச்சப்புறமும் கல்லூரிக்கு போய்ட்டு இருக்க'' என்று சிரித்தார் கேசவன்.

''ஆஸ்லோ யுனிவர்சிட்டியில் இரண்டு மாத படிப்புக்கு விண்ணப்பிக்கலாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் அங்கிள். ஸ்காலர்ஷிப் கிடைத்தால் வருவேன்.''

''கண்டிப்பாய் கிடைக்கும். மாணவர்களுக்கு நிறைய சலுகைகள் உண்டு. அங்கே ஆன்ட்டியும் நானும் உன்னை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்'' என்றார் கேசவன்.

அடுத்தநாள் கேசவனும் நைனிதாவும் அவரது குடும்பத்திற்கு வாங்கிச் செல்ல பொருட்கள் வாங்கினார்கள்.

ஒரு நண்பர் கேட்டிருந்த செட்டிக்கரை ஒரிஜினல் காஞ்சி புரம் பட்டுப்புடவை வாங்க காஞ்சிபுரம் வரை போய் வந்தார்கள்.

மறுநாள் சிதம்பரம் குடும்பத்தினருடன் எங்காவது போய் வர கேசவன் ஆசைப்பட்டார். மகாபலிபுரம் வரை போய் விட்டு, மாயாஜாலில் படம் பார்த்துவிட்டு இரவு டின்னர் சாப்பிட்டு விட்டு அரைநாளில் திரும்பி விடலாம் என்று கேசவன் அழைத்த போது, 'ஆபீசில் முக்கியமான ஆடிட் டிங் இருப்பதாக சிதம்பரம் அவசரமாக கிளம்பிப் போனார்.

"அவருக்கு எப்பவுமே அப்படித்தான். குடும்பத்துடன் இருக்கவே பிடிக்காது" கலாவதி கோபத்துடன் தன் அறைக்கதவை அறைந்து சாத்த, சரண் தனக்கு பரீட்சை இருப்பதாக கூறி நழுவிக்கொண்டான். கேசவன் சங்கடத் துடன் நைனிதாவைப் பார்க்க, அவள் "இது வழக்கமாய் நடப்பதுதான் அங்கிள்" என்றாள். "எல்லோரும் சேர்ந்து கிளம்பியிருந்தால்தான் அதிசயப்பட வேண்டும். நாம் போகலாம்" என்றபடி அவருடன் நடந்தாள்.

கேசவனின் குடும்பத்தில் விடுமுறை நாட்களில் யாரும் வீடு தங்க மாட்டார்கள். கேசவனும் கங்காவும் நார்வேயில் இருக்க, கௌசிக்கும் அவன் மனைவியும் ஸ்வீடனில் இருந்தார்கள். அடிக்கடி அவர்கள் நார்வே வந்துவிடுவார்கள். பேச்சும் சிரிப்புமாய் வீடு கலகலப்பாய் இருக்கும். அவரது மருமகள் ஸாரா ஏதாவது ஜோக்கடித்து விட்டு நட்புடன் மாமனாரின் தோளில் கைபோட்டு சிரிப்பாள். அவர்கள் இருக்கும் வரை வீடு இரைச்சலாக இருக்கும். சிதம்பரத்தின் வீட்டில் நிலவிய அமைதி அவரையே கலக்கமடைய செய்யும் போது நைனிதாவின் னநிலையை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. ரமாய் ஒரு நல்ல பையனை மணந்து செட்டிலாகி



விட்டால் அவளது மனோநிலை மாறிவிடும் என்று நினைத்தார். திடீரென எக்ஸிபிஷனில் சந்தித்த பாலசுந் தரத்தின் மகன் நினைவுக்கு வந்தான்.

"நைனிதா அன்னிக்கு டிரேட் சென்டரில் ரோஹித்னு ஒரு பையனைப் பார்த்தோமே, அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"என்ன நினைக்கணும்?"

"இல்ல சும்மா பேசிட்டிருந்தியேன்னு கேட்டேன். நல்ல குடும்பம். நல்ல பையன்."

அங்கிள் வலைவீசுகிறார் என்ற நினைவில் நைனிதா வுக்கு சிரிப்பு வந்தது.

"நீங்க எங்க வர்றீங்கன்னு புரியுது அங்கிள். எத்தனை முறை சொன்னாலும் இப்ப கல்யாணம் செய்து கொள்கிற மனநிலையில் நான் இல்லை. அது மட்டுமில்லாமல் அடுத்த மாதம் நான் நார்வே வரப்போகிறேன்."

"நிஜமா முடிவே பண்ணிட்டியா?" என்றார் கேசவன் வியப்புடன்.

"அப்போ நீங்க கூப்பிட்டதெல்லாம் சும்மாவா?"

"சேச்சே.. நீ ஒரு கல்யாணம் பண்ணிட்டு ஹனி மூனுக்கு வந்தா எனக்கு இன்னும் சந்தோஷமா இருக்கும்."

நைனிதாவுக்கு கேசவன் இருந்த ஒரு வாரமும் உற்சாகமாய் கழிந்தது. அவர் கிளம்பும் நாள் நெருங்கியதும் தன்னுடன் பேசுவதற்கு இருந்த ஒரே துணையும் பிரிந்து போகப் போவதாய் வருத்தம் ஏற்பட்டது. அதை அவரிடம் சொன்னபோது, "அதனால்தான் புதிதாக பேசவும் சிரிக் கவும் வாழ்நாள் முழுதும் துணையை ஏற்படுத்திக்கொள் என்கிறேன்" என்றார்.

"அவன் சிரிப்பதற்கு பதில் சிறிப்பாய்ந்தால்? துணையாய் நிற்பதற்கு பதில் தொல்லையாய் மாறினால்? அவனிடம் என்னை இழந்து. பிள்ளை பெற்ற பிறகு, குழந்தையின் எதிர்காலத்தையும் சமூக விமர்சனங்களையும் தனியே எதிர்கொள்ள பயந்து ஒரே வீட்டில் போலியாய் வாழும் வாழ்க்கை ஆத்மதுரோகம். நான் அதை செய்ய மாட்டேன்" என்றாள் நைனிதா வெறுப்புடன்.

கேசவன் அவளை வருத்தத்துடன் பார்த்தார். "உன் வயது பெண்கள் ஆர்வத்துடன் எதிர்கொள்ளும் திருமண விஷயம் உன்னை எவ்வளவு மோசமாக பாதித்திருக்கிறது என்று எனக்கு கவலையாக இருக்கிறது நைனிதா. உன் பெற்றோர் மாதிரி சில விதிவிலக்கான தம்பதிகள் இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் விதிவிலக்குகள் எப்போதுமே உதாரணங்கள் ஆகாது."

"எக்ஸாம்பிளோ, எக்ஸப்ஷனோ, நான் ரிஸ்க் எடுக்க தயாராய் இல்லை."

இரவு ப்ளைட் என்பதால் கேசவன் கிளம்பும் முன் ஒரு விருந்துக்கு போக வேண்டியிருந்தது. அவருடன் செல்லும்போது நைனிதா சொன்னாள். "இந்த ஒருவாரமா ஊர் சுத்தி, நல்ல சாப்பிட்டு நான் ரொம்ப சோம்பேறி ஆயிட்டேன் அங்கிள். நாளை காலேஜுக்கு போறதுன்னா சிரமமாய் இருக்கும் எனக்கு."

"எதுக்கு சிரமப்படணும்? உனக்கு என்ன இல்லை? துக்காக போகிறாய்?" என அவர் படபடக்கவும், "அங்கிள் ளீஸ்... பழைய கதை வேண்டாம்" என்றாள் நைனிதா.

"என்ன இருந்தாலும் இந்த ஒருவாரத்தில் உன்னை ன்வின்ஸ் செய்துவிடலாம் என்று நினைத்திருந்தேன். து நடக்காதது வருத்தமாய்தான் இருக்கிறது" என்ற சவன் வேறு விஷயம் பேசத் தொடங்கினார்.



கார் ஒரு அமைதியான குடியிருப்பு பகுதியின் அழகிய வீட்டின் முன் நின்றது. கேசவனுடன் இறங்கி நைனிதா உள்ளே சென்றபோது "வாங்க" என்று கைகூப்பி வரவேற்றனர் பாலசுந்தரம் குடும்பத்தினர். ரோஹித் வீட்டிற்கா வந்திருக்கிறோம் என்று நைனிதாவுக்கு திகைப்பாக இருந்தது.

பாலசுந்தரம் தன் மனைவியையும், மருமகள்களையும் நைனிதாவுக்கு அறிமுகப்படுத்தினார். சிரிப்புடன் அவர்கள் நின்றிருந்ததைப் பார்க்கையில் எப்படி சுலபமாக சிரிக்கிறார்கள் இவர்களெல்லாம் என்று நினைத்தாள் நைனிதா. ரோஹித்தின் முகத்தில் தெரியும் நிரந்தர சிரிப்பிற்கு காரணம் இந்த குடும்பம்தான் என்று புரிந்தது.

சமையலறையிலிருந்து பாயசத்தின் மணம் வீட்டை நிறைத்தது.

சுவர்களில் வரைந்து மாட்டப்பட்டிருந்த படங்களை நைனிதா பார்த்ததும்,

"அது என் பெரிய மருமகள் சுகுணா வரைந்தது. இந்த பர்பொம்மைகள் சபிதா செய்தது. டோர்ஸ்கீரின் லட்சுமி போட்டது. "இந்த பை, அந்த டேபிள் க்ளாத், தலையணை உறை என வீட்டிலிருந்த பொருட்களை ஒவ்வொன்றாக அவர் பெருமையுடன் காட்டினார். வீட்டினரின் திறமைக்கு இவர் தரும் பகிரங்க விளம்பரம் இது என்று நினைத்தாள் நைனிதா. கார்த்திக்கும் ராஜாவும் கேசவனிடம் பேசிக்கொண்டிருக்க அவள் பாலசுந்தரத்தின் அருகே அமர்ந்திருந்தாள். அவர் பேச்சில் தெரிந்த குடும்பத்தைப் பற்றிய அவரது பாசமும், குடும்ப உறுப்பினர்களுக்கிடையே இருந்த நெருக்கமும் அவள் மனதில் அழுத்தமாய் பதிந்தது.

"சாப்பிடப் போகலாம்" என எல்லோரும் எழுந்தபோது ரோஹித் தன் அண்ணன் குழந்தைகளுடன் மாடியிலிருந்து இறங்கி வந்தான்.

பிரணவ்வை அவன் கைகளில் வைத்து கொஞ்சிக் கொண்டிருக்க, வைஷாலி சித்தப்பாவின் கைகளை பிடித்தபடி குதித்துக் கொண்டிருந்தாள்.

"அப்பாவின் நண்பர் வரப் போவதாக சொன்னார்கள். அது நீங்கள் என்று தெரியாது" கேசவனிடம் மரியாதை நிமித்தம் பேசிய ரோஹித்தின் கண்கள் ஜீன்சிலும் முழுக்கை பனியனிலும் நின்றிருந்த நைனிதாவை புதிய சுவாரஸ்யத்துடன் பார்த்தன.

அங்கிள் ரோஹித்தைப் பற்றி நம்மிடம் பேச ஆரம்பித்திருக்கும் இந்த சமயத்தில் இவன் கண்களில் தெரியும் ஆர்வம் அவளுக்கு புதிய செய்திகளை தெரிவிக்கக் கூடும் என்று நைனிதாவுக்கு தோன்றியது.

சட்டென்று திரும்பி அருகே நின்றிருந்த சபிதாவிடம் பேசியபடியே நைனிதா உள்ளே சென்றாள்.

வட்டமான டைனிங்டேபிளை சுற்றி அமர்ந்து பேச்சும் சிரிப்புமாய் சாப்பிடுகையில் "கேசவனுடன் எனக்கு நாற்பது வருட பழக்கம்" என்றார் பாலசுந்தரம்.

"ஆமாம். நான் இந்தியாவிலிருந்த போது அடிக்கடி சந்தித்துக் கொள்வோம்" என்றார் கேசவன்.

பிறந்ததிலிருந்து சாந்தம்மாவின் சமையலையும், ஹோட்டல் உணவுகளையுமே சாப்பிட்டு பழகியிருந்த நைனிதாவுக்கு வீட்டு சமையலும், குடும்பமாக அமர்ந்து சாப்பிடுவதும் நிறைவாக இருந்தது.

"ஆன்ட்டி இன்னும் கொஞ்சம் பாயசம் போடுங்க. சுகுணா அந்த கூட்டை இப்படி நகர்த்துங்களேன்" என





குழந்தைத்தனமான ஆர்வத்துடன் அவள் சாப்பிடுவதை எல்லோரும் பிரியத்துடன் பார்த்து பரிமாறினார்கள்.

"ஆன்ட்டி இந்த கத்திரிக்காய் வறுவல் புது டேஸ்டா இருக்கே, எப்படி செஞ்சீங்க?" என்று நைனிதா கேட்டதும் லட்சுமி கூச்சத்துடன் புன்னகைத்தாள்.

"உங்க அங்கிள்தான் செய்தார்" என்றாள் கணவனைப் பார்த்தபடி.

ஒரு தண்ணீர் குடிக்கக் கூட சமையலறைப் பக்கம் வந்திருக்காத தன் தந்தையின் நினைவில் நைனிதா "அங்கிள் நீங்க நிஜமாவே சமைப்பீர்களா?" என்றாள் ஆச்சரியத்துடன்.

பாலசுந்தரம் சிரிக்கவே, "அப்பா மட்டுமல்ல. நாங்க மூணு பேருமே சமைப்போம். அம்மாவுக்கு எப்பவுமே அப்பா உதவி செய்யப் போவார். அப்பாவுக்கு உதவ நான், எனக்கு உதவ தம்பிங்கன்னு எல்லோருமே கத்துகிட்டோம்." என்றான் ராஜா.

"அலுவலகம், அது சம்பந்தமான வேலைகளைத் தவிர வீடுதான் எங்க எல்லோருக்கும் பிடித்தமான இடம். டைம் கிடைச்சா வீட்ல இருக்கத்தான் பிரியப்படுவோம்" என்றான் கார்த்திக்.

"ஒரு மனிதன் எங்கே சென்றாலும் எத்தனை வெற்றி களை அடைந்தாலும் அவனது உண்மையான மகிழ்ச்சி நல்ல குடும்பம் அமைவதைப் பொருத்துதான் இருக் கிறது" என்று பாலசுந்தரம் கூறியபோது அந்த வார்த்தை கள் சத்தியமானவை என்ற நினைவில் நைனிதாவுக்கு சாப்பாடு உள்ளே இறங்க முடியாமல் நின்றது.

சாப்பிட்ட பின் ஆண்கள் டிவியை ஓடவிட்டு, அர சியலை அலசியபடி இருக்க "நாம் வீட்டைப் பார்க்கலாம்

வா'' என சுகுணா அவளை மேலே அழைத்துச் சென்றாள்.

நைனிதாவின் வீடு போல அது பிரம்மாண்டமாய், ஐந்து நட்சத்திர ஹோட்டலைப் போல் இல்லாவிட்டாலும் வசதியானதாக இருந்தது. வீட்டில் ஒரு ஜீவன் இருந்தது. தங்கள் அறையை அவளுக்கு காண்பித்த சுகுணா ''கிட்ஸ்-ரூம் என்று தனியாக எங்கள் வீட்டில் இல்லை நைனிதா. இந்த வயதில் நம் கண்பார்வையில் இருந்தால்தான் எங்களுக்கு நிம்மதி'' என்றாள்.

''உண்மைதான்'' என்றாள் நைனிதா. ''அழகான கலர்களில் வண்ணம் பூசப்பட்ட சுவர்களும், சுவற்றிலும் பொம்மைகளும், கார்ட்டூன் படங்களும் உள்ள அறை சுவாரசியமாய் இருக்கும். ஆனால் பெற்றோர் அருகாமையில் இருக்கும் குழந்தைக்குத்தான் பாதுகாப்பு உணர்வு இருக்கும். எதற்கும் ஏங்கிப் போகாத மனசு இருக்கும்'' என்றாள் தன் சிறுவயது நினைவில்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் மேலே வந்த ரோஹித், ''அண்ணி உன்னை அம்மா கூப்பிடறாங்க'' என்றான் சுகுணாவிடம்.

''நைனிதா இரு வந்துவிடுகிறேன்'' என்றபடி சுகுணா கீழே போனதும் நிஜமாகவே இவன் அம்மா கூப்பிட்டிருப்பார்களா? என்ற யோசனையுடன் ரோஹித்தைப் பார்த்தாள் நைனிதா.

''உண்மையாகத்தான் கூப்பிட்டார்கள் நைனி. நான் பொய் சொல்லவில்லை'' என்றான் ரோஹித் அவளைப் புரிந்து கொண்ட சிரிப்புடன்.

அவனது வெட்கமற்ற பார்வையையும், சிரிப்பையும் பார்க்கத் துணியாமல், ''என் பெயர் நைனி இல்ல. நைனிதா'' என்றாள் கம்பீரமாய்.



''உனக்கு ரொம்ப பொருத்தமான பெயர். உன் அழகான கண்களை இதை விட பொருத்தமாய் உன் பெற்றோர் கௌரவப்படுத்தியிருக்க முடியாது. ஆனா நைனின்னா தமிழ்ல கண்ணேன்னு அர்த்தம் இல்லையா? குழந்தைகளைக் கூட செல்லம்மா 'கண்ணே'ன்னு கூப்பிடறதில்லையா?''

''நான் குழந்தையில்ல ரோஹித்'' என்றாள் நைனிதா பட்டென்று.

அவளை முழுதாய் ஒரு நிமிடம் பார்த்த ரோஹித், ''உன்னைப் போய் குழந்தைன்னு யாராவது சொல்லுவாங்களா?'' என்றான் சிரிப்புடன்.

அவன் தன்னை சீண்டுவது புரிந்து கீழே போக திரும்பியவளின் குறுக்கே நின்றான் ரோஹித்.

''என் ரூமைப் பார்க்க வேண்டாமா?''

''ஒரு கட்டைதடியனின் அறையைப் பார்த்து என்ன பிரயோஜனம்?''

''நா எவ்வளவு சுத்தம்னு பாக்கலாமே! சுவரில் பிரிட்னிபியர்ஸ், மல்லிகா ஷெராவத் போட்டோவெல்லாம் இருக்காது. டீபாய் மீது சிகரெட் லைட்டரோ, கட்டிலுக்கடியில் குப்பைத் தொட்டியில் காலி பாட்டில்களோ கிடையாது. வெகு சுத்தம்.''

''ஓ.. நீ ஒரு டீ டோட்டலர்னு நாசுக்கா சொல்றியா? சரி நான் தெரிஞ்சுகிட்டேன். போதுமா?''

''அப்ப சரி'' என்றான் ரோஹித் திருப்தியுடன்.

எப்போதென்றே தெரியாமல் இருவர் பேச்சும் இயல்பாய் ஒருமைக்கு மாறியிருக்க, ''இனியாவது வழியை விடு ரோஹித். உங்க வீட்டின் பின்னால் நான் பார்க்கவேயில்லை'' என்றாள் நைனிதா.

''என்னிடம் பேசுவதை விட உனக்கு வீட்டைப் பார்ப்பதில்தான் பிரியம் போலிருக்கே!'' என்றான் ரோஹித்.

அந்த குரலில் சடாரென நிமிர்ந்து பார்த்தாள் நைனிதா.

''ஒரு வீடு என்பது செங்கல்லும் சிமெண்டும் அல்ல ரோஹித். அதில் வசிக்கும் மனிதர்கள்தான். அந்த வகையில் உங்கள் வீடு மிக மிக அழகாய் இருக்கிறது.''

''ஆனால் எனக்கு தோணுது நைனிதா. நீ வந்த பிறகுதான் இந்த வீட்டிற்கே தனிக் களை வந்திருக்குன்னு.''

''ஏய்.. இது சரியான ஆம்பளை வழிசல்'' நைனிதா சிரிக்கவும், ரோஹித்தும் சிரித்தபடி ஏதோ சொல்ல முயற்சித்த போது இருவரையும் பார்த்தபடியே கேசவன் மேலே வந்தார்.

''நைனிதா கிளம்பலாமா?'' என்றதும் ''சரி அங்கிள்'' என்றபடி அவள் கீழே இறங்கிச் செல்ல ரோஹித்தின் கைகளைப் பற்றியபடி கேசவன் சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்து வீட்டு கீழே சென்றார்.

கேசவனும் நைனிதாவும் கிளம்பிச் செல்கையில் மொத்த குடும்பமும் வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தது. கார் நகர்ந்து திரும்புகையில் நைனிதா திரும்பிப் பார்த்தபோது ரோஹித் இன்னும் காரைப் பார்த்தபடி வாயிலிலேயே நின்றிருப்பது தெரிந்தது. நைனிதா நேராக அமர்ந்து சாலையைப் பார்க்கத் தொடங்கினாள்.

## 5

கேசவன் கிளம்பிப் போய் ஒரு வாரம் ஆகிவிட்டிருந்தது. வழக்கமான வேலைகளில் நாட்கள் எந்த முக்கியத்துவமும் இன்றி நகர்ந்து கொண்டிருந்தன.



அன்று அவர்களது துறை ஹெச்.ஓ.டி சங்கர்ராமனுக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரைப் பார்க்கப் போக வென்று நைனிதா டிரைவரிடம் சொல்லி ஹார்லிக்சும் பழங்களும் வாங்கிவரச் சொன்னாள்.

ஹேன்ட் பாக்கை எடுத்து வைத்துவிட்டு முகத்தை கழுவி சின்ன பொட்டை ஒட்டும் போது இத்தனை நாள் இல்லாததை விட கண்கள் வெகு அழகாய் தெரிந்தன. எல்லாம் ரோஹித்தின் பேச்சால் வந்தது என்று நினைத்த படி கிளம்பிச் செல்கையில், அவன் சொன்னதுபோல் அம்மாவும் அப்பாவும் பெண்ணின் அழகை ரசித்து அழகான கண்கள் எனும் பெயரிட்டிருப்பார்களா? அந்த சமயத்தில் யாராவது இப்படி ஒரு பெயரை சொல்லியிருக்கக் கூடும். சரணும் நானும் பிறந்தது எப்படி விபத்தோ, பெயர் இறப்பு பதிவேட்டிலும் கூட அவன் குறிப்பிடப் படுவது அவனது பெயரால்தான். அந்த பெயரை தன் பெற்றோர்கள் யோசித்து தேர்ந்தெடுத்தார்கள் என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ள அவள் தயாராக இல்லை.

மருத்துவமனை லிப்டில் ஏறி மூன்றாவது மாடியை அடைந்து சங்கர்ராமின் அறைக்கு சென்றபோது சோர்ந்திருந்த அவரது முகத்தில் அவளைக் கண்டதும் ஒரு மலர்ச்சி தெரிந்தது.

''ஹலோ நைனிதா'' என்றார் மிக மெதுவான குரலில்.

''எப்படியிருக்கிறீர்கள்?'' என்றாள் நைனிதா அவர் கைகளைப் பற்றி.

''இன்னும் பிழைத்திருக்கிறேன் பாரேன்'' என்றார் ஆயாசத்துடன்.

"ஹார்ட் அட்டாக் என்பது இப்போது பெரிய வியாதி இல்லை. சீக்கிரம் குணமடைந்து விடுவீர்கள்" என்றாள் ஆறுதலாக.

"யாருக்காக?"

ஒரு நிமிடம் நைனிதா பதில் பேச முடியாமல் திகைத்தாள். சமீபத்தில்தான் அவரது மனைவி இறந்துவிட்டிருந்தாள். ஒரே மகளும் திருமணமாகி வெளிநாட்டில் இருந்த நிலையில் தனிமையே அவருக்கு பெரும் நோயாக மாறிவிட்டிருக்கிறது.

"உங்களுக்காக நாங்கள் எல்லாம் காத்திருக்கிறோம் ஸார், உங்களது அறிவும் அனுபவமும் எத்தனையோ மாணவர்களுக்கு பயன்பட வேண்டும்" என அவருக்கு தெம்பூட்டும் விதமாய் பேசிக் கொண்டிருந்துவிட்டு வெளியே வருகையில் இருட்டிப் போயிருந்தது.

வராண்டாவில் நடந்து லிப்டுக்கு காத்திருக்கையில் ரோஹித் யாரோ ஒரு டாக்டருடன் பேசியபடி வந்து கொண்டிருந்தான்.

அவளைப் பார்த்ததும் வழக்கமான சிரிப்பில் கண்கள் பளிச்சிட்டன. கூட இருந்த டாக்டரிடம் விடைபெற்று வேகமாய் அவள் அருகில் வந்தான்.

"என்ன நைனி, இங்கே வந்திருக்கிறாய்? யாருக்காவது உடம்பு சரியில்லையா?" என்றான் அவளிடம்.

"எங்க ஹெச்.ஓ.டி.க்கு உடம்பு சரியில்லைன்னு பார்க்க வந்தேன். ஆமாம் நீ எதுக்கு இந்த ஆஸ்பெட்டலுக்கு வந்துருக்கேன்னு நான் சொல்லட்டுமா?"

"எதுக்கு? உன்னை பாக்க வந்தேன்னு சொல்லப் போறியா? இது உனக்கே கொஞ்சம் ஓவரா தெரியல?"



"நா அப்படி சொல்லவேயில்லையேயா! உங்க ஆஸ்பத்திரி ட்ரீட்மெண்ட் சரியில்லாம நீயே ரகசியமா இங்க வந்து வைத்தியம் பாத்துக்கறேன்னு தான் நினைச்சேன்."

"சே! நீயும் உன் ஜோக்கும்!" என்ற சிரித்த ரோஹித் "என் டாக்டர் ப்ரண்ட்டை பாக்க வந்தேன்," என்றபடி அவளுடன் இணைந்து நடக்கத் தொடங்கினான்.

"வீட்டுக்குத்தானே, நான் டிராப் செய்கிறேன்" என்றதும் "எனக்கு காரில் டிரைவர் காத்திருக்கிறான்" என்றாள் நைனிதா.

"அப்ப நீ என்னை டிராப் பண்ணு."

"அப்ப உங்க கார்."

"அது ரிப்பேர் ஆயிடிச்சி."

"எப்போ ரிப்பேர் ஆச்சு? என்னை பார்த்த பிறகா?"

"நைனி நீ எதுக்கு மனோதத்துவத்தை பாடமாக எடுத்தாய்?" என்றான் ரோஹித் யோசனையுடன்.

"ஏன்னா எனக்கு அந்த சப்ஜெக்ட் பிடித்திருந்தது. மனிதனின் பலத்தையும் பலகீனங்களையும் அதற்கான காரணங்களையும் ஆராய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது."

"இதனால் உனக்கு குழப்பம் அதிகமாகலாம். ஒவ்வொரு செயல்களையும் காரணகாரியங்களுடன் முடிச்சிட்டு பார்க்கத் தொடங்கினால் சம்பவங்களின் இனிமையை உணர முடியாமல் போய்விடும். சில உணர்வுகளை யோசிக்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டால்தான் வாழ்வின் சுவையை அனுபவிக்க முடியும்."

"எனக்கு புரியவில்லை. எதை யோசிக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிறாய்?" என்றாள் நைனிதா குழப்பத்துடன்.

"ம்..." வெகுவாக யோசித்தான் ரோஹித். "உதாரணத்துக்கு என்னை பிடித்திருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். உடனே அதிகமாக யோசிக்காமல் ஐ லவ் யு என்று சொல்லிவிட்டால் இனிமையாக காதலிக்கத் தொடங்கி விடலாம்."

ஒரு நிமிடம் திகைத்த நைனிதா அவன் முகத்தில் தெரிந்த குறும்பைப் பார்த்ததும் "நீயெல்லாம் எப்படி டாக்டர் ஆனேன்னு தெரியல" என்றாள் சலிப்புடன். "இப்படி சிரிப்பும் விளையாட்டுமாய் ஒரு சைக்கிரியாட்டிஸ்டை நான் பார்த்ததே இல்லை."

"அடிப்படையில் நான் சாதாரணமனிதன் நைனி. நான் உற்சாகமாக இயல்பானவனாக இருந்தால்தான் என்னிடம் வருபவர்களின் மனோநிலையை சரிப்படுத்த முடியும். எந்த நேரமும் யோசனையும், ஆராய்ச்சியுமாய் இருந்தேன் என்றால் எனக்கும், என் நோயாளிகளுக்கும் வித்தியாசமில்லாமல் போய்விடும்."

நைனிதாவுக்கு இவனை சங்கடப்படுத்தி விட்டோமோ என்று வருத்தமாக இருந்தது. நம் வீட்டில் எல்லோருமே சிரிக்க மறந்து போன சூழ்நிலையில் இயல்பான உற்சாகமும், கிண்டலுமாய் இவன் இருப்பது நமக்கு விபரீதமாய்ப்படுகிறது போலும்.

"ஸாரி" என்றாள் தன்னையறியாமல்.

"எதுக்கு?" என்றான் ரோஹித். "நாம் நண்பர்கள் இல்லையா? ஒருவருக்கொருவர் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ள நமக்கு உரிமை உண்டு. இந்த ஸாரி, தேங்க்ஸ் போன்ற வார்த்தைகள் நம்மிடையே அவசியம் இல்லை."

"அப்படியானால் உன்னை டிராப் பண்ணினால் எனக்கு ஒரு தேங்க்ஸ் கூட சொல்ல மாட்டாயா?"



"நெவர்."

பழைய உற்சாகம் திரும்பிவிட சிரித்தபடியே ரோஹித் வீடுவரை பயணித்தனர்.

"நாளை ஹாஸ்பெட்டல் போக கார் இல்லாம உனக்கு சிரமமாய் இருக்குமே! சீக்கிரமாய் சரி செய்து விடு" என்றபடி ரோஹித்தை நைனிதா அவன் வீட்டு வாயிலில் இறக்கிவிட்டாள்.

"குட் நைட்" சொல்லி ரோஹித் தன் வீட்டுக்குள் சென்றான்.

கார் இரண்டு தெரு தாண்டியதும் தான் ரோஹித் பர்சை தன் காரிலேயே விட்டுவிட்டதை நைனிதா கவனித்தாள்.

டிரைவரிடம் சொல்லி காரைத் திருப்பச் சொல்லி ரோஹித்தின் வீட்டை நெருங்கியபோது வீட்டு வாயிலில் அவன் கார் நின்றிருந்தது.

மருத்துவமனையில் பார்த்த அவனது டாக்டர் நண்பன் கார் சாவியை ரோஹித்திடம் கொடுத்தபடி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

"ராஸ்கல்..." என்றாள் நைனிதா சத்தமாக.

ரோஹித் யோசனையுடன் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

கேசவன் நைனிதாவுடன் அவர்கள் வீட்டிற்கு வந்திருந்த போது கிளம்பும் சமயத்தில் நைனிதாவின் வீட்டைப் பற்றி, அவள் மனோநிலையைப் பற்றி கோடி காட்டியிருந்தார். அவனும் நைனிதாவும் பேசிக் கொண்டிருந்த விதத்தில் அவருக்கு ஏதோ தோன்றியிருக்க வேண்டும்.

"உன்னால் நைனிதாவின் மனம் மாறுமானால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்" என்றார் அவன் கைகளைப் பற்றி.

பார்த்தவுடனேயே மனதால் நெருங்கிவிட்டவளை எப்படி நெருங்கிப் பழகுவதென தெரியாமல் அவன் தவித்துக் கொண்டிருந்தான். எதிர்பாராமல் மருத்துவ மனையில் சந்திக்க நேர்ந்ததும் அந்த வாய்ப்பை இழக்க விரும்பாமல் தன் கார் ரிப்பேர் என்று பொய் சொல்லி அவளுடன் ஒட்டிக் கொண்டான்.

வயதுக்கு மீறிய முதிர்ச்சியுடனும் இறுக்கத்துடனும் இருக்கும் அவளை எப்படி இளக்குவது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது அவனது செல்போன் சிணுங்கியது.

போனை எடுத்ததும் "யு ஆர் சீட்டிங் மீ, ப்ராட்" என சீறினாள் நைனிதா.

அவன் திடுக்கிட்டு "நைனி" என்றதும், "இனி எங்கிட்ட பேசாதே. கார் ரிப்பேர்னு பொய்யா சொல்ற?" என அவன் சொல்ல வந்ததை காதில் வாங்காமல் கத்திவிட்டு போனை வைத்தாள் நைனிதா.

ஒரு நிமிடம் திகைத்த ரோஹித் பிறகு பெரிதாய் சிரிக்கத் தொடங்கினான்.

சத்தம் கேட்டு அறைக்குள் எட்டிப் பார்த்த ராஜா "என்னடா தனியா சிரிச்சிட்டு இருக்க?" என்றான் வியப்புடன்.

"தினம் மென்டல் ஹாஸ்பெட்டல் போறவன், வேற எப்படி இருப்பான்?" என்றான் கார்த்திக்.

"அதெல்லாம் இல்ல. கல்யாண வயசில வர்ற வியாதி இது" என்றாள் சபிதா.

"கல்யாணம்தான் பண்ணிக்க மாட்டேங்கிறானே!" என்றான் ராஜா.

"ஆனா பிடிச்ச பெண்ணைப் பார்த்திருக்கலாம். ரோஹித்திற்கு எப்படிப்பட்ட பெண் பிடிக்கும்னு நாங்க சொல்லட்டுமா?" என்றார்கள் சுகுணாவும் சபிதாவும்.



"சொல்லுங்களேன்!" என்றதும்,

"பெண் அழகா இருக்கணும்."

"கண்ணு பெருசா இருக்கணும்."

"நல்லா படிச்சிருக்கணும்."

"டீச்சர் வேலை பாக்கணும்."

"வசதியான குடும்பம்..." இருவரும் அடுக்கிக் கொண்டே போக,

"பொண்ணை நேர்ல பாத்த மாதிரியே சொல்றீங்களே?" என்றான் ராஜா வியப்புடன்.

"பாத்தோமே" என்றார்கள் இருவரும் ஒரே குரலில்.

"எங்கப் பாத்தீங்க? யாரைப் பாத்தீங்க?"

"அந்த அழகான பெண்ணைப் பாத்தோம். அவ கண்ணைப் பாத்தோம். அவ மேல வெச்ச கண்ணை எடுக்க முடியாம எங்க மச்சினர் தவிச்சதைப் பார்த்தோம்."

"என்னது ரோஹித் பொண்ணு பாத்துட்டானா? நிஜமாவா? யாரது?" என கார்த்திக்கும் ராஜாவும் பரபரக்க, "அண்ணி.. அண்ணி.. ப்ளீஸ்" என்றான் ரோஹித் கெஞ்சலும் சங்கடமுமாய்.

அவன் முகத்தைப் பார்த்த சபிதாவும் சுகுணாவும் மேற்கொண்டு எதுவும் பேசாமலிருக்க, "என்ன சொல்லுங்க" என்றான் கார்த்திக் ஆர்வம் தாங்காமல்.

"அடுத்தவங்க பர்சனல் விஷயம் எங்களுக்கெதுக்குப்பா?" என்றபடி இருவரும் அறையை விட்டு வெளியேற, "அடப்பாவி இப்படி சஸ்பென்சில விட்டுட்டு போறாங்களே!" என புலம்பினான் ராஜா.

எக்ஸாம் பேப்பர்களை திருத்திக் கொண்டிருந்த நைனிதா டேபிள் மீதிருந்த போன் அடிக்கவே "ஹலோ" என்றாள் பேப்பரில் கவனமாய்.

"நைனி" என்ற குரலைக் கேட்டதும் கைகள் ஒரு நிமிடம் பேப்பரில் அசையாமல் நின்றன.

ஒருபுறம் கோபம் வந்தாலும் மறுபுறம் தன் பெயரை இவ்வளவு உரிமையுடன் யாரும் கூப்பிட்டதில்லை என்றும் தோன்றியது. பதில் பேசாமல் போனை வைத்தாள். மேலும் இரண்டு முறை பெல் அடித்து ஓய்ந்து போகவும் ஒரு சிரிப்புடன் நைனிதா தன் வேலையைப் பார்க்கத் தொடங்கினாள்.

நைனிதாவுக்கு நார்வேயிலிருந்து ஸ்காலர்ஷிப்புடன் படிக்க வருமாறு கடிதம் வந்திருந்தது. சக ஆசிரியைகளிடம் சொன்னபோது ஆளுக்கு ஆள் வாழ்த்தினார்கள். பிரின்சிபால் கல்யாணி முரளிதரனிடம் விடுமுறைக்கான விண்ணப்ப கடிதத்தை கொடுத்தபோது, "நைனிதா படிப்பை முடித்ததும் நீ கண்டிப்பாய் நம் கல்லூரிக்கு திரும்பி வந்துவிட வேண்டும். அதுவரை லீவ் வேகன்ஸிக்குக் கூட நான் யாரையும் போடப்போவதில்லை" என்றார்.

"நான் போவது வெறும் எட்டுவார படிப்பிற்கு. படிப்பு முடிந்ததும் சில மாதங்கள் என் அங்கிள் வீட்டில் இருந்து விட்டு வந்துவிடுவேன்" என்றாள் நைனிதா.

வீட்டில் அம்மா, அப்பா யாரிடம் முதலில் சொல்வது என்று குழம்பியவள், இருவரையும் ஒன்றாய் சந்திக்க இரண்டு நாட்கள் காத்திருந்தாள். இரவு ஆபீசிலிருந்து அப்பா வந்ததும் டி.வி. சீரியல் பார்த்துக் கொண்டிருந்த அம்மா உள்ளே போக எழுந்த போது நைனிதா போய் அம்மா எதிரில் நின்றாள்.

"உங்கள் இருவரிடமும் நான் பேச வேண்டும்" என்றாள் இருவருக்கும் பொதுவாக.



இருவரும் பதில் பேசாமல் நிற்க, கிடைத்த அவகாசத்தில் அவசரமாக சொன்னாள். "நான் படிக்க நார்வே போகப் போகிறேன்."

"நீ தான் வேலைபாக்கிறியே, அப்புறம் எதுக்கு மறுபடி படிக்கணும்?" என்றாள் கலாவதி.

'ஹ்யூமன் ரிசோர்ஸ்' பற்றிய படிப்பு. உலகம் முழுவதிலுமிருந்து கிட்டத்தட்ட ஐநூறிலிருந்து அறுநூறு மாணவமாணவிகள் வருவார்கள். கேசவன் அங்கிளும் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறார். போனால் படிப்பையும் முடித்துவிட்டு, அவர்களையும் பார்த்து விட்டு வரலாம்."

"இப்பவே உனக்கு வயசு போயிட்டே இருக்கு. நீ பாரீன் போயிட்டா திரும்பி வந்து எப்ப கல்யாணம் பண்றது?"

அம்மா கல்யாணம் என்ற வார்த்தையை எவ்வளவு சாதாரணமாக சொல்கிறாள்? தன்னைப் பொறுத்தவரை அது ஒரு ஆடம்பர வார்த்தையாக, அசாதாரணமாகக் கூடத் தெரிகிறது.

"பெற்றவள் ஒழுங்கா பொறுப்பா வளர்த்திருந்தா பிள்ளைகளுக்கு வெளியே போகத் தோணுமா?" என்றார் சிதரம்பரம் நிஷ்டூரத்துடன். கலாவதி கோபத்துடன் முறைத்தாள். "ஏன் நான் பொறுப்பா இல்லாம என்ன செஞ்சிட்டேன்? நான் வீட்டை விட்டா கோவில்னு இருக்கேன். தகப்பன் கண்டிக்கலைன்னா பிள்ளைகளுக்கு பயமத்துப் போயிடும்."

"ப்ளீஸ் நிறுத்துங்க" என்றாள் நைனிதா இருவருக்கும் பொதுவாக.

"உங்க பொண்ணுக்கு பைசா செலவில்லாம படிக்க வாய்ப்பு கிடைச்சிருக்குன்னா சந்தோஷப்படணும். அதை

விட்டுட்டு ரெண்டு பேரும் என் இப்படி சண்டை போட றீங்க?"

"முதல்ல ஆரம்பிச்சது அவர்தானே, நானா ஆரம்பிச் சேன்?" என கலாவதி அழத்தொடங்க 'சே!' என வெறுப் புடன் மனைவியைப் பார்த்தார் சிதம்பரம்.

"நீ போ நைனிதா. நீயாவது இந்த வீட்டை விட்டு நிம்மதியாக போய்விட்டு வா" என்றார் முடிவாக.

ஒரு வழியாக அப்பா சம்மதித்துவிட்டார் என்ற நிம்மதி யுடன் அழுது கொண்டிருந்த அம்மாவின் அருகே அமர்ந் தாள் நைனிதா.

"அம்மா நான் சொல்வதைக் கேள். அப்பாவுடன் எப்பவும் சண்டை போடாமல் அழுது வெறுப்பேத்தாமல் அவருடன் ஒத்துப்போக நீ முயற்சி செய்ய வேண்டும். தப்பு யார் மீதுன்னு பார்க்கிறதை விட அதை எப்படி களையலாம்னு பார்ப்பதுதான் வாழ்க்கைக்கு உதவும். அன்பையும், அரவணைப்பையும் பெற வேண்டுமானால் விட்டுக் கொடுக்கவும், சகித்துக் கொள்ளவும் தெரிய வேண் டும். உங்களுடைய இந்த நிலை என்னையும் சரணையும் கூட எப்படி பாதிக்குதுன்னு தெரியுமா உனக்கு?"

"நைனிதா உன்னுடைய மனோதத்துவ பாடத்தை என்னிடம் காட்டாதே" என்றாள் கலாவதி பட்டென்று. "நீ எப்படியிருந்தாலும் ஒருநாள் கணவன் வீடு போய் விடுவாய். சரணும் ஒரு வேலை பார்த்துட்டு போயிடு வான். நான்தான் சாகிறவரை தனிமையில் கிடந்து வெந்து சாகணும். கணவன் வேறு பெண்களுடன் பழகுவதை சகித்துக் கொள்வதும், தன்மானத்தை விட்டுக் கொடுப் பதும் எவ்வளவு கஷ்டம்னு அந்த நிலையில் இருந்து பார்த்தால்தான் தெரியும்."



"அம்மா அப்பாவுக்கு தவறான பழக்கம் இருக்கிறதா எனக்கு தெரியல. ஒரு அலுவலகத்தை நடத்தும் பொறுப்பில் இருப்பவர் அவரிடம் வேலை பார்ப்பவர்கள், தொழில் தொடர்புடையவர்கள்னு எத்தனையோ, பெண் களிடம் பழகவும் கூட செல்லவும் வேண்டி இருக்கும்."

"எனக்கு தெரியும் நீ எப்பவும் உங்கப்பா பக்கம்தான் பேசுவேன்னு. எல்லா வீட்டிலும் பெண்கள்தான் அம்மா வுக்கு ஆதரவா இருப்பாங்க." என்றாள் கலாவதி ஆதங் கத்துடன்.

"நா உங்க ரெண்டுபேருக்கும் ஆதரவாத்தான் பேசு கிறேன். இதை நீ புரிஞ்சிக்கணும்" என்றாள் நைனிதா.

அம்மா எழுந்து தன் அறைக்கு செல்ல நைனிதா சமையலறையில் சென்று ஒரு டம்ளர் ஜஸ்வாட்டரைக் குடித்துவிட்டு, அப்பாவின் அறைக் கதவைத் தட்டினாள்.

கதவைத் திறந்த சிதரம்பரம் "என்னம்மா விஷயம்? பாரீன் போக பணம் வேணுமா?" என்றார் அவளிடம்.

"எங்களுக்கு பணம் மட்டுமல்ல. வேறு சிலதும் வேணும்ப்பா. குடும்பத்திற்குள் இணக்கமான குடும்ப உறவு வேண்டும்."

"நைனிதா ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக இருப்பது பெண் களின் கையில்தான் இருக்கிறது. எதற்கும் சந்தேகப்பட்டு கேள்வி கேட்டு குற்றம் கண்டுபிடிக்கும் பெண்ணிடம் கணவன் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்?"

"அப்பா அம்மா அதிகம் படிக்காதவங்க. வெளியுலக அனுபவமும் இல்லாமல் வளர்ந்திருக்கும் அவர்களின் மனோபாவம் குறுகியதாகத்தான் இருக்கும். இதோ போலத்தானே நிறைய பெண்கள் இருக்கிறார்கள். திறமை

சலியான எத்தனையோ கணவன்கள் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் தன் மனைவியை நேசிப்பதில்லையா? நீங்கள் அவர்களை சகித்துக் கொள்ளவும், அன்பு செலுத்தவும் முயற்சிக்க வேண்டும். ஒரு குடும்ப வாழ்க்கை வெற்றியடைவது இருவர் முயற்சியிலும்தான் சாத்தியமாகும்.''

''நீ எப்படியிருந்தாலும் உங்கம்மா பக்கம்தான் நைனிதா. நீயும் ஒரு பெண்கிறதால அவபக்கம்தான் நியாயமா தெரியும் உனக்கு.''

''அப்பா நான் உங்க ரெண்டுபேருக்கும் பெண்தான். அது ஏன் புரிய மாட்டேங்குது உங்களுக்கு?''

சோர்வுடன் எழுந்து தன் அறைக்கு வந்தபோது இந்த வீட்டின் நிரந்தர சோகம் இது என்ற நினைவு முகத்தில் அறைந்தது.

# 6

''ரோஹித்.''

இரவு உடை அணிந்து கொண்டிருந்த ரோஹித் அப்பாவின் குரல் கேட்டதும் அவசரமாய் கீழே வந்தான்.

''என்னப்பா?''

''அம்மாவுக்கு ஜுரம் இன்னும் குறையல'' என்றார் கவலையுடன்.

''டைபாய்ட் ஜுரம்ப்பா. மெதுவாய்த்தான் சரியாகும். இப்பதானே மருந்து கொடுத்தேன்'' என்றபடி அம்மாவின் டெம்ப்ரேச்சர் பார்த்தான் ரோஹித்.



லட்சுமி சோர்வுடன் கண்களைத் திறந்து புன்னகைத்தாள்.

''உங்கப்பாவையும் கொஞ்சம் கவனி ரோஹித். அவர்தான் இந்த ஒரு வாரத்தில் ரொம்ப இறங்கிப் போய்ட்டார்'' என்றாள்.

ஜுரம் நூற்றி ஒன்று இருந்தது. ஒரு வாரமாய் அப்பா தேதி வாரியாய் டெம்ப்ரேச்சரும், சாப்பிட்ட உணவையும் குறித்து வைத்திருந்தார். அந்த பேப்பரில் டெம்ப்ரேச்சரையும், நேரத்தையும் எழுதினான்.

''நாட் பேட். இன்னும் ஒரு மணி நேரத்தில் காய்ச்சல் முழுவதுமாய் இறங்கி விடும்'' என்றான் அப்பாவிடம்.

அம்மாவிற்கு உடம்பு சரியில்லாத இந்த ஒரு வாரமாய் அப்பா அலுவலகத்திற்கு கூட போகவில்லை. அம்மா அருகிலேயே அமர்ந்திருக்கிறார். உணவு விஷயத்தை அண்ணிகள் பார்த்துக் கொண்டாலும் நேரத்திற்கு மருந்து தருவது அப்பாதான்.

''டைபாய்ட் பயப்படுகிற வியாதி இல்லப்பா. சரியான உணவு முறையை மேற்கொண்டால் படிப்படியாக குணமாகிவிடும்'' என்ற ரோஹித்திடம்.

''இருக்கட்டும்ப்பா. வீட்டில் இருக்கும் மனைவி பிரச்சனை இல்லாம இருக்காங்கிற உறுதி இருந்தால்தான் கணவனால் வெளியே போய் வேறு வேலை செய்ய முடியும்'' என்று சொல்லிவிட்டார்.

இளைத்துத் தெரிந்த அப்பாவை அன்புடன் பார்த்த ரோஹித் ''உங்க உடம்பையும் பாத்துக்கணும்ப்பா. அன்பை காண்பிக்கிற வேகத்தில் ஆரோக்கியத்தை கெடுத்துக் கொள்ளக்கூடாது'' என்றான்.

பாலசுந்தரம் பதில் பேசாது மனைவியை வெறித்தார். அவர் சற்று விலகி சென்ற சமயத்தில் லட்சுமி மகனிடம் புலம்பினாள். "உங்க அண்ணிகளும் சமையலையும், குழந்தையையும், எனக்கும் வேண்டியது செஞ்சி சிரமப்படறாங்க. உங்கப்பாவும் எங்கேயும் போகாம முடங்கி கிடக்கறாங்க. எல்லோருக்கும் கஷ்டத்தைக் கொடுக்க எனக்கு இப்படி உடம்புக்கு வந்திருக்கு பார். உங்கப்பாவை நான் இல்லாட்டி நோத்துக்கு சாப்பிட வைக்க யாராலயும் முடியாது. எப்படி போயிட்டார் பாத்தியா ரோஹித்?"

"அம்மா இப்ப நீங்க குணமாவதைத் தவிர எதைப் பற்றியும் யோசிக்கக் கூடாது" என்றான் ரோஹித் கண்டிப்புடன்.

"நீ டாக்டராச்சே, அப்படிதான் மிரட்டுவ" என்றாள் லட்சுமி பெருமையுடன்.

"தூங்குமா" என பேனை முழு வேகத்தில் சுழல விட்டு அம்மா தூங்கத் தொடங்கியதும் ரோஹித் வெளியே வந்தான்.

"ரோஹித் சாப்பிட வர்றியா?" என்றபடி சுகுணா எதிரே வந்தாள்.

ரோஹித் சாப்பிடுகையில் "உங்கண்ணனைப் பாரேன், இன்னும் வரலை" என்றாள் வாயிலைப் பார்த்தபடி.

"அப்பா ஆபீசுக்கு போகாததால் வேலை அதிகமாகத் தான் இருக்கும். இதுக்கு ஏன் கவலைப்படறீங்க?" என்றான் ரோஹித் சாதாரணமாக.

"எனக்கு போதும். நீங்க சாப்பிடுங்கண்ணி" என்றதும், "இல்ல ரோஹித் உங்கண்ணா வரட்டும்" என்றாள் சுகுணா.

"ராஜா வர இன்னும் தாமதமாகலாம். காலையில் இருந்து வேலை பாத்துட்டு இன்னும் எவ்வளவு நேரம்



நீங்க சாப்பிடாம இருப்பீங்க? உங்களுக்கு நிஜமா பசிக்கல?"

"பசி, கோபம் எல்லா உணர்வும் உங்கண்ணனைப் பாத்த பிறகுதான் வரும். பார்க்கிறவரை அவர் இன்னும் வரலையேங்கிற தவிப்பு மட்டும்தான் இருக்கும்."

"அண்ணி உங்களுக்கு பத்து வயசில ஒரு பொண்ணு இருக்கு. நினைவிருக்கா உங்களுக்கு?" என்றான் ரோஹித் கிண்டலாய்.

"இருந்தா? அதுக்காக கணவன் மனைவிக்குள் இருக்கும் அன்பு ஒரு குழந்தை பிறந்ததும் காணாம போயிடுமா? வயதாக ஆகத்தான் அது இறுகி பலமடையும்னு உங்கப்பா அம்மாவை பாத்து கூடவா புரியல? நாள் முழுசும் வேலை செஞ்ச களைப்பில் இரவு எந்த நேரமானாலும் மனைவி கையால் சாப்பிடணும்னு அவர் வர்றப்ப என்னால் மட்டும் எப்படி அவரை விட்டுட்டு சாப்பிட முடியும்?"

சுகுணாவின் வார்த்தைகளிலிருந்த உண்மையை உணர்ந்தாலும் அண்ணியை சீண்ட விரும்பிய ரோஹித் "அண்ணி நீங்கதான் இப்படி எதையோ நினைச்சிட்டு சாப்பிடாம காத்துக்கிட்டிருக்கீங்க. ராஜா அங்கே அபிஷியல் டின்னர், பார்ட்டின்னு பைவ் ஸ்டார் ஹோட்டல்ல நல்லா வெட்டிட்டு வந்து உங்ககிட்ட கதை விடுவான் பாருங்க" என்றான்.

கலகலவென சிரித்த சுகுணா, "பார்க்கலாம். உங்க லெக்சரர் பொண்டாட்டி உனக்காக காத்திருக்கிறாளா இல்லையான்னு நானும் பாக்கத்தானே போறேன்!" என்றதும் "அண்ணி" என்றான் ரோஹித் சுற்றிலும் பார்த்து.

"எனக்கும் சவிதாவுக்கும் முதல் நாளே தெரிஞ்சுது. நாங்க வில்லன்கள் இல்ல தம்பி. பயப்படாதீங்க." என்றான் கருணா சிரிப்புடன்.

"நான் இன்னும் டிக்ளேர் பண்ணவே இல்ல அண்ணி. நீங்களா எதுவும் முடிவு செஞ்சிடாதீங்க" என்றபடி கை கழுவ எழுந்தான் ரோஹித்.

மேலே போகும் முன் அம்மாவின் அறைக்குள் எட்டிப்பார்த்த போது அம்மாவுக்கு ஜுரம் நின்றுபோய் வியர்த்திருந்தது. அப்பா மேல்துண்டால் வியர்வையை ஒற்றி எடுத்தபடி அருகே சேரில் அமர்ந்திருந்தார். தன் அறைக்கு வந்து படுத்த ரோஹித்திற்கு வெகுநேரம் உறக்கம் வரவில்லை. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஏற்பட்டு போயிருக்கும் பிணைப்பு மிக ஆத்மார்த்த மானது என்று தோன்றியது. பெற்றோர் இணைத்து வைத்தனர், என்பதற்காகவோ, தாலி கட்டிய கடமைக்காகவோ அவர்கள் அன்பு செலுத்தவில்லை. பரஸ்பரம் ஒருவரோடு ஒருவர் ஈர்க்கப்பட்டதால்தான் இந்த அன்பு சாத்தியமாயிற்று. அவர்கள் மனதில் பொங்கிய நிறைவும், மகிழ்ச்சியும் குடும்பத்தில் பிரதிபலித்தது. அதனால்தான் மகன்கள் மூன்றுபேரும் இனிமையான சுபாவம் உள்ளவர்களாய் வளர்ந்தார்கள். அண்ணன்களின் மணவாழ்க்கை அருமையாய் அமைந்து போனதற்கும் அம்மா அப்பாவின் வளர்ப்பு முறையும் அவர்கள் குடும்ப சூழலுமே காரணம் என்று தோன்றியது. "ஒரு பந்தத்தை நிலைநிறுத்துவது பரஸ்பரம் நேசிக்கும் இரண்டு மனசுதான். தாலியோ, மோதிரமோ இல்லை."

நைனியுடனான தன் பந்தம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று ரோஹித் யோசிக்க முற்பட்டான். அவளைப்



பார்த்து ஒரு மாதம் ஆகப்போகிறது. அன்று அவள் போனை எடுக்காததற்கு பிறகு அவனுக்கு போன் பேச நேரமே இல்லை. நேரில் பேசிக் கொள்ளலாம் என்று காத்திருந்தான். எங்கே சந்திப்பது, எப்படி அணுகுவது என்று புரியாமல் நாட்கள் சென்றன.

நைனிதா நார்வே கான்சலேட்டுக்குள் நுழைந்து விபரம் சொல்லி காத்திருந்து உள்ளே சென்றதும் அந்த நார்வீஜிய அதிகாரி அவள் கைகளைக் குலுக்கி "வாழ்த்துக்கள்" என்றார்.

"உங்களுடைய விசா தயாராகி விட்டது. ஆஸ்லோ சர்வகலாசாலை உலகத்தரம் வாய்ந்தது. அங்கு பெறும் கல்வி உங்கள் வளமான எதிர்காலத்திற்கு நிச்சயம் உறுதுணையாய் இருக்கும்" என்றபடி அவளது விசாவை கொடுத்தார்.

நைனிதா நன்றி கூறி வாங்கிக் கொண்டு புறப்படுகையில், "நீங்கள் அதிர்ஷ்டசாலி நைனிதா. நார்வேயில் நல்ல கோடைக்காலம் இப்போது" என்றார்.

சென்னையின் வெப்பத்திலேயே பிறந்து வளர்ந்தவளுக்கு கோடைக் காலத்தினால் என்ன அதிர்ஷ்டம் என்று புரியவில்லை. எனவே மரியாதைக்காக புன்சிரிப்புடன் தலையசைத்து வெளியே வந்தாள்.

கதீட்ரல் சாலையில் ஆட்டோவிற்கு காத்து நிற்கையில் அவளை உரசிக் கொண்டு ஒரு கார் வந்து நின்றது. திடுக்கிட்டு திரும்பிப் பார்க்கையில் "ஹாய்" என்றான் ரோஹித் பளீரென சிரித்து.

அந்த வரிசை பற்களையும், சிரிப்பையும் பார்த்து மனம் கழண்டு போகையில் நைனிதா கையிலிருந்த விசாவை இறுக்கிப் பிடித்தாள்.

"வா" என்றபடி ரோஹித் முன்பக்க கதவைத் திறந்து விட்டான்.

நைனிதா யோசித்தபடி நிற்க, பின்னாலிருந்த வண்டிகளின் ஹாரன்கள் சப்தமிட்டன. ரோஹித் எட்டி அவள் கைகளைப் பற்றி காருக்குள் இழுத்துக் கொண்டு கதவை சாத்திவிட்டு வண்டியை ஸ்டார்ட் பண்ணினான்.

"இது ரொம்ப வயலெண்ட்டாக இருக்கே!" என்றாள் நைனிதா. "பட்டப் பகலில் நடுத்தெருவில் ஒரு பெண்ணைக் காருக்குள் இழுத்து கடத்திட்டு போறது சட்டப்படி குற்றம் தெரியுமா?"

"பொண்ணு விருப்பமில்லாம கூட்டிட்டு போனாத் தான் கடத்தல் குற்றம், விரும்பியே வந்தா?"

"விரும்பி வந்ததா யார் சொன்னது?"

"யார் சொல்லணும்? எனக்கே தெரியுமே!"

"கையை பிடிச்சி கட்டாயமா இழுத்துட்டு வந்துட்டு பெருமையைப் பார்."

"ரொம்ப அலட்டாதே. நீ அடுத்தவங்க கட்டாயத்துக்காக வர்ற ஆள் இல்லேன்னு எனக்கு தெரியும்."

"சரி உன் கார் எப்ப சரியாச்சு?" என்றாள் நைனிதா அவன் முகத்தைப் பார்த்து.

"நீ அதை இன்னும் மறக்கலையா நைனி? அது ஜஸ்ட் பார் ஃபன்."

"ஃபன்தான். எனக்கும் தெரியும். ஆனா நீ என்னவோ என்னை ஏமாத்தின மாதிரி தோணுச்சி."

உட்லேண்ட்சின் மரத்தடி ரெஸ்ட்டாரெண்டுக்குள் காரைநிறுத்திவிட்டு திரும்பி அவளைப் பார்த்த ரோஹித், "உனக்கு அந்த சந்தேகம் மட்டும் எப்பவும் வரக்கூடாது நைனி" என்றான் சீரியசாய்.



இவர்களைப் பார்த்ததும் வந்த பேரரிடம் "சாப்பாடு வேண்டாம்" என்று நைனிதா சொன்னதும் ரோஹித் சான்விச்சும், ஜூஸும் ஆர்டர் செய்தான். காரிலிருந்த டேப்பை ஆன் செய்துவிட்டு அவளைப் பார்த்த ரோஹித்.

"சோ?" என்றான் கேள்வியுடன்.

"நீதான் சொல்லணும்" என்றாள் நைனிதா.

"சொல்றதுக்கு நிறைய இருக்கு. நீ கேட்டுக்குவியான்னு தான் தெரியல."

"அப்படி என்ன சொல்லப் போற?" என்றாள் வியப்புடன்.

அதற்குள் ஆர்டர் செய்த சான்விச்சும் ஜூஸும் வரவே அமைதியாய் சாப்பிடத் தொடங்கினர். ரோஹித் திடீரென நினைவு வந்தவனாக, "உன் கார் என்னாச்சு?" என்றான்.

"சரண் எடுத்துட்டு போயிருக்கான். அவன் போனால் டைமுக்கு திரும்புவான்னு எதிர்பார்க்க முடியாது. எனக்கு கான்சலேட்டில் சீக்கிரம் வேலை முடிஞ்சி போச்சு."

"கான்சலேட்டில் என்ன வேலை?"

"நார்வே போறேன். படிக்கறதுக்காக."

ரோஹித் திடுக்கிடுவது நன்றாக தெரிந்தது. "இப்ப என்ன திடீர்னு?"

"ஹ்யூமன் ரிசோர்ஸ் பற்றிய படிப்பு. எட்டு வாரம் தான்."

"யு மீன் டூ மன்த்ஸ்?"

"ஆமாம். அப்படித்தான் படித்திருக்கிறேன்."

"எப்படி?"

"இரண்டு மாதத்திற்கு எட்டு வாரங்கள் என்று."

இருவரும் சிரித்தபடி பயணத்தைப் பற்றி பேசுகையில் ரோஹித் சொன்னான். "நான் ஸ்வீடனில்தான்

எம்.எஸ். முடிச்சேன். ரொம்ப அழகான நாடு. ஆனால் குளிர்காலம் வந்துவிட்டால் சாமான்யர்களால் சமாளிக்க முடியாது."

"பொதுவாக டாக்டருக்கு மேல்படிப்பு படிக்கணும்னா லண்டனோ அமெரிக்காவோ போவாங்க. நீ ஏன் ஸ்வீடன் போனே?" என்றாள் நைனிதா வியப்புடன்.

"நார்வேயிலும் ஸ்வீடனிலும் ராஜா எங்கள் தொழிலை விரிவு படுத்தி இருந்த சமயம் அது. எங்களுக்கு அது பழக்கமான இடமாகத் தோன்றியது. மற்ற நாடுகளி லிருந்து வித்தியாசமாய் இருந்ததும் ஒரு காரணம். அது மட்டுமில்லாமல் அந்த நாட்டு பெண்கள்தான் உலகி லேயே மிக மிக சுதந்திரமான பெண்கள் என்று கேள்விப் பட்டிருந்தேன். அதை நேரில் பார்த்து தெரிந்து கொள்ளும் ஆசையும் இருந்தது."

"அப்ப நாடு நாடு போய் சைட் அடிச்சிருக்க!"

"சைட்டுங்கறதெல்லாம் டீன் ஏஜ் வார்த்தை. நான் அந்தப் பெண்களின் மனோபாவத்தை தெரிந்து கொள்ள விரும்பினேன்."

"தெரிந்து கொண்டீர்களா?"

"நிச்சயமாய். நான் வகுப்புக்குப் போன முதல் நாளே என் வகுப்புப் பெண் ஒருத்தி என்னை அவள் காதலனாய் இருக்கும்படி கேட்டாள்.

"முதல் நாளேவா? பழகாமலே எப்படி காதலிப்பது?"

"காதலித்த பின்பு பழகிக் கொள்ளலாம். பிடிக்க வில்லை எனில் விலகிக் கொள்ளலாம் என்றாள் மற்றொரு பெண். விதவிதமான குணங்களுடன்... புதிய புதிய காதல்களைத் தேடிப் போகும் ரகம் ரகமான பெண்கள்.



ஆனால் நைனிதா பெண்களை கவர்வதற்காகச் செய்யப் படும் சாகசங்களில் அவர்கள் மயங்குவதில்லை. அவர்கள் மனதிற்கு பிடித்தால்தான் பழகுவார்கள். பிடிக்கவில்லை எனில் கணவனாக இருந்தாலும் அவர்களை நெருங்க முடியாது."

"சரி அத்தனை பெண்கள் காதலிக்க முன் வந்தும் நீ ஏன் யாரையும் மணந்து கொள்ளவில்லை?"

"ஏன்னா என் கண் அருகே வந்த பெண்கள் யாரும் மனசுக்கு அருகே வரவில்லை" என்ற ரோஹித் நினைவு வந்தவனாகக் கேட்டான்.

"நீ கல்யாணத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய் நைனி?"

"கல்யாணமா?" என்றாள் நைனிதா அலட்சியத்துடன். "அது ஒரு சமூக நிர்ப்பந்தம்தான். எல்லோரும் நிர்ப்பந் தத்திற்குக் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை. நான் தன்னிச்சையானவள் ரோஹித்."

"உனக்கென்று உறவுகள் வேண்டாமா நைனி?"

"உறவுகள் எதேச்சையானவை ரோஹித். விதிக்கப் பட்டவை அல்ல. எல்லா உறவுகளும் பரஸ்பர நம்பிக் கையால்தான் நீடிக்கும். சடங்கு சம்பிரதாயங்கள் உறவுகளை நிலைத்து நிற்கச் செய்வதில்லை."

"நானும் நேற்று இதையேதான் நினைத்தேன்" என்றான் ரோஹித் ஆச்சரியத்துடன். "என் பெற்றோரை பார்த்த போது இவர்களுக்கிடையே ஏற்பட்டுப் போன அன்பு ஆப்டர் ஆல் திருமணம் என்ற சடங்கினால் மட்டும் ஏற் பட்டதல்ல என்று தோன்றியது. இரு மனங்களின் சங் கமம்தான் தாம்பத்யம். இந்த மனங்களின் பிணைப்புக்கு

முன் சம்பிரதாயங்கள் வலுவிழந்து இரண்டாம் பட்சம் ஆகி விடுகிறது என்றுதான் நினைத்தேன்.''

காலி ஜூஸ் டம்ளரை பேரரிடம் கொடுத்துவிட்டு ரோஹித்தைப் பார்த்த நைனிதா தீவிர முகபாவத்துடன் சொன்னாள். ''நீ சொன்ன அதே எண்ணம்தான் எனக்கும். ஆனால் உன் கருத்துக்கள் ஒரு அபூர்வமான குடும்பத்தில் வளர்ந்த நிறைவில் வந்தவை. ஆனால் நான் திருமணம் என்ற விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காததற்குக் காரணம், சிறுவயதிலிருந்து மனதில் புரையோடிப் போன வெறுப்பால் ஏற்பட்டது.''

''எனக்குத் தெரியும் நைனி. கேசவன் அங்கிள் சொல்லியிருக்கிறார்'' என்றதும் நைனிதா சரேலென அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''தவறாக ஏதுமில்லை நைனி. உனக்கு உறவினர், எனக்கு நண்பர் என்பதால் பரஸ்பரம் நம் இருவர் குடும்பத்தைப் பற்றியும் இருவரிடமும் பொதுவாகப் பேசியிருக்கிறார். உன்னை அடிக்கடி பார்த்துக் கொள்ள சொல்லிக் கூட என்னிடம் சொன்னார்.''

''ஓ அவர் சொன்னதால்தான் என்னை இங்கே அழைத்து வந்தாயா?'' என்றாள் நைனிதா ரோஷத்துடன்.

சிரித்தபடி அவள் கைகளைப் பற்றிய ரோஹித், முதன் முதலாய் அந்த மருத்துவமனை லாபியில் உன்னைப் பார்த்ததிலிருந்தே என் மனம் என் வசமில்லை என்றால் நீ நம்புவாயா நைனி?''

நைனிதா பதில் பேசாமல் மெல்லிய படபடப்புடன் அமர்ந்திருக்க ரோஹித் தொடர்ந்தான்.

''நீயோ நானோ உருவத்தைப் பார்த்ததும் மயங்கிப் போகும் அளவிற்கு பக்குவமடையாதவர்கள் இல்லை



நைனி. ஏனோ உன்னைப் பார்த்ததும் தினசரி சந்திக்கும் எத்தனையோ அழகிய பெண்களில் ஒருத்தியாக எனக்குத் தெரியவில்லை. உன் மிக அழகான கண்கள், அதில் தெரிந்த சலனமற்ற தன்மை... என்னை ஏனோ அசைய விடாமல் செய்தது. நீ உடன் இருந்தால் நம் வாழ்க்கை இனிமையானதாக, அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று தோன்றுகிறது. நான் உன்னை அவசரப்படுத்தவில்லை. யோசித்து முடிவு சொல். உன் பிரிவு எனக்குள் ஏற்படுத்தப் போகும் மாற்றத்தையும், வெளிநாட்டு வாழ்க்கை உனக்குள் ஏற்படுத்தும் பாதிப்பையும் உணர்ந்த பிறகு நாம் இணையலாம். அதுவரை நண்பர்களாக ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.''

ரோஹித்தின் வார்த்தைகள் மிகவும் பக்குவப்பட்டதாகத் தெரியவும், நைனிதா புன்னகையுடன் அமர்ந்திருந்தாள். நல்லவேளை இவன் ஐ.லவ்.யூ. நீயில்லாமல் நானில்லை என்றெல்லாம் வசனம் பேசி இருந்தால் எழுந்து ஓடி விட்டிருப்போம் என்று நினைத்தபடி ''கிளம்பலாமா?'' என்றாள் நைனிதா.

வீடுவரை அவளை கொண்டு வந்து விடும்போது பொதுவான விஷயங்களாக பேசினார்கள். அவள் இறங்குகையில் ''எப்போ கிளம்புகிறாய்? எத்தனை மணிக்கு ப்ளைட்?'' என்று விசாரித்தான்.

பெரிய பெட்டியை பிரித்து வைத்து நைனிதா பொருட்களை அடுக்கிக் கொண்டிருந்தாள். அணிவதற்கு இலகுவான உடைகளையும் எதற்கும் இருக்கட்டும் என்று கம்பளிக் கோட்டையும் மடித்து வைத்தாள். கேசவன் குடும்பத்திற்கென்று வாங்கிய பொருட்களையும் முக்கிய பேப்பர்கள் அடங்கிய சர்டிபிகேட்டையும்

தனியாக வைத்தாள். இன்னும் ஒரு மணி நேரத்தில் கிளம்பினால்தான் சரியாக இருக்கும். ஜன்னல் வழியே கீழே எட்டிப் பார்த்தாள். டிரைவர் காருக்கருகே நின்றிருக்க, அவனிடம் ஏதோ பேசிவிட்டு சரண் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

சரணைப் பார்த்தே அவள் வெகு நாட்கள் ஆகியிருந்தது. ஒன்று வீட்டில் இருக்க மாட்டான். அல்லது தூங்கிப் போயிருப்பான். ஒரு முறை அவள் நண்பகலில் கல்லூரியிலிருந்து வெளியே செல்ல நேர்ந்தபோது ஒரு பஸ் ஸ்டாப்பில் அவனது நண்பர்களுடன் சிகரெட் குடித்தபடி அமர்ந்திருந்ததைப் பார்த்தாள். கல்லூரிக்கு மட்டம் போட்டு விட்டு இங்கே என்ன செய்கிறான் என்று அவள் கேட்பதற்குள் வந்து நின்ற பஸ்சில் அவன் ஏறி விட்டிருந்தான். அதன் பிறகு நைனிதாவை சந்திப்பதையே அவன் தவிர்த்து வந்தான்.

நைனிதா டிரைவரை அழைத்து லக்கேஜை காரில் வைக்கச் சொல்லிவிட்டு சரணின் அறைக்குச் சென்றாள். சரண் கட்டிலில் கண் மூடி சாய்ந்திருந்தான். முகத்தில் தெரிந்த சோர்வு அவள் மனதைக் கலக்கியது.

"சரண்" என்றதும் திறந்த கண்கள் அவளைப் பார்க்கத் துணியாமல் வாயிலை வெறித்தன.

"நா இப்ப ஏர்போர்ட் கிளம்பிட்டேன் சரண். திரும்பி வர நாலைந்து மாதமாகும்.

அம்மாவும் அப்பாவும் அறியாமையில் தங்கள் வாழ்க்கையைத் தவற விட்டவர்கள். அவர்களை நினைத்து நீ உன் எதிர்காலத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. தன்னலமற்ற அன்பை குழந்தைகள் மீது செலுத்தத் தெரியாதவர்களிடம் அதை எதிர்பார்த்து சோர்ந்து



போவதால் என்ன பயன் சொல்லு? தங்கள் பிள்ளைகளிடம் உயிராய் இருக்கும் பலர் அவர்களுக்கு பணத்தை சேர்த்து வைப்பதில்லை. பணம் சேர்த்து வைத்திருக்கும் நம் பெற்றோர் பாசத்தை கொட்டவில்லை. உலகில் யாரு மற்ற அநாதைகள் எவ்வளவோ பேர் பணமும் இல்லாமல் பாசமும் கிடைக்காமல் சந்தோஷமாக வாழ முயற்சிக்கவில்லையா? உன் எதிர்காலத்தை சீரழிக்கும் எந்த விஷயத்திற்கும் இடம் தராதே சரண். உன் நன்மையில் எனக்கு அக்கறை இருக்கும் என்பதை நீ மறக்கக் கூடாது. நான் அடிக்கடி போன் பேசுகிறேன். நீயும் பேசு. வரட்டுமா" என்று நைனிதா எழுந்தபோது சரண் பதில் பேசாது தலையசைத்தான்.

நைனிதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. வழக்கமாய் சரண் அவள் பேசத் தொடங்கும் முன்பே எகிறுவான். "நீ ஒன்றும் எனக்கு சொல்ல வேண்டியதில்லை போ" என்பான். இன்று பொறுமையாக அவள் பேச்சைக் கேட்டதே அதிசயம்தான். சில மாத பிரிவு இவன் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்குமானால் அது நல்லதுதான் என்று நினைத்தபடி நைனிதா அம்மாவைப் பார்க்கப் போனாள்.

"புது இடம்... புதிய சூழ்நிலையில் நீ எங்களை மறந்து போகலாம். ஆனால் என்னைப் பார். நாலு சுவர்களுடன் பேசிக் கொண்டு..." என்றாள் கலாவதி பெருமூச்சுடன்.

"உடம்பைப் பார்த்துக்கோம்மா. அடிக்கடி லெட்டர் போடு" என்றாள் சாந்தம்மா கண்களைத் துடைத்துக் கொண்டு. உண்மையில் பெற்ற பாசத்தை விட வளர்த்த பாசம் பெரியது போலும்.

"நா வந்துடுவேன் சாந்தம்மா. உங்களைப் பார்த்துக்கங்க" என்று ஆறுதல் சொல்லிவிட்டு காரில் ஏறுகையில்

அப்பா இன்னும் வரவில்லையே என்றிருந்தது. நேற்றே அவரிடம் நினைவுபடுத்தி இருந்தாள். போன் செய்த போது அவரது செகரட்டரி "ஸார் போர்டு மீட்டிங்கில் இருக்கிறார். இப்போது கூப்பிட முடியாது" என்றாள். ஒரு பெருமூச்சுடன் காரில் செல்கையில் இதுபோன்ற பதில்கள் தான் அம்மாவை கோபப்படுத்துகின்றன போலும் என்று தோன்றியது.

ஏர்போர்ட்டில் இறங்கி டிராலியில் பெட்டிகளை தள்ளியபடி உள்ளே செல்ல முற்படுகையில் "ஹலோ" என்றான் ரோஹித் புன்னகையுடன். தன் வீட்டினர் யாரும் வாயில் வரைக் கூட வந்து வழியனுப்பாத நிலையில் சென்ற வாரம் சொன்னதை நினைவில் வைத்திருந்து ரோஹித் வழியனுப்ப வந்திருக்கிறான் என்பது சந்தோஷமாக இருந்தது.

அவன் கொடுத்த பொக்கேயை பெற்றுக் கொண்டு "தேங்க்ஸ்" என்றாள் பெரிய சிரிப்புடன்.

அவள் முகத்தின் மலர்ச்சியை, கண்களில் தெரிந்த மகிழ்ச்சியை மிகுந்த ஆர்வத்துடன் ரோஹித் கவனித்தான். பனிரெண்ற சிவப்பு பனியனில் அவளே ஒரு சிவப்பு ரோஜாவாகத் தெரிவதைப் பார்த்தவாறு நின்றிருந்தவனை நைனிதா உலுக்கினாள்.

"என்ன ரோஹித் யோசனை உனக்கு?"

"இல்ல. பூவுக்கே பூ கொடுக்கிற முதல் நாள் நான் தான்னு நினைக்கிறேன். நீ கையில் வைத்திருக்கும் இந்த பூக்களுக்கும் உனக்கும் வித்தியாசமே தெரியல. யு லுக் வெரி சார்மிங் டுடே."

"திரும்பவும் அடுத்தவங்க கற்பனையை திருடாதே ரோஹித். மில்டன் தன் கவிதையில சொல்றார். ஒரு பெண்ணைப் பத்தி சொல்லும்போது அவள் பூக்களோடு பூக்களா தெரிஞ்சான்னு."



"ஆனாலும் நீ ரொம்பத்தான் படிக்கற" என்றான் ரோஹித் கடுப்புடன்.

"எனக்கு புக்ஸ் படிக்கப் பிடிக்கும். படிக்கிறேன். நீ வேணா புதுசா எதாவது கற்பனை பண்ணேன்."

"அதுக்கும் நீதான் காரணம் நைனி. நான் சொன்ன மாதிரி நீ மட்டும் தினமும் என் எதிரில் வந்திருந்தால் நான் பெரிய கவிஞனாகி இருப்பேன்."

"நல்லவேளை. நான் மறைவாய் இருந்ததால் கலை உலகம் பிழைத்தது."

கலகலவென சிரித்தாள் நைனிதா.

கையிலிருந்த பெரிய கவரை அவளிடம் கொடுத்தான் ரோஹித்.

கனமான ஸாக்சும் பாதத்துடன் பாதி கால்களை மூடும் படியான ஷூவும் இருந்தது அதில்.

"நீ இதை வாங்கியிருக்க மாட்டேன்னு நினைச்சேன். குளிர் காலத்தில் அங்கே இந்த ஷூ இல்லாமல் நடக்கவே முடியாது." அவன் பொறுப்புடன் அவளுக்காக யோசித்து வாங்கியிருக்கிறான் என்ற உணர்வில் நைனிதா நன்றியுடன் புன்னகைத்தாள்.

"இன்னும் டைம் இருக்கு. அதற்குள் ஒரு காபி சாப்பிடலாம் வா நைனி" என்றபடி அவளை ஏர்போர்ட் காபி ஷாப்புக்கு அழைத்துச் சென்றான்.

"உனக்குப் போனவுடன் இந்திய பணத்தை மாற்றுவதற்கு நேரம் ஆகலாம். இதில் நார்வே 'க்ரோனர்கள்' இருக்கிறது. எமர்ஜென்சிக்கு இந்த பணத்தை செலவுக்கு வைத்துக் கொள். பிறகு நிதானமாய் உன் பணத்தை மாற்றிக் கொள்ளலாம்" என்றபடி நார்வே பணமான

க்ரோனர்களை ஒரு கவரில் போட்டு கொடுத்தான் ரோஹித்.

"வேண்டாம் ரோஹித். கேசவன் அங்கிள் இருக்கிறார் அங்கே மணி டிரான்ஸ்பருக்கு என்ன பிரச்சனை வரப் போகிறது எனக்கு?"

"ஆசிய பணத்தை எல்லா இடத்திலும் மாற்ற முடியாது நைனி. அத்துடன் நீ போய் சேர்ந்ததும் அவர்கள் வர தாமதமானால் டாக்ஸி பிடிக்கவோ, போன் பேசவோ, பதினான்கு மணி நேர பயணத்தில் இடையில் ஜெர்மனியிலோ, டென்மார்க்கிலோ ஏர்போர்ட்டில் ஏதாவது வாங்க பணம் வேண்டாமா? நாம் இருவரும் நண்பர்கள் என்ற பின் நீ தயங்க வேண்டியதே இல்லை. நான் முதன் முதலாய் போனபோது என் நண்பன் மைக்கேல் எனக்கு நார்வே கரன்ஸி கொடுத்தது அங்கு போனதும் எனக்கு மிகவும் உபயோகமாக இருந்தது."

நைனிதா பதில் பேசாது பணத்தை வாங்கிக் கொண்டாள்.

சில நிமிடங்களில் காபியை குடித்து முடித்ததும் "சொல்லு ரோஹித். உனக்கு நார்வேயிலிருந்து என்ன வேணும்?" என்றாள் நைனிதா.

"நிஜமா நான் கேட்கிறதை கொண்டு வந்து தருவியா?"

"நிச்சயம் தருவேன்."

"எனக்குப் புடிச்ச ஒரு பொண்ணு வெளிநாடு போறப்ப என்னோட இதயத்தையும் எடுத்துட்டுப் போறா. வரும் போது பத்திரமா என் இதயத்தோட சேர்த்து அவளையும் முழுசா கொண்டு வந்து எங்கிட்ட சேர்க்கணும்."

கலகலவென சிரித்த நைனிதா, "ரோஹித் யு ஆர் வெரி ரொமான்டிக். ஒரு நாளைக்கு உன் சர்ட்டிபிகேட்ஸ்



எல்லாம் பார்க்கணும். நீ நிஜமாவே டாக்டரான்னு சந்தேகமா இருக்கு" என்றாள்.

"டாக்டராகத்தான் இருந்தேன். சமீப காலமாய் பேஷண்டா மாறிட்டு வர்றேன்."

இருவரும் சிரித்தபடி உள்ளே செல்கையில் செக்யூரிட்டி செக்கிங்கிற்காக ஒவ்வொருவராய் செல்லத் தொடங்கினர்.

நைனிதாவின் டிராலியை தள்ளிக் கொண்டு வந்த ரோஹித் அவள் கைகளைப் பற்றிக் குலுக்கினான்.

"பை நைனி. ஹேவ்ய நைஸ் டைம்" என்கையில் குரல் கரகரத்தது அவனுக்கு.

நைனிதாவின் பெயர் ஸ்பீக்கரில் ஒலிக்கவும் அவனைப் பற்றியிருந்த அவள் கை ஒருமுறை இறுகியது. வீட்டிலிருந்து கிளம்பியபோது கலங்காத மனம் இப்போது கலங்கியது. கண்களை நிறைத்த நீரை அவன் பார்க்கும் முன் சடாரென திரும்பி செக்யூரிட்டி லௌஞ்சிற்குள் நுழைந்த போது இவனை பிரிவது நமக்கு சாத்தியம் இல்லை என்று தோன்றியது. அவன் சொன்னது போல் இதயம் நிஜமாகவே நழுவிப் போய் விட்டது போலிருந்தது. இந்த துக்கத்திற்குக் காரணம் காதல்தான் என்பது தெளிவாகப் புரிந்தது.

இமிக்கிரேஷன் செக்கிற்கு வரிசையில் நிற்கையில், "ஆமாம். நான் வசமிழந்துதான் போய்விட்டேன். இறுக்கமான சூழ்நிலையில் வளர்ந்த எனக்கு அந்த பளீர் சிரிப்பையும், உற்சாகத்தையும் பார்த்ததும் புத்தி பேதலித்துப் போய்விட்டது" என்றாள் வாய்விட்டு. முன்னால் நின்றிருந்த வெளிநாட்டு பெண் திரும்பி "ஏதாவது சொன்னீர்களா?" என்றாள் ஆங்கிலத்தில். கண்களில் நீரும் இதழ்களில் புன்னகையுமாய் 'இல்லை' என தலையசைத்தாள் நைனிதா.

# 7

ரோஹித் சோபாவில் அமர்ந்து டி.வி. சேனல்களை மாற்றிக் கொண்டிருந்தான். எதிலும் மனசு பதியாமல் முரண்டு பிடித்தது. பேசாமல் இன்றும் கிளம்பி மருத்துவமனை போயிருக்கலாம். வீட்டில் இருந்தாலே போர்தான். கண்களை மூடி பின்னால் சாய்ந்தான்.

நைனிதா நார்வே போய் ஒரு வாரமாகி விட்டது. போய் சேர்ந்ததும் அவளிடமிருந்து போன் வந்தது.

நைனிதாவுடன் அவன் வருடக் கணக்கில் பழகவில்லை. அவள் சென்னையில் இருந்தபோதும் இருவரும் அவரவர் வீட்டில்தான் இருந்தார்கள். இருந்தாலும் அவள் வெளிநாடு சென்றதும் அவனது உலகமே வெறிச்சோடிப் போனது. எப்போதும் போல் தன் வேலைகளை கவனித்தாலும் கூட வழக்கமான உற்சாகம் ஏற்பட மறுத்தது.

''ரோஹித் காபி குடிக்கிறியா?'' என்றபடி சபிதா வந்தாள்.

நைனிதா கிளம்பும்போது ஏர்போர்ட்டில் இருவரும் காபி சாப்பிட்டதும், அவள் தன் மனதை கொண்டு போவதாகச் சொன்னதும், அவள் கிண்டல் செய்ததும் நினைவு வர ரோஹித் புன்னகைத்தான்.

''ஐய் சித்தப்பா தூங்கிட்டே சிரிக்கறாங்க'' என்ற வைஷாலியின் குரல் கேட்டதும் கண்களைத் திறந்தான். எதிரே கையில் காபியுடன் சபிதா நின்றிருப்பதைப் பார்த்து விழித்தான்.

''ரோஹித் இது கனவா, நினைவா? பூலோகமா, தேவலோகமா? அப்படின்னு எதுவும் புரியல இல்லையா?'' என்றபடி சபிதா காபியைக் கொடுத்தாள்.



''இப்ப வேண்டாம்'' அண்ணி என்றான் ரோஹித்.

''என்ன சபிதா, நாம குடுத்தா பிடிக்குமா? குடுக்கறவங்க குடுத்தா பிடிக்கும்'' என்றாள் அங்கு வந்த சுகுணா.

''உங்க ரெண்டு பேருக்கும் வேற வேலை இல்லையா?'' என்றான் ரோஹித் எரிச்சலுடன்.

''ஏன் இவ்வளவு கோபம் வருது? உங்க ரெண்டு பேருக்கும் சண்டையா? இல்ல பாத்துக்க முடியலேன்னு வருத்தமா?'' என்றாள் சபிதா.

''அவ இங்கிருந்தாதானே அதெல்லாம். வெளிநாடு போயிட்டா. சோ நாங்க பாத்துக்கவுமில்ல சண்டை போடவும் இல்ல. போதுமா? இப்ப திருப்தியா?'' என்றபடி ரோஹித் எழுந்து போகவும் மற்ற இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''பிரிவு துன்பம்'' என்றாள் சுகுணா நமுட்டுச் சிரிப்புடன்.

''பாவம்தான்'' என்றாள் சபிதா.

பிளிண்டர்ன் ரயில் நிலையத்தில் இறங்கிய நைனிதா ரயில் நிலையத்தை ஒட்டியிருந்த யுனிவர்சிட்டி கட்டடத்திற்குள் நடக்கத் தொடங்கினாள். கசகசத்த வெய்யிலை சகித்தபடி மணியைப் பார்த்தபோது வாட்ச் ஒன்பது என்றது. இரவா, பகலா என்று ஒரு நிமிடம் குழம்பி பின் வாட்ச்சில் பகலைக் குறிக்கும் குறியீட்டைப் பார்த்ததும் நிம்மதியடைந்தாள். ஏனெனில் இங்கு கோடையில் சூரியன் அஸ்தமிப்பதே இல்லை. நடு இரவிலும் பகலைப் போலவே வெளிச்சம் இருந்தது. இருளில் தூங்கி பழகிய நைனிதா முதல் ஒரு வாரம் சிரமப்பட்டு இப்போதுதான் வெளிச்சத்துக்கு பழகியிருந்தாள். எப்போதும் ஒரே மாதிரி

இருக்கையில் இரவும் பகலும் தெரியாமல் அடிக்கடி [illegible] போகிறது என்று நினைத்தபடி வகுப்பறைக்குள் நுழைந்தாள். சக மாணவ மாணவிகளின் உற்சாகக் குரல் அவளை வரவேற்க, அவளும் அதில் கலந்து போய் பாடங்களை கவனிக்க ஆரம்பித்தாள்.

நைனிதா நார்வே வந்து இறங்கியதும் கேசவனும் அவர் மனைவி சங்கரவும் அவளை வரவேற்க ஏர்போர்ட்டுக்கு வந்திருந்தனர். நைனிதா நான்கு நாட்கள் அவர்கள் வீட்டில் சீராடி விட்டு பின் ஹாஸ்டலுக்கு வந்து விட்டாள்.

"விடுதியில்தான் படிக்கவும், சக மாணவர்களுடன் பழகவும் சந்தர்ப்பம் கிடைக்கும் அங்கிள். படிப்பு முடிந்ததும் உங்களுடன் வந்து தங்குகிறேன்" என்று அவள் சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

நைனிதாவுக்கு கல்லூரி பாடம் சுவாரஸ்யமாக இருந்தது. கல்லூரி புல்வெளியிலும், உணவு விடுதியிலும் கூட்டமாக அமர்ந்து சக மாணவர்களுடன் உரையாடுகையில் ஒட்டு மொத்த உலகையும் ஒரே இடத்தில் சந்தித்தது போல் இருந்தது. அவளது ரூம்மேட் டியாட்ரிஸ் இதற்குள் ப்ரண்டாகி விட்டிருந்தாள். தான் அமெரிக்காவிலிருந்து வந்திருந்ததாகக் கூறினாள். இருவருமாக விடுமுறை தினங்களில் நகரை வலம் வந்தார்கள்.

ரோஹித் அடிக்கடி மெயில் அனுப்பிக் கொண்டிருந்தான். காதல் என்று உருகி வழியவில்லை என்றாலும் 'உன்னை மிஸ் பண்ணுகிறேன்' என்பது அவனது எழுத்தில் தெளிவாகத் தெரிந்தது.

நைனிதவும் அவனை நினைக்கத்தான் செய்தாள். அவனை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவன் நல்லவன் என்பதில் அவளுக்கு எந்த சந்தேகமும்



இல்லை. ஆனால் திருமணம் என்ற வார்த்தை அவளுக்கு அலர்ஜியாக இருந்தது. அது தரும் நிர்ப்பந்தங்களும் கட்டுப்பாடுகளும் தன்னால் சமாளிக்க முடியாதவை என்று பட்டது.

"ஹாய் நைனிதா, நேற்றைய க்ளாஸ் பற்றிய குறிப்புகள் உன்னிடம் இருக்கிறதா?" என்றபடி அவள் அருகே வந்தான் ஜாலோ. ஜாலோ மெக்ஸிகோ சிட்டியைச் சேர்ந்தவன். நல்ல உயரமும் கம்பீரமும் உடைய அவனுக்கு நிறைய பெண் சிநேகிதிகள் உண்டு.

"என் அறையில் நோட்பேட் இருக்கிறது ஜாலோ" என்றாள் நைனிதா.

"நோ ப்ராப்ளம். நான் உன் அறைக்கு வருகிறேன்." இருவரும் பேசிக்கொண்டு நடக்கையில் ஜாலோ சொன்னான்.

"நைனிதா நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய். உன்னுடைய லவ்வரா இருக்க நான் மிகவும் விரும்புகிறேன். இந்த வீக் எண்ட் என்னுடன் டேட்டிங் வருகிறாயா?"

ஒரு நிமிடம் திகைத்த நைனிதா சமாளித்துக் கொண்டு சிரித்தாள். நம் ஊரில் ஒரு ஆண் இந்த வார்த்தை சொல்லியிருந்தால் அவன் போக்கிரித்தனமானவன். ஆனால் எந்த பாசாங்கும் இல்லாத இவர்களது உலகில் இந்த கேள்வி மிக இயல்பானது.

"ஸாரி ஜாலோ. எங்களது மரபில் ப்ரீசெக்ஸ் என்பது வழக்கத்தில் இல்லை" என்றாள் நைனிதா.

"அது என் துரதிர்ஷ்டம்" என்றபடி ஜாலோ நோட்டை வாங்கிக் கொண்டு கிளம்பிப் போனான்.

அவளுக்கு முன்பே அறைக்கு வந்து விட்டிருந்த பியாட்ரிஸ் "என்ன விஷயம்?" என்றாள் நைனிதாவிடம்.

நைனிதா சொன்னதும் "ஒரு நல்ல சான்ஸை மிஸ் பண்ணி விட்டாய். ஜாலோ ஒரு நல்ல காதலன். நான் கூட முன்பு அவனை காதலித்தேன்" என்றாள் அவளிடம்.

"நல்லவன்தானே பிறகு ஏன் அவனைப் பிரிந்தாய்?"

"எனக்கு போரடித்துவிட்டது." பியாட்ரிஸ் தோள்களை குலுக்கினாள்.

நைனிதா பதில் பேசாமல் மெயில்பாக்ஸை திறந்த போது ரோஹித்திடமிருந்து கடிதம் வந்திருந்தது.

"இப்போதெல்லாம் இங்கே ரோஜாக்களே பூப்ப தில்லை தெரியுமா? சென்னையே பாலைவனம் போலிருக் கிறது" என்ற அவன் வரிகளை படித்ததும் தன்னையறி யாமல் சிரிப்பு வந்தது. கடித முடிவில் அவன் எழுதி யிருந்தான்.

'சிலரை மறக்க முடியாது.

சில நினைவுகளையும் மறக்க முடியாது.

எனக்கு மட்டும்

அந்த சிலரும், அந்த நினைவுகளும்

நீதான்.'

நைனிதாவுக்கு மனம் உருகி நிற்கையில், இதை விட சிறப்பாக ஒருவன் காதலிக்க முடியுமா? என்று தோன்றியது.

'நைனிதாவுக்கு நாட்கள் ஒருவேகத்துடன் நகர்ந்தன. தினமும் புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதும் அடுத்தநாள் அதைப் பற்றி வகுப்பறைகளில் ஆசிரி யருடன் சேர்ந்து விவாதிப்பதுமாய் இருந்தார்கள். அடர்ந்த காடுகளுக்கு நடுவே டிரக்கிங் போனார்கள். அங்கிருக்கும் மாணவர் குடில் என்றழைக்கப்படும் குடில்களில் தாங ளே சமைத்து சாப்பிட்டார்கள். நைனிதாவுக்கு நடந்ததில்



கால்கள் வலி எடுத்தன. நார்வே தேசத்து காடுகளில் நடப்பதற்காகவே வரும் டூரிஸ்ட்டுகள் அருகே உல்லாசமாக நடந்து கொண்டிருந்தார்கள். நைனிதா ஒரு பாறையின் மீது கால்களைப் பிடித்தபடி அமர்ந்தாள். அவள் அருகே அமர்ந்த பியாட்ரிஸ்சிடம் "எப்படி இங்கே எல்லோரும் சளைக்காமல் நடந்து கொண்டே இருக் கிறார்கள்?" என்றாள் வியப்புடன்.

"குளிர்காலத்தில் வெளிச்சம் இல்லாமல் நாடே முடங்கி விடும். அதனால் கோடை காலத்தில் அபூர்வ மாய் கிடைக்கும் வெய்யிலை இங்கு யாரும் வீணாக்க மாட்டார்கள். கோடையில் அரசு அலுவலகங்கள் கூட ஒரு மணி நேரம் முன்னதாக மூடப்பட்டு விடும். ரயில், விமானங்களில் சலுகை கட்டணமும் உண்டு." என்றாள் பியாட்ரிஸ். மற்ற மாணவ மாணவியரும் வந்து அவர் களைச் சுற்றி அமர்ந்ததும் பேச்சு சுவாரஸ்யமாய் சென்றது.

ஒவ்வொருவரும் அவரவர் நாட்டைப் பற்றி பேசினார் கள். அடுத்தவர் தேசத்தை பற்றி, கலாச்சாரத்தைப் பற்றி, சினிமாவைப் பற்றி அலசினார்கள்.

இந்தியா வந்திருந்த போது தான் பார்த்த ஒரு தமிழ்ப் படத்தைப் பற்றி சொன்ன மேரியன், "அந்த படத்தில் ஒரு பெண்ணை ஒருவன் கற்பழித்து விடுகிறான். அவனுக்கே அவளை திருமணம் செய்து வைப்பதாக படம் முடிகிறது. நிஜத்திலும் அப்படித்தான் என்று என் இந்திய நண்பர் ஒருவர் சொன்னார். ஏன் அப்படி?" என்று கேட்டாள்.

ஒட்டுமொத்த இந்தியாவின் பிரதிநிதியாய் அங்கே அமர்ந்திருந்த நைனிதா, "ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் இந்திய கலாச்சாரத்தைப் பற்றி சொன்னாள். கற்பிழந்த பெண்களை மற்ற ஆண்கள் ஏற்க முன் வர மாட்டார்கள்" என்றாள்.

''இது மிகவும் கொடுமையான விஷயம்'' என்றான்
மார்கோஸ்.
''என் தவறு செய்தவனை போலீசில் கம்ப்ளைண்ட்
செய்வதில்லை?''
''அது அந்த பெண்ணின் குடும்பத்திற்கு அவமானம்
என்பதால் கோர்ட் வரை செல்ல மாட்டார்கள்.''
''ஒருமுறை கற்பழித்தவனை திருமணம் என்ற பெய
ரில் தினம் தினம் கற்பழிக்க செய்வது அந்தப் பெண்
ணுக்குச் செய்யும் அவமானமில்லையா?''
முகத்தில் அறை வாங்கியது போல் அந்தக் கேள்வியில்
அதிர்ந்தாள் நைனிதா. கல்லானாலும் கணவன் என்ற
வார்த்தைகளில் இந்திய பெண்களின் தன்மான உணர்
வுகள் மழுங்கடிக்கப்பட்டு விடும் என்பதை அவர்களுக்கு
எப்படிப் புரிய வைப்பதென தெரியாமல் திணறினாள்.
''இன்னும் பல விஷயங்களையும் அவர்கள் விவாதிக்
கையில்,
''நைனிதா உண்மையைச் சொல். இதுவரை உனக்கு
எந்த ஆணின் மீதும் எப்படி காதல் ஏற்படாமல் இருக்
கிறது?'' என்றாள் மேரியன் நம்ப முடியாமல்.
''காதல் ஏற்படத்தான் செய்யும். ஆனால் அது உங்
களைப் போல படுக்கை அறை வரை செல்லாது. பார்வை
யிலேயே முடிந்து போகும்.''
''வெறும் பார்வையில் என்ன சுவாரஸ்யம் இருக்கப்
போகிறது?'' என்றாள் பியாட்ரிஸ்.
ரோஹித்தின் ஆர்வம் மிகுந்த பார்வையும், பளீர்
சிரிப்பும் கண் முன் நிற்க, ''சுவாரஸ்யங்கள் தனிப்பட்ட
அனுபவங்களால் ஏற்படும் பியாட்ரிஸ்'' என்றாள் நைனிதா.



எட்டுவார படிப்பும் விரைந்து முடிந்துவிட, எல்லோரும்
யுனிவர்சிட்டி தரும் தகுதி சான்றிதழுக்காய் காத்திருந்
தனர்.
ஒவ்வொருவரும் அடுத்து என்ன செய்யப் போகிறோம்
என்பதைப் பற்றிச் சொன்னார்கள். இன்னும் சில மாதங்கள்
தற்காலிக வேலை பார்த்துக் கொண்டு விசா முடியும் வரை
தங்கியிருக்கப் போவதாக பெரும்பாலானோர் சொன்
னார்கள்.
நைனிதா எண்பது சதவீத மதிப்பெண் சான்றிதழ்
களையும், ஆசிரியர்களின் வாழ்த்துக்களையும் பெற்றுக்
கொண்டு பியாட்ரிஸ்சுடன் விடுதி நோக்கி நடக்கையில்
லேசாக இருட்டத் தொடங்கியது. பியாட்ரிஸ் சொன்னாள்.
''குளிர்காலம் தொடங்கி விட்டது நைனிதா. இருட்டத்
தொடங்கி விட்டது பார்த்தாயா? குளிரில் இங்கே
தனியாய் சமாளிப்பது கடினம். விரைவில் உனக்கொரு
காதலனை தேடிக் கொள்'' என்றாள்.
''எனக்கு அப்படி யாரும் தேவை என்ற எண்ணமே
வரவில்லை'' என்றாள் நைனிதா.
''அப்படியானால் நீ மனநிலை பாதிக்கப்பட்டவளாக
இருக்க வேண்டும். எதற்கும் ஒரு டாக்டரைப் பாரேன்''
என்றாள் பியாட்ரிஸ். சட்டென சிரித்த நைனிதா ''இது
மனக்கோளாறால் வந்ததில்லை. பியாட்ரிஸ். மரபு
கோளாறால் வந்த விஷயம். உங்களுக்கு அத்தியா
வசியமாக படக்கூடிய சில விஷயங்கள் பற்றி எங்களுக்கு
யோசித்துப் பார்க்கக்கூட தோணாது.''
பியாட்ரிஸ் அவள் சொல்வதை நம்ப முடியாமல்
பார்த்தாள்.

நைனிதா கேசவனுக்கு இன்னும் இரண்டு நாளில் அங்கு வருவதாக தகவல் தந்தாள்.

இங்கு வந்த பிறகு அவள் அப்பாவிடம் பேச முயற்சித்த போதெல்லாம் அவர் பிஸியாக இருந்தார். அல்லது ஓரிரு வார்த்தைகளுடன் பேச்சை முடித்துக் கொண்டார். அம்மா எப்போதும் போல் அப்பாவை பற்றிய குறைகளை அடுக்கவும் நாம் இல்லாதது இவர்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது. இரண்டொரு முறை சரணிடம் பேசிய போது தான் படிப்பில் கவனம் செலுத்துவதாக அவன் சொன்னதைக் கேட்க அவளுக்கு நிம்மதியாக இருந்தது.

அன்று ரோஹித்திற்கு போன் செய்து படிப்பு முடிந்து விட்டதாகச் சொன்னதும் "எப்போது திரும்பி வருகிறாய்?" என்றான் ஆர்வமுடன். அவன் குரலின் அவசரத்துக்கு சிரித்த நைனிதா "விசா முடியும் வரை இருக்கலாம் என்றிருக்கிறேன். அடிக்கடி வர முடியாது இல்லையா? அதனால் கொஞ்ச நாள் இருந்து விட்டு ஜெர்மனி, டென்மார்க் எல்லாம் பார்த்துவிட்டு வரலாம் என்றிருக்கிறேன்."

"ஊர் சுத்தி உன்னை மிரட்டவே ஆளில்லாம போச்சு" என்றான் ரோஹித் எரிச்சலுடன்.

கலகலவெனச் சிரித்தாள் நைனிதா. "உனக்கேன். அதுக்கு இத்தனை கோபம் வருது?"

"உனக்கு புரியலையா நைனி?" என்றான் மிருதுவான குரலில். எத்தனையோ ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பாலிருந்து அந்த குரல் அவளை சிலிர்க்க வைத்தது.

பொதுவாய் சிறிது நேரம் பேசிவிட்டுப் போனை வைக்கையில் "உனக்கு விடுமுறை கிடைக்குமானால் ஒருமுறை இங்கு வந்து போ ரோஹித்" என்றாள் நைனிதா.

"பார்க்கலாம்" என்றபடி போனை வைத்தான் ரோஹித்.

அடுத்த நாள் கலாசாலை. விடுதியில் பிரிவுபசார விழா நடந்தது.

"நைனிதா நான் உன்னை மறக்க மாட்டேன்" என்றாள் ஜாலா.

"உனக்குப் பொருத்தமாய், மனதுக்குப் பிடித்தமாய் மனைவி அமையட்டும்" என்றாள் நைனிதா.

"மனைவியா?" என்றான் அவன் திடுக்கிட்டு. "நான் ஒரு நிரந்தர காதலன். திருமணத்தில் எனக்கு நம்பிக்கையில்லை."

நைனிதா பதில் பேசாமல் தோள்களைக் குலுக்கினாள்.

விடை பெறுகையில் பியாட்ரிஸ் நைனிதாவை அணைத்துக் கொண்டு, "உன்னைப் போல நல்ல பெண்ணை சந்தித்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நீ கண்டிப்பாய் என் நாட்டிற்கு விருந்தாளியாய் வர வேண்டும். உன் மன பயங்களை எல்லாம் விட்டு விட்டு நார்மல் வாழ்க்கை வாழ வேண்டும்" என்றாள் பிரியத்துடன்.

'உடலின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாழ்க்கை தான் நார்மலானது' என்ற அவளது கொள்கைக்கு பதில் சொல்லாமல் நைனிதா பொதுவாய் புன்னகைத்து 'பை' என்றாள்.

நைனிதா தன் பெட்டிகளுடன் கேசவன் வீடு செல்ல டாக்ஸி பிடித்தபோது "நான் நேஷனல் தியேட்டர் அருகே இறங்கிக் கொள்கிறேன். வாடகையைப் பகிர்ந்து

கொள்ளலாம்'' என்றபடி உடன் வந்தாள். வகுப்பில் அவளுடன் படித்த நீனா பக்லெண்ட் எனும் நார்விஜிய பெண்.

''நீனா நீ எங்கே வேலை செய்கிறாய்?'' என்றாள் நைனிதா அவளிடம்.

''நான் ஒரு பி.ஹெச்.டி. ஸ்காலர். அரசின் டீஸ் ரிசர்ச் சென்டரில் வேலை செய்து கொண்டிருந்தேன். ஆனால் இப்போது லாங் லீவ் எடுக்க வேண்டியிருக்கிறது. அது தான் கவலையாக இருக்கிறது.''

''ஏன்? உடல்நிலை சரியில்லையா உனக்கு?''

''அதெல்லாம் இல்லை. நான் கர்ப்பமாக இருக்கிறேன்.'' இவளுக்கு இன்னும் திருமணமாகவில்லை என்ற நினைவை நைனிதா உள்ளுக்குள் அமுக்கினாள்.

''உனக்கு குழந்தை பிறந்ததும் அதற்கு இரண்டு வயதாகும் வரை விடுமுறை கிடைக்குமே! பிறகு என்ன கவலை?'' என்றாள் நைனிதா.

''குழந்தை பிறந்தால் அதற்கு ஒரு வயது முடியும் வரை தாய்க்கும். அடுத்த வருடத்தில் தந்தைக்கு ஒரு வருடமும் ஊதியத்துடன் விடுப்பு கிடைக்கும். ஆனால் இங்கு பெரும்பாலும் சிங்கிள் பேரண்ட்டாக, கணவன் மனைவி தனியாக வசிப்பதால் சலுகைகளை பயன்படுத்த முடிவதில்லை.''

அரசு சலுகைகளை அளித்தும் அதை பயன்படுத்திக் கொள்ளாமல் பிரச்சனையை ஏற்படுத்திக் கொள்கிறவர்களை என்ன சொல்வது என்று நைனிதா யோசித்தாள். இங்கே இளம் தாய்மார்களுக்கு அரசாங்க அலவன்ஸ் கிடைக்கிறது. குழந்தைக்கு தந்தை யார் என்று எந்த



இடத்திலும் யாரும் கேள்வி கேட்டதில்லை. மக்கள் தொகை பெருகியே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் இருப்பதால் கல்யாணமில்லாமல் குழந்தைப் பெற்றுக் கொள்வது சட்ட விரோதம் அல்ல. ஒரு பெண் மூன்று குழந்தைகளை மூன்று ஆண்கள் மூலம் பெற்றாலும் அது தலை குனிவு இல்லை. நேஷனல் தியேட்டர் அருகே நீனா பக்லெண்ட் இறங்கிக் கொள்ள நைனிதா கேசவன் வீட்டிற்குச் சென்றாள்.

கேசவன் மனைவி கங்கா அவளை அணைத்துக் கொண்டு ''இந்த படிப்பு உனக்கு உபயோகமாக இருந்ததா?'' என்றாள்.

''படிப்பைவிட பழகிய மனிதர்களிடம் நிறைய கற்றுக் கொண்டேன்'' என்றாள் நைனிதா.

## 8

பாலசுந்தரம் யோசனையுடன் ஹாலில் அமர்ந்திருந்தார். குழந்தை ப்ரணவ்வுடன் அருகே வந்து அமர்ந்த மாணவியிடம் 'ராஜா வந்து விட்டானா?'' என்றார்.

''அப்பவே வந்துட்டானே! சாப்பிட்டுவிட்டு மேலே போனான்.''

எதிரே அமர்ந்து ஸ்போர்ட்ஸ் சேனல் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திக்கிடம் 'ராஜாவைக் கூப்பிடுப்பா' என்றார் பாலசுந்தரம். கார்த்திக் கூப்பிட்டதும், கீழே இறங்கி வந்து ''என்னப்பா?'' என்றான் ராஜா.

''நேற்று மெயிலில் வந்த கடிதத்தைப் பார்த்தாயா? என்ன முடிவு செய்திருக்கிறாய்?'' என்றார் பாலசுந்தரம்.

''பார்த்தேன். ஸ்வீடனிலும் அதன் அருகிலுள்ள சில நாடுகளிலிருந்தும் துணிகளை கேட்டு வந்திருக்கிறது.

ஆனால் நம்மால எந்த அளவு முடியும் என்பது தெரிய வில்லை" என்றான் ராஜா.

"ஏன் முடியாது?" என்றான் கார்த்திக். "தன் மனிதனாக நின்று உலகம் முழுக்க தொழிலை விரிவு படுத்தியவர்கள் இருக்கிறார்கள். உன்னுடன் அப்பாவும் நானும் துணை நிற்கிறோம். என்ன செய்ய வேண்டும் சொல்" என்றான்.

"துணியின் தரத்தை மேம்படுத்தி தயாரிப்பை அதி கரிக்க வேண்டும். அதை இங்கிருந்தபடி அப்பா கவனித் துக் கொள்வார். ஆனால் நாம் சரக்கு அனுப்பும் இடத்தில் ஏற்படும் தேவையின் அளவு, விலை, முக்கியமாய் எந்த வகையில் பணப்போக்குவரத்து மேற்கொள்வது என்பதை எல்லாம் நாம் இருவரில் யாராவது ஒருவர் அங்கு போய் பேசி முடிவு செய்ய வேண்டும். யார் போவது?" என்றான் ராஜா.

"நான் போகிறேன்." என்றான் அப்போதுதான் மருத் துவமனையிலிருந்து உள்ளே வந்த ரோஹித்.

"நீயா?" என்றார்கள் மூவரும் வியப்பாய்.

"ஜோக் அடிக்காதே ரோஹித். நாங்க சீரியசாய் பேசிட்டு இருக்கோம்" என்றான் கார்த்திக் கடுப்புடன்.

"கார்த்திக் அண்ணா நானும் சீரியசாய்த்தான் சொல் கிறேன்." "உள்ளூரில் மீட்டிங் என்றாலே வராதவன் வெளிநாட்டு பிஸினசை கவனிக்கப் போகிறேன் என்றால் நாங்கள் எப்படி நம்புவது?"

"நம் தொழிலில் எனக்கு ஆர்வம் வரக் கூடாதா என்ன?"

"இது ரொம்பப் புதுசா தெரியுதே!"



"கார்த்திக் அவனுக்கு விருப்பம் இருந்தால் செய்யட் டுமே!" என்றான் ராஜா.

"உனக்கு முன் அனுபவம் இல்லாமல் அங்கே போய் என்ன செய்வாய்?" என்றார் பாலசுந்தரம்.

"கேசவன் அங்கிளைக் கேட்டுக் கொள்வேன் அப்பா. ப்ளீஸ் எனக்கு நார்வே போகணும்" என்றான் ரோஹித்.

பாலசுந்தரம் மறுபடி யோசிக்க "அவன் ஆசைப் படறாம்ப்பா. போய்ட்டு வரட்டும்" என்றான் ராஜா.

பாலசுந்தரம் வேறு வழியின்றி தலையசைத்துவிட்டு எழுந்து படுக்கப் போனார். அப்பா போனதும் ரோஹித்தின் அருகே வந்த கார்த்திக் "உன் தொழில் ஈடுபாட்டை எல்லாம் நான் நம்பல. ஏதோ காரணத்தோடுதான் கிளம்பற. எதுவானாலும் நம்ப ஆபீஸ் வேலையை மறந்துவிடாதே" என்றான் சிரித்தபடி.

வீட்டிலிருந்தவர்கள் படுக்கப் போனதும் மைத்துனன் அருகே வந்த சுகுணா "அந்த பொண்ணு நார்வேக்கு தான் போயிருக்குதா தம்பி?" என்றாள் அப்பாவியாய் விழிகளை விரித்து. ரோஹித் கோபமாய் முறைக்க முயற்சி செய்து முடியாமல் சிரித்தான்.

கேசவனின் வீடு பெரியதாகச் சுற்றிலும் புல்வெளி யுடன் அழகானதாக இருந்தது. அவ்வளவு பெரிய வீட்டில் அவர்கள் இருவர் மட்டுமே இருந்தனர். கங்கா நல்ல இந்திய சமையலாக அவளுக்கு செய்து போட்டாள். தங்களுக்கு பெண் குழந்தை இல்லாத குறையை இந்த சில நாட்களில் தீர்த்துக் கொள்ளப் போவதாக அவள் சொன்னதைக் கேட்ட நைனிதாவுக்கு சிரிப்பு வந்தது.

"ஏன் உங்க மருமகள் ஸாராவுடன் வசிக்க வேண் டியதுதானே ஆன்ட்டி" என்றாள் அவனிடம்.

"ஸாரா ஒரு ஸ்வீடிஷ் பெண் நைனிதா. அவளுடைய பழக்கங்களும் நம்முடையதும் வேற. கௌசிக்கிற்கு காதலிக்க ஆரம்பித்ததும் முரண்பாடுகள் பழகிவிட்டன. அவளுடைய சந்தோஷம்தான் முக்கியம்னு நாங்களும் விட்டுக் கொடுத்தோம். ஆனால் மருமகள் எங்கள் எதிரில் அமர்ந்து புகைப்பதையும், மது அருந்துவதையும் எங்களால் ஜீரணிக்க முடியவில்லை."

"அப்ப நீங்க இந்தியாவுக்கு வந்து விடலாமே ஆன்ட்டி?"

"இந்த சொகுசு வாழ்க்கை பழகிப் போய் விட்டது நைனிதா. இங்கே இந்திய சாமான்கள் கிடைக்கின்றன. நார்வீஜிய மக்கள் நல்லவர்கள். நிறைய இந்து, பாகிஸ் தானிய சிநேகிதர்கள் இருக்கிறார்கள். இங்கு வயதானவர் களுக்கு, வேலையில்லாத இளைஞர்களுக்கு குழந்தை களுக்கு எல்லாத்துக்கும் அலவன்ஸ் உண்டு."

கலாச்சார முரண்பாடுகள் விளைவிக்கும் சஞ்சலங்கள் ஒரு பக்கம்.

பணக்கார சமூகம் ஏற்படுத்தும் பாதிப்பு மறுபக்கம் என்றுதான் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் வாழ்க் கையைக் கழிக்கின்றனர். அவர்களின் இரண்டாவது தலைமுறையினர்தான் அதிர்ஷ்டசாலிகள். குழப்பம் ஏது மின்றி இந்தியாவை மறந்து விட்டு வெளிநாட்டிலேயே செட்டில் ஆகி விடுகிறார்கள்.

அன்று மாலையில் நைனிதா கேசவன் தம்பதிகளுடன் மனித உரிமைக்கு குரல் கொடுக்கும் அமைப்பான ஆம்நெஸ்டி இன்டர்நேஷனல் வரை போய் பார்த்துவிட்டு வந்தார்கள். வீட்டுக்கு வந்து சேருகையில் வீட்டு வாயிலில் ஒரு டாக்ஸி நின்றிருந்தது. அதிலிருந்து இறங்கிய



ரோஹித்தைப் பார்த்ததும் கூட இருப்பவர்களை மறந்த வளாக அவன் அருகே ஓடினாள் நைனிதா.

"ஏய் நீ வர்றதா சொல்லவேயில்லையே!" என்றாள் ஆர்வத்துடன் அவன் கைகளைப் பற்றி.

"ஒரு சர்ப்ரைஸ் கொடுக்கணும்னு நினைச்சேன்."

"நல்ல சர்ப்ரைஸ். நான் எங்காவது வெளியே போயிருந் தால்?"

"சோ வாட்? நான் அங்கிள் ஆன்ட்டியை பாத்துட்டுப் போயிடுவேன். நானென்ன உன்னைப் பாக்கவா வந் தேன்!"

"ராஸ்க்கல்..." செல்லமாக அவன் முதுகில் குத்தினாள் நைனிதா. நைனிதாவின் அந்த சிரிப்பும் கலகலப்பும் ரோஹித்திற்கு மனசுக்கு நிறைவாக இருந்தது. கண்களில் படிந்து போன சோகமும் இறுகிய முகமுமாய் சென்னை யில் வளைய வந்த நைனிதா தன் கவலைகளை எல்லாம் மூட்டைக்கட்டி அங்கேயே போட்டுவிட்டு வந்தவளைப் போலக் காணப்பட்டாள். முகத்தின் பளபளப்பு கூடிப் போய் இதமான சீதோஷ்ண நிலையில் கன்னங்கள் சிவந்து கவர்ச்சியாகக் காணப்பட்டாள். "நைனி, இந்த ஊர் க்ளைமேட் உனக்கு நல்லா ஒத்துக்குச்சின்னு நினைக் கிறேன். முன்பை விட அழகா ஸ்வீட்டா... பார்த்தவுடனே உன்னை..."

"என்னை?"

ரோஹித் பதில் சொல்வதற்குள் கேசவன் குறுக்கிட் டார். "நாங்களும் இங்கேதான் இருக்கிறோம். நினைவிருக் கிறதா உங்களுக்கு?" என்றார் கிண்டலாய்.

"ஐ யாம் ஸாரி அங்கிள். நாங்க உங்களை இங்கே இருக்க சொல்லவில்லையே! நீங்க வேண்டுமானால் உள்ளே போங்க" என்றான் ரோஹித்.

"கங்கா என்ன இது?" என்றார் கேசவன் திகைப்புடன் மனைவியிடம்.

"சின்ன பசங்களுக்கு இடையே பேசப்போனால் அப்படித்தான். வாங்க நாம போகலாம்" என்றபடி கங்கா உள்ளே போக எல்லோரும் சிரித்தபடி பின் தொடர்ந் தார்கள்.

கங்கா சமைக்கப் போக, மூவரும் உதவி செய்வதாக கூடவே போய் சமையலறையில் அட்டகாசம் செய்தார் கள். சாப்பாடானதும் உட்கார்ந்து சிரிப்பும் விளையாட்டு மாய் சாப்பிட்டார்கள்.

ரோஹித் வியாபார விஷயமாய் கேட்ட தகவல்களை கூறிவிட்டு, சில இடங்களுக்குத் தானும் உடன் வருவ தாகச் சொன்ன கேசவன், "உனக்கு எப்போது வியாபாரத் தின் மீது இவ்வளவு அக்கறை வந்தது? உன் டாக்டர் தொழில் என்னவாயிற்று?" என்றார் வியப்புடன். நைனி தாவை ஒரு பார்வை பார்த்த ரோஹித் சிரிப்புடன் சொன் னான்.

"அங்கிள் கொஞ்ச நாட்களுக்கு முன் என் மருத்துவ மனைக்கு மன நோயாளிகளைப் பற்றி அறிவதற்காக ஒரு பெண் வந்தாள். அவளைப் பார்த்ததிலிருந்து நான் என்னையும், என் தொழிலையும் மறந்து போனேன். சாப்பிட முடிவதில்லை. படுத்தா தூக்கம் வரவில்லை. எழுந்தா நடக்க முடியல. மருத்துவமனைக்குப் போகும் போது லாபியில் அவள் நிற்கிற மாதிரி இருக்கிறது. எதிரே வரும் வண்டிகளில் ஜன்னலருகே அவள் முகம்



தெரிகிறது. என் வீட்டு மாடியில்.. என் அறையில்.. எங்கும் அவள் முகம்தான்."

"இது ரொம்ப மோசமான வியாதி போலிருக்கே ரோஹித்" என்றாள் கங்கா.

"ஆமாம் ஆன்ட்டி ரொம்ப மோசமான வியாதி. இப்பக் கூட பாருங்க எதிரில் அவள் உட்கார்ந்திருக்கிற மாதிரியே இருக்கு" என்றான் எதிரில் அமர்ந்திருந்த நைனிதாவைப் பார்த்து.

"உன் மெடிக்கல் ஸயன்ஸ் இதுக்கு என்னப்பா சொல் லுது?" என்றார் கேசவன்.

"வேறென்ன, உன்னை துரத்தற அந்த பொண்ணை நீயும் துரத்துன்னு சொல்லுது."

"அப்ப அந்த பொண்ணைத் துரத்திக் கொண்டுதான் நார்வே வந்திருக்கேன்னு சொல்."

"ஆமாம் அங்கிள்."

"அந்த பொண்ணு யார்னு சொல் ரோஹித்."

"நைனிக்கு கூட அவளைத் தெரியும் அங்கிள்" ரோஹித் அவளை மாட்டி விட்டான்.

"அது யார் நைனிதா அந்த பெண்?" என்றார் கேசவன் அவளிடம்.

ரோஹித்தை கோபத்துடன் முறைத்த நைனிதா. "இந்த தடிமாட்டுக்கு ஏற்ற எருமை மாடு எதாவது இருக்கும்" என்றாள் எரிச்சலுடன்.

"தேங்க் யூ" என்றான் ரோஹித் அவளிடம் மெல்லிய குரலில்.

"எதுக்கு?"

''உன்னை எருமை மாடுன்னு ஒத்துக்கிட்டதுக்கு.''

அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு நைனிதா சாப்பாட்டைத் தொடருகையில் இது போல் பேச்சும் சிரிப்புமாய் அமர்ந்து தன் வீட்டில் இதுவரை சாப்பிட்டதே இல்லை என்பது நினைவு வந்தது.

ரோஹித் வியாபார விஷயமாகவும் நைனிதா ஊரை சுற்றிப் பார்க்கவுமாக இருவரும் கேசவன் தம்பதிகளிடம் சொல்லிக் கொண்டு ஸ்வீடன் போகும்போது நைனிதா இதையே அவனிடம் வெளிப்படையாகச் சொன்னாள்.

''நான் இதுவரை இவ்வளவு சிரிப்பும் கலகலப்புமாக இருந்ததே இல்லை ரோஹித்.''

''ஆயுசுக்கும் இப்படியே இருக்கலாம். நீ என் கூட இருந்தால்'' என்றான் ரோஹித்.

''ரோஹித் உன்னிடம் உண்மையை ஒத்துக்கொள்ள எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இதுவரை நான் யார் மீதும் இது போன்ற ஒரு பிரியத்தை வைத்ததில்லை. நீ சொன்னது போல் ஆயுசுக்கும் நல்ல துணையாக உன்னுடன் இருக்க ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் நான் வளர்ந்த சூழ்நிலையால் இந்த திருமணம் என்ற விஷயமே என்னை பயமுறுத்துகிறது. பலர் அறிய தலைகுனிந்து உன் தாலியை ஏற்று நீ வரும் நேரம் பூ வைத்து வாசலில் காத்திருந்து... பார்க்கிறவர்களிடமெல்லாம் என் கணவர் என்று பெருமை பேசி.. இதெல்லாம் என்னால் முடியாது ரோஹித். நிச்சயமாக முடியாது.''

''தேவையே இல்லை நைனி'' என்றான் ரோஹித் குரலில் மென்மையுடன். ''இரண்டு மனங்களின் ஆத்



மார்த்தமான பிணைப்பிற்கு முன் சம்பிரதாயங்கள் வலு விழந்து போய் விடுவதாகத்தான் நான் உணர்கிறேன்.''

''ரோஹித் பணத்தை வாரி இறைத்து வேதமந்திரங்கள் முழங்க திருமணம் செய்து கொண்ட என் பெற்றோர் தங்கள் வாழ்க்கை முறையால் அந்த பந்தத்தையே அவ மதித்தார்கள். ஊரறிய மாலை மாற்றிக் கொண்டதால் அவர்களைத் தம்பதிகள் என்கிறது சமூகம். ஆனால் அவர்களுக்குள் தாம்பத்யமே இல்லை. சமூகத்தின் முன், உறவினர் முன்பு, பெற்ற குழந்தைகளின் முன்னால்கூட நடிக்கிறார்கள்.''

நைனிதாவின் குரல் தழுதழுக்க ரோஹித் அவள் தோளைத் தட்டி புன்னகைத்தான்.

''தவிர்க்க முடியாதவைகளை ஏற்றுக் கொள்ள பழகிக் கொள்ள வேண்டும் நைனி.''

மூடியிருந்த கண்களைத் திறந்து ''உண்மைதான்'' என்று புன்னகைத்தாள் நைனிதா.

நைனிதாவும் ரோஹித்தும் ஸ்வீடன் போய் சேர்ந்ததும் கேசவனின் மகன் கௌசிக்கும் அவன் மனைவி ஸாராவும் ஆர்ப்பாட்டமாக அணைத்துக் கொண்டார்கள். அவர்கள் போனது ஒரு வீக்எண்ட். எனவே நால்வரும் சேர்ந்து நகரத்தைச் சுற்றினார்கள். நார்வேயின் தூங்கி வழியும் ஆஸ்லோ நகருக்கு நேர் மாறாய் மற்ற ஐரோப்பிய நகரங்களை போல் சுறுசுறுப்பாக இருந்தது ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் நகரம். நார்வே போலவே ஸ்வீடனிலும் கட்டுப்பாடில்லாத திறந்த சட்ட திட்டங்கள், சலுகைகள், வெளி சமூகமாய் இருந்தது.

நால்வரும் 'வைக்கிங்' மியூசியம் பார்க்கப் போனார்கள்.
அறுநூறு வருஷமாய் கடலில் புதையுண்டு கிடந்த
'வைக்கிங்' கப்பலை எப்படி சேதமில்லாமல் மீட்டார்கள்
என்பது பற்றிய விளக்கப் படத்தை பார்த்ததும் நைனிதா
வுக்கு சிலிர்த்துப் போனது. ரசாயன, பூச்சுகளால் மரம்
கெடாமல் பாதுகாக்கப்பட்டு சிற்ப வேலை சிதையாமல்
கப்பல் திற்பதை நேரில் பார்த்தபோது இது அறுநூறு
வருடங்கள் உப்பு தண்ணீரில் கிடந்தது என்று ரோஹித்
தால் நம்ப முடியவில்லை.

''உலகப் புகழ் பெற்ற 'நோபல் பரிசு' ஸ்வீடனில்தான்
வழங்கப்படுகிறது'' என்ற கௌசிக், ஸ்டாக் ஹோமில்
டவுன்ஹாலை அடுத்தாற் போலிருக்கும் பாங்க்வெட்
ஹாலை காட்டினான். ''இங்கு மரபுப்படி விழா நடத்தி பரிசு
வழங்கப்படும்.''

ஸ்வீடனின் பழைய வீடுகளையும், கடைத் தெருக்
களையும் 'ப்ராடெக்டெட்' ஏரியாவாக பாவித்து பழமை
மாறாமல் சுத்தமாக பராமரித்து வருவதை பார்க்கையில்
நம் நாட்டில் சிதைந்து கிடக்கும் புராதன கோட்டைகள்,
சரித்திர புகழ் பெற்ற இடங்களின் அவல நிலை நினை
வுக்கு வந்து நைனிதாவுக்கும் ரோஹித்திற்கும் வருத்த
மாக இருந்தது.

கௌசிக்கின் வீட்டில் இவர்களுக்காக ஒரு விருந்து
ஏற்பாடு செய்திருந்தனர். அதற்கு அழைக்கப்பட்டிருந்
தவர்களில் 'சம்போ'க்கள் எனப்படும் பல தம்பதிகளை
ரோஹித்தும் நைனிதாவும் சந்தித்தனர்.

''இவர்கள் கணவன் மனைவிதான். ஆனாலும் திரு
மணம் செய்து கொள்ளாமலேயே வாழுபவர்கள்'' என்றாள்
ஸாரா.



''ஏன் செய்து கொள்ளவில்லை?'' என்றான் ரோஹித்.

''திருமணம் என்பது பணவிரயம். விவாகரத்து வேண்டு
மெனில் உடனே கிடைக்காது. அலைய வேண்டி
இருப்பதில் நேரமும் வீணாகும்'' என்றும் விளக்கினான்
கௌசிக்.

அங்கிருந்த சற்று வயதான 'சம்போ' தம்பதிகளிடம்
பேசியபோது தாங்கள் இருபத்தி ஐந்து வருடமாய் சேர்ந்து
வசிப்பதாகச் சொன்னார்கள்.

''இத்தனை வருடங்கள் வாழ்ந்த பிறகும் உங்களுக்கு
திருமணம் செய்து கொள்ளும் எண்ணமே வரவில்லையா?''
என்றாள் நைனிதா.

''நாங்கள் முதலில் சந்தித்தபோது பிடித்தால் தொடர்
வது, இல்லை எனில் விலகிக் கொள்வது என்ற எண்
ணத்தில்தான் சேர்ந்து வசித்தோம். வருடங்கள் செல்லச்
செல்ல எங்களுக்குள் ஏற்பட்ட அன்பு இறுகிப் போன
போது, இந்த அன்பிற்கு எந்த அரசாங்கமும், சமூகமும்
முத்திரையிட வேண்டிய அவசியமில்லை என்று தோண
ஆரம்பித்து விட்டது. ஒண்டர்புல்'' என்றாள் நைனிதா
வியப்புடன்.

''இவர்களது அன்பு எத்தனை சத்தியமானது!'' என்றான்
ரோஹித் தமிழில்.

நைனிதாவும் ரோஹித்தும் டென்மார்க், ஜெர்மனி,
ஸ்விட்சர்லாந்து என சுற்றிவிட்டு, ரோஹித்தின் வியாபார
விஷயங்களையும் முடித்துக் கொண்டு, திரும்ப நார்வே
வந்தபோது கேசவனின் உடல்நிலை சரியில்லாத தம்
பியைப் பார்க்க கேசவனும், கங்காவும் லண்டன் கிளம்பிக்
கொண்டிருந்தனர்.

"நைனிதா நாங்கள் உடனே கிளம்ப வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். இந்த குளிர் காலத்தில் உங்களை விட்டுப்போக மனசே இல்லை" என்றாள் கங்கா சங்கடத்துடன்.

"நீங்க வருத்தப்படாமல் போய் வாருங்கள் ஆன்ட்டி. நாங்கள் சமாளித்துக் கொள்வோம்" என்றாள் நைனிதா.

"ஸ்டோரேஜில் நிறைய உணவுப் பொருட்கள் வைத்திருக்கிறேன். சமைத்த உணவுகளும் இருக்கின்றன. அதையும் சூடு செய்து கொள்ளலாம்" என்ற கங்கா நினைவு வந்தவளாக "உனக்கு சமைக்கத் தெரியுமா?" என்றாள்.

"நான் எதுக்கு இருக்கேனாம்? சூப்பரா சமைப்பேன். நீங்க கவலைப்படாம கிளம்புங்க ஆன்ட்டி" என்றான் ரோஹித்.

"அதானே இந்தியாவிலிருந்து வந்த சமையல்காரன் இருக்கையில் என்ன யோசனை உங்களுக்கு?" என்று சிரித்தாள் நைனிதா.

கிளம்புமுன் ரோஹித்தையும், நைனிதாவையும் அணைத்துக் கொண்ட கேசவன் "எனக்கு உங்க ரெண்டு பேரையும் இப்படி பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கு. ரோஹித் என் கண் முன்னால் வளர்ந்தவன். நைனிதா என் பெண். இருவருக்கும் பொருத்தமாக இருக்கும் என்று இந்தியா வந்தபோதே நினைத்தேன். அப்படியே நடக்கட்டும் என்று இப்போது ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்" என்றார் உணர்ச்சி வசப்பட்டு.

இருவரும் கிளம்பிச் சென்றதும் உள்ளே வந்த இருவருக்கும் வீடு வெறுமையாகத் தெரிந்தது.



"அங்கிளும், ஆன்ட்டியும் இருந்தால் வீடே நிறைஞ்ச மாதிரி இருக்கு" என்றாள் நைனிதா.

"அவங்க அன்பே வீட்டை நிறைஞ்சிருந்தது" என்றான் ரோஹித். குளிர்காலம் தொடங்கி விட்டதால் பகலிலேயே இருட்டாக இருந்தது. அவ்வளவு பெரிய வீட்டிலே சத்தமே இல்லாத சூழ்நிலையில் மாடியில் தனியறையில் தங்குவதை நைனிதாவால் நினைத்தே பார்க்க முடியவில்லை.

"ரோஹித் நான் கீழேயே தங்கிக் கொள்ளலாம் என்றிருக்கிறேன். மேலே எனக்கு தனியாய் இருக்க முடியாது" என்றாள் நைனிதா. துள்ளிக் குதித்தான் ரோஹித்.

"உனக்காக என் அறைக் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். வா போகலாம்" என ஆர்வத்துடன் முன்னால் நடந்தவனை தாண்டிக் கொண்டு அடுத்த அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டாள் நைனிதா.

"நம்ப வைச்சி ஏமாத்திட்டே இல்ல, ராட்சசி" அவன் கத்தும் குரல் கேட்க, சிரித்தபடியே கட்டிலில் படுத்து தூங்கத் தொடங்கினாள் நைனிதா.

## 9

"நைனி நான் கிளம்பறேன்" என குரல் கொடுத்தான் ரோஹித். ப்ரட் டோஸ்ட்டையும் ஆம்லெட்டையும், மக்கில் காபியையும் அவன் எதிரே வைத்த நைனிதா.

"நைனி, நான் வர மாலையாகிவிடும். நீ தனியாக இருந்து கொள்வாயா?" என்றான் ரோஹித் யோசனையுடன்.

"வீட்டில் இருப்பவளைப் பற்றி நீ ஏன் கவலைப் படுகிறாய்? எனக்கு புத்தகங்கள் இருக்கின்றன?" என்றாள் நைனிதா.

"வீட்டில் தனியாக இருப்பதால்தான் கவலையாக இருக்கிறது" என்றபடி ரோஹித் மனசே இல்லாமல் கிளம்பிப் போனான்.

கதவைத் தாழிட்டுவிட்டு நைனிதா உள்ளே வந்தாள். பகல் பதினொரு மணிக்கே குளிர் உடலை ஊடுருவியது. கம்பளிக்கோட்டையும் சாக்சையும் அணிந்தாள் நைனிதா. இந்த குளிரில், பகலிலும் இருட்டிப் போகும் சமயத்தில் வெளியே செல்வது ரோஹித்திற்கும் சிரமம்தான் என்று நினைத்தாள் நைனிதா. வியாபார விஷயங்களை அவன் கவனிப்பது இதுதான் முதல் முறை. அதனால் சிறிது தடுமாற்றம் இருந்தது. ராஜாவையோ, கார்த்திக்கையோ உடன் அழைத்து வந்திருக்கலாம். நைனிதாவைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்ததும் எதைப் பற்றியும் யோசிக்காமல் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான்.

ரோஹித்தும் யோசித்தபடி ரயில் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான். கார்ல் ஒஹான்ஸ் காத்தாவில் இருந்த தன் க்ளையண்டை சந்திக்க அவன் கட்டாயம் போக வேண்டி இருந்தது. நாம் திரும்பிப் போகும் வரை நைனிதா தனிமையில் எத்தனை நேரம் அந்த வீட்டில் பேசக்கூட ஆளின்றி அமர்ந்திருக்க முடியும்?

இந்த குளிரும், இருட்டும் பலருக்கு டிப்ரஷனை ஏற்படுத்தும். அதுவும் இந்தியா மாதிரி வெப்பமான



நாடுகளில் இருந்தவர்களுக்கு சமாளிக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குப் போய் விடுவார்கள். அவன் நைனிதாவிடம் ஊர் திரும்பும்படி சொன்னபோது அவள் மறுத்து விட்டாள்.

"இங்கு வந்து நான் அஸ்தமிக்காமல் சூரியன் இருக்கும் கோடை காலத்தைப் பார்த்து விட்டேன். சூரியனே வராத குளிர் காலத்தையும் பார்த்து விட்டுத்தான் கிளம்புவேன்" என்றாள். ரோஹித்தும் அதற்கு மேல் வற்புறுத்தவில்லை.

நைனிதா கண்களை மூடி குருட்டு யோசனையுடன் அமர்ந்திருந்தாள். ரோஹித் அவன் வேலை விஷயமாக தினமும் வெளியே சென்று விடுவதால் நாள் முழுவதும் அவ்வளவு பெரிய வீட்டில் பேச்சுத் துணைக்குக் கூட ஆளின்றி அமர்ந்திருப்பது சிரமமாக இருந்தது. நார்வேயைச் சுற்றிலும் அடர்ந்த காடுகள் இருப்பதால் குளிர் காலத்தில் மாதக் கணக்கில் சூரியன் வராதாகையால் மின்சாரத்தை நம்பியே வாழ வேண்டியிருக்கிறது. மின்சாரம் மட்டும் இல்லை எனில் இங்கு வாழவே முடியாது என்று நினைத்தபடி எழுந்த நைனிதா சூடாக டீயை போட்டுக் குடித்தாள். அதுவும் பாதிக்கு மேல் குடிக்க முடியாமல் சோர்வாக இருந்தது.

அன்று காலையிலேயே கிளம்பிப் போன ரோஹித் மாலை ஏழு மணி ஆகியும் இன்னும் வரவில்லை. எப்போதும் இவ்வளவு தாமதமானதில்லை. ஒரு தகவல் கூட கொடுக்காமல் எங்கே போயிருப்பான்? எழுந்து குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். வாட்ச்சைப் பார்த்தாள். டி.வி.யை ஓடவிட்டாள். நேரம் நகராமல் நின்றது.

தவிப்புடன் தலையைப் பிடித்தபடி அமர்ந்தபோது ஹாலில் இருந்த டெலிபோன் ஒலித்தது. ரோஹித்தாகத்

தான் இருக்கும் என்ற நினைவில் பாய்ந்து சென்று போனை எடுத்தாள். நார்விஜிய மொழியில் யாரோ மறுபக்கம் பேசினார்கள்.

"நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை. ஆங்கிலத்தில் பேசுங்கள்" என்றாள் உரக்க.

அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது போலும். குரல் மறுபடி நார்வீஜிய மொழியிலேயே தொடர்ந்தது.

'ரோஹித்... ஹாஸ்பிட்டல்... ரயில்வே ஸ்டேஷன்' என்ற ஆங்கில வார்த்தைகள் துண்டு துண்டமாய் காதில் விழுந்தன. அவர்கள் பேசி முடித்துவிட்டு போனை வைத்ததும் நைனிதா கலங்கிப் போனாள். ரோஹித்திற்கு ஏதாவது அடிபட்டிருக்குமா? ரயில்வே ஸ்டேஷன் அருகில் ஒரு பெரிய மருத்துவமனையை அவளுக்குப் பார்த்த நினைவு இருந்தது. அங்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறானா ஒருவேளை? இவ்வளவு நேரம் வாராமலிருக்க வேறு என்ன காரணம் இருக்கப் போகிறது?

நைனிதா மேலும் சிறிது நேரம் காத்திருந்து பார்த்தாள். ஒவ்வொரு நிமிடமும் ஒரு வருடமாய கழிய அவளால் அதற்கு மேல் தாமதிக்க முடியவில்லை. கனமான கம்பளிக் கோட்டையும், பெரிய ஷூவையும், கையுறைகளையும் அணிந்து கொண்டு இங்கு திருடர் பயம் இல்லாததால் கதவை வெறுமனே சாத்திவிட்டுக் கிளம்பினாள்.

வெளியே வந்ததும் பனிக்காற்று முகத்தில் அறைந்தது. தெருவில் டாக்ஸி எதுவும் தென்படவில்லை. டாக்ஸிக்காக காத்திருந்ததில் சிறிது நேரம் செலவழிய ரயில் நிலையம் அருகேதான் இருக்கிறது என்ற நினைவில் நடக்க ஆரம்பித்தாள்.



பிரகாசமான தெருவிளக்குகள் பனிமூட்டத்தில் அழுது வடிவந்தன. இருட்டும் மங்கல் வெளிச்சமுமாய் பாதை மருட்டியது. நேராய் நடந்து வலது பக்கம் திரும்பி நேராய் போனால் பதினைந்து நிமிடத்தில் ஸ்டேஷன் வந்துவிடும். திருப்பத்தில் சற்று குழம்பி பின் திரும்பி நடந்தாள். அரை மணி நேரம் நடந்தும் ஸ்டேஷன் அங்கிருப்பதற்கான அறிகுறியே தெரியவில்லை. சாதாரணமாகவே தூங்கி வழியும் ஆஸ்லோ நகரம் அந்த பனி இரவில் அசாதாரணமான அமைதியுடன் இருந்தது. மனதில் இனம் புரியாத பயம் ஏற்பட்டது. திரும்பிப் பார்த்தபோது எந்த வழியாக வந்தோம் என்பது புரியாத வண்ணம் சாலைகளை பனி மூடியிருந்தது. மேற்கொண்டு எந்த வழியாக போவது என்று தெரியவில்லை. இன்று பனியில் விறைத்து சாகப் போகிறோம் என்ற நினைவில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. கோட்டின் மீதும் தலை ஸ்கார்ப்பிலும் படிந்திருந்த பனியை உதறி விட்டு மரத்துப்போன கால்களை உதறி திக்கு தெரியாமல் ஓடத் தொடங்கினாள். ஓடினால் உடலுக்குக் கிடைக்கும் வெப்பம் சிறிது நேரம் உயிரைப் பிடித்து வைத்திருக்கும் என்ற நினைவில் ஓடியபோது எங்கிருந்தோ விசில் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது புகை மூட்டத்தில் எதுவும் கண்ணுக்குத் தெரியாததால் மறுபடி ஓடத் தொடங்கினாள். இப்போது விசில் சத்தம் அருகில் கேட்டது. ஒரு போலீஸ் டிரக் அவள் அருகே வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒரு போலீஸ் "யார் நீ? இங்கே என்ன செய்கிறாய்?" என்று விசாரித்தான்.

"நான்.. இங்கே ரயில் நிலையம் அருகேயுள்ள மருத்துவமனைக்கு வந்தேன். அங்கே என் நண்பனுக்கு ஏதோ விபத்து என்று நினைக்கிறேன்." சந்தேகத்துடன்

அவனைப் பார்த்த போலீஸ் "ரயில் நிலையத்திற்கு மூன்று கிலோ மீட்டர்கள் தள்ளி நாம் நிற்கிறோம்" என்றான்.

"மை காட் இருளில் எங்கோ வழி தவறி விட்டேன்" என்றாள் நைனிதா கவலையுடன்.

"நீ குடித்திருக்கிறாயா?"

"இல்லை."

"எங்கே ஊது பார்க்கலாம்."

போலீஸ் அதிகாரி பரிசோதிக்கும் கருவியை அவள் வாயில் வைத்து ஊதச் சொன்னதும் அவள் ஊதினாள்.

அவன் திரும்பி ட்ரக்கில் அமர்ந்திருந்த போலீசிடம் "இவள் குடித்திருக்கவில்லை. உண்மையிலேயே வழி தவறி விட்டாள்" என்றான்.

"உன் வீடு எங்கே இருக்கிறது? நீ எந்த நாட்டை சேர்ந்தவள்?"

நைனிதா சொன்னதும் "ஏறு. உன்னை கொண்டு போய் வீட்டில் விடுகிறேன். இப்படியே விட்டுப் போனால் இந்தக் குளிரில் விறைத்து இன்னும் ஒரு மணி நேரத்தில் இறந்து போய். நாளைக் காலையில் உன் நண்பனைத் தேடி கண்டுபிடி" என்றபடி அவளை ட்ரக்கில் ஏற்றி அழைத்து சென்றான்.

வீட்டுவாயிலில் அவளை இறக்கிவிட்ட அந்த போலீஸ் "இனிமேல் பனிக்காலம் முடியும் வரை இந்த மாதிரி வீட்டை விட்டு கிளம்பாதே" என்றபடி கிளம்பிச் சென்றான்.

நைனிதா குளிரினால் வெடவெடத்தபடி கதவைத் தள்ளியபோது அது உள்ளே தாழிடப்பட்டிருப்பது தெரிந்தது. குழப்பத்துடன் காலிங்பெல்லை அழுத்தியதும் கதவு



திறந்தது. திறந்த கதவின் எதிரே ரோஹித் தன் வழக்கமான சிரிப்புடன் நின்றிருந்தான்.

அவனைப் பார்த்ததும் வியப்புடன் "இந்த நேரத்தில் எங்கே போயிருந்தாய் நைனி?" என்று அவன் கேட்டதும் நைனிதா அவனை 'பளாரென்று' அறைந்தாள்.

நைனிதா காய்ச்சலில் துவண்டு போயிருந்தாள். நாலுநாளாய் விடாது அடித்த காய்ச்சலில் கண் திறக்காமல் கிடந்தவளைப் பார்த்த ரோஹித் தான் டாக்டர் என்பதையும் மறந்து கவலைப்படலானான்.

ரோஹித் நாலுநாள் முன்பு தங்கள் வியாபார நிமித்தம் ஹெல்கே என்பவரை சந்திக்க வேண்டியிருந்தது. அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்று கேள்விப்பட்டிருந்தான். ரோஹித்திற்கு தெரிந்த நார்வீஜிய பாஷையில் அவரிடம் பேசி கேட்டபோது, தான் இப்போது வேலையாக இருப்பதாகவும் மாலையில் சந்திக்கும் இடத்தை போனில் பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்றும் சொன்னார். ஆனால் ரோஹித் மன்ஹாட்டன் வரை போக வேண்டியிருந்தது. திரும்பி வரும்போது இரவாகி விட்டது. வீட்டிற்கு வரும்போதுதான் ஹெல்கேயுடன் காலையில் பேசியது நினைவு வந்தது. காலையில் அவரை மீண்டும் தொடர்பு கொள்ள வேண்டும் என்று நினைத்தபடி கதவில் கை வைத்தபோது அது எதிர் பாராமல் திறந்து கொண்டது. நைனி இந்த நேரத்தில் எங்கே போயிருப்பாள் என்று வீடு முழுவதும் தேடினான். அருகில் வசிக்கும் கேசவனின் பாகிஸ்தானிய நண்பர் சமீர் அஹ்மத் இவர்களை அவரது வீட்டுக்கு கூப்பிட்டுக் கொண்டே இருந்தார். தனிமையில் இருக்க முடியாமல்

அவர்களது வீடுவரை போயிருக்கிறாள் போலும், என்று நினைத்தபடி டெலிபோன் புத்தகத்தில் சமீர் அஹ்மத்தின் நம்பரைத் தேடிக் கொண்டிருந்த போது வாயிலில் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது. நைனிதா அமீருடன் அவரது வண்டியில் வந்துவிட்டாள் போலும் என்று ரோஹித் நிம்மதியுடன் போய் கதவைத் திறந்தான். கதவைத் திறந்ததும் நைனிதா அவனை பளாரென்று அறைந்ததும் ரோஹித் அதிர்ச்சியில் ஒருநிமிடம் சிலையாய் இறுகிப் போனான். அடுத்த நிமிடம் நைனிதா மடாரென்று கீழே விழும் சத்தம் கேட்டதும் தன் உணர்வு பெற்றவனாக ஓடிச் சென்று அவளைத் தூக்கி படுக்கையில் படுக்க வைத்தான். ஜில்லிட்டிருந்த அவளது கம்பளி கோட்டை கழட்டி அறை ஹீட்டரை முழுதாக திருப்பி விட்டான். பனியில் விறைத்திருந்த உடலுக்கு சூடு வர பரபரவென தேய்த்து, ஹாட் வாட்டர் பேக் வைத்து என பலவாறு முதலுதவியில் ஈடுபடுகையில் இவளுக்கு இன்று பெரிய அதிர்ச்சி ஏதோ நேர்ந்திருக்கிறது என்று புரிந்தது. குளிரில் வெகுநேரம் இருக்கும்படியாய் இவள் எங்கே போயிருந்தாள் என்று அவனுக்கு குழப்பமாக இருந்தது.

அவனது வெகுநேர சிகிச்சைக்கு பிறகு நைனிதாவுக்கு மெதுவாய் உடம்பில் சுரணை வரத் தொடங்கியது. ரோஹித் ''நைனி'' என்று அவளை உலுக்கியபோது முனகியபடி புரண்டு படுத்தாள். இரவெல்லாம் உருண்டு புரண்டு கொண்டிருந்தவளுக்கு காலையில் நல்ல ஜுரம் வந்து விட்டிருந்தது. ரோஹித் அவளை எழுப்பி கஞ்சியும் மாத்திரையும் கொடுத்து தூங்க வைத்தான்.

அவள் தூங்கியபின் எழுந்து வெளியே வந்த போது வீட்டு வாயிலில் ஒரு போலீஸ் ட்ரக் வந்து நின்றது.



அதிலிருந்து இறங்கிய இரண்டு போலீசார் ''இங்கே ஒரு பெண் இருக்கிறாளா? இந்தியன். பெயர் நைனிதா.'' என்றனர் கையிலிருந்த பேப்பரை சரிபார்த்தபடி.

ரோஹித் திகைப்புடன் தலையசைத்தான்.

''அவளைப் பார்க்க முடியுமா?''

''அவளுக்கு ஜுரம்'' என்றபடி ரோஹித் அவர்களை நைனிதாவின் அறைக்கு அழைத்துச் சென்றான். தூங்கிக் கொண்டிருந்தவளைப் பார்த்து விட்டு வெளியே வந்த போலீஸ் சொன்னார், ''நேற்று இரவு இந்தப் பெண் தனியாய் தெருவில் சுற்றிக் கொண்டிருந்தாள். விசாரித்த போது அவள் நண்பனுக்கு விபத்து. ரயில்நிலையம் அருகேயுள்ள மருத்துவமனைக்கு போக வேண்டும் என்றாள். கொட்டுகிற பனியில், அந்த இரவில் ரயில் நிலையம் வரை நடந்து போக வேண்டும் என்று சொன்னதால் அவள் ஒரு ட்ரக் அடிக்டோ, அல்லது குடித்திருக்கிறாளோ என்று எங்களுக்கு சந்தேகமாக இருந்தது. பரிசோதித்த பிறகு அவளை இங்கு கொண்டு வந்து விட்டுவிட்டு போனோம். அவள் சொன்னது உண்மையா என்று வெரிபை பண்ணிக் கொள்ளத்தான் இப்போது வந்தோம். ஒருவேளை அவள் டிரக் அடிக்டாக இருந்தால் அது மிகப்பெரிய குற்றம்.''

''இல்லை'' என்றான் ரோஹித் அந்த போலீஸ் அதிகாரியின் கைகளைப் பற்றி. ''அவள் என் சிநேகிதி. நேற்று நான் வரத் தாமதமானதைப் பற்றி அவளுக்கு தகவல் கொடுக்க மறந்து போனேன். என்னைத் தேடித்தான் அவள் போயிருக்க வேண்டும். நீங்கள் பத்திரமாய் கொண்டு வந்து சேர்த்ததற்கு நன்றி'' என்றான் மனப்பூர்வமாய்.

தோழமையுடன் அவன் தோளில் தட்டிவிட்டு அந்த போலீஸ் அதிகாரி போனதும் ஹாலிலிருந்த போன் ஒலித்தது.

ஹெல்கேதான் பேசினார். "நேற்று ஏன் என்னை சந்திக்க வரவில்லை?" என்றார்.

"எனக்குத் தெரியாதே" என்றான் ரோஹித்.

"ரயில் நிலையம் அருகேயுள்ள மருத்துவமனையின் பின்புற ரெஸ்ட்ராண்டில் உனக்காக காத்திருப்பதாக உன் வீட்டுக்கு தகவல் தந்தேனே!"

'உங்களால்தானா இத்தனையும்?' என்று நினைத்த ரோஹித், "ஹெல்கே நீங்கள் ஆங்கிலம் கற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள்" என்றான்.

அவர் புரியாமல் விழிக்க, அடுத்த வாரத்தில் சந்திப்பதென பேசி முடித்து விட்டு போனை வைத்தான்.

வெஜிடபிள் சூப்பை தயாரித்துவிட்டு, சூடான சூப்புடன் சென்றபோது நைனிதா விழித்திருந்தாள். வாஞ்சையுடன் அவள் தலையை வருடி "எப்படி இருக்க நைனி?" என்றான் ரோஹித்.

பதில் பேசமாட்டாமல் நைனிதாவின் கண்களில் நீர் நிறைந்தது. தொண்டையை செறுமி தன்னை சரிப்படுத்திக் கொண்ட ரோஹித் டவலால் அவள் முகத்தை ஒற்றி எடுத்தவன், குனிந்து நெற்றியில் முத்தமிட்டான். நைனிதா பதில் பேசாமல் கப்பை வாங்கி சூப்பை குடிக்கத் தொடங்கினாள்.

அன்றிலிருந்து இருவருக்குள்ளும் புதிய நெருக்கமும் உரிமையும் ஏற்பட்டு விட்டாற் போலிருந்தது. பரஸ்பரம் தங்களுடைய சுகதுக்கங்கள் தங்கள் இருவரையுமே



பாதிக்கும் என்பதையும் ஒருவரைவிட்டு ஒருவர் விலகுவதென்பது இனி முடியாது என்பதையும் இருவருமே உணர்ந்து கொண்டார்கள். நைனிதாவின் உடம்பு சரியானதும் சமீர்அஹ்மத் வீட்டு விருந்துக்கு இருவரும் கிளம்பினார்கள்.

"நைனி உன்னை நான் முதன்முதலாய் பார்த்தபோது சேலையில்தான் பார்த்தேன். நினைவிருக்கிறதா? அப்போதிருந்து பெண்கள் உடையில் எனக்கு சேலை மிகவும் பிடித்து போயிற்று. இங்கே உன்னிடம் ஏதாவது சேலை இருக்கிறதா?" என்றான் ரோஹித்.

"எதற்கும் இருக்கட்டும் என்று ஒரு புடவை எடுத்து வந்தேன். இங்கு யுனிவர்சிட்டியில் ஒரு விழாவுக்கு கூட புடவைதான் கட்டினேன். என் ரூம்மேட்ஸ் எல்லாம் கூட எங்கிட்ட புடவை கட்ட கத்துக்கிட்டாங்க" என்றாள் நைனிதா.

"வெரிகுட் அப்ப புடவையே கட்டிட்டு வா. குளிருக்கும் இதமாய், என் கண்களுக்கு விருந்தாய்..."

"உனக்கு விருந்து சமீர் வீட்டில் காத்திருக்கிறது" என்றபடி நைனிதா உடை மாற்றப் போனாள்.

மயில் கழுத்து நிற ஷிபான் புடவையும், தோள்வரை புரண்ட முடியுமாக வந்து நின்றவளை பார்த்த ரோஹித் கைகளால் கண்ணைப் பொத்தினான். "என்னாச்சு ரோஷித்?"

"கண்ணுல மின்னல் அடிச்சிடிச்சி. கண்ணைத் திறக்கவே முடியல. நீ என் எதிர்ல நிற்காதே ப்ளீஸ்."

"ஏற்கனவே நீ பாதி பைத்தியம். இதுல கண் வேற தெரியாட்டி கஷ்டம். எதுக்கு வம்பு? நான் போறேம்பா"

என முன்னால் நடந்த நைனிதாவை ரசித்தபடி பின் தொடர்ந்தான் ரோஹித்.

சமீர்அஹ்மத் அவர்களை மிகுந்த பிரியத்துடன் வர வேற்றார். "கேசவன் எனக்கு நெருங்கிய நண்பர். நைனிதா அவரது மகள் என்று பலமுறை சொல்லியிருக்கிறார். ரோஹித்தின் அண்ணன் ராஜாவைக் கூட சந்தித்திருக் கிறேன்" என்றார் அவர்களிடம்.

சாப்பாட்டின் மணம் வீட்டை நிறைத்தது. அவர் உள்ளே எழுந்து போன சமயத்தில் "உன் சாப்பாடை சாப்பிட்டு நாக்கு செத்துப் போச்சு ரோஹித். இன்னிக்காவது நல்ல சாப்பாடு சாப்பிடப் போகிறேன்" என்றாள் நைனிதா.

"என் சமையலாவது நாக்குதான் செத்துப்போச்சு. நீ சமைக்கத் தொடங்கி இருந்தால் ஆளே காலி" என்றான் ரோஹித்.

இருவரும் சிரித்தபடி அமர்ந்திருக்கையில் சமீர் அவர் களை அழைத்துப் போய் வீட்டினரை அறிமுகம் செய்து வைத்தார். பெண்கள் பர்த்தாவினுள் தெரிந்த கண்களில் அன்பைத் தெரிவிக்க, ஆண்கள் தலைகுனிந்து வணக்கம் செலுத்தினார்கள். அங்கிருந்த டி.வி.யில் ஷாருக்கானின் ஹிந்திப்படம் ஓடிக் கொண்டிருந்தது.

"அங்கிள் நீங்கள் எப்போது பாகிஸ்தானிலிருந்து நார்வே வந்தீர்கள்?" என்றாள் நைனிதா.

"பாகிஸ்தான் பிரிவினை சமயம் எங்கப்பா இந்தியாவி லிருந்து நார்வே வந்துவிட்டார். அப்போது பாகிஸ்தானி லிருந்தும் நிறைய முஸ்லீம்கள் இங்கே வந்து செட்டில் ஆனார்கள். பிரிவினை வாதமெல்லாம் அரசியல் பேச்சு மகளே! அடிப்படையில் இந்தியர்களும் நாங்களும் உடன் பிறவா சகோதரர்கள்" என்றார் உணர்ச்சிவசப்பட்டு. அவர்



சொல்வது உண்மைதான் என்பதை இங்கு வந்ததிலிருந்து ரோஹித்தும் நைனிதாவும் அறிந்திருந்ததால் பதில் பேசாமல் சாப்பிடத் தொடங்கினார்கள்.

சாப்பாடு முடிந்ததும் சமீர் அஹ்மத் தன் தோட்டத் தையும் வீட்டையும், அருகிலேயே இருந்த பழ குடோ னையும் காட்டினார். நைனிதாவின் கைகளை கோர்த்தபடி தோட்டத்தின் நடுவே நடக்கையில், ரோஹித் அவள் காதருகே கிசுகிசுத்தான்.

"உன் கூட நடக்கிற மாதிரியே தெரியல. ஏதோ ஸ்டா ரோடு சேர்ந்து டூயட் பாடற மாதிரி இருக்கு. நீ இன்னிக்கு என்னவோ புதுசா தெரியற" ரோஹித்தின் கண்கள் மிதக்கவும் நைனிதா சிரித்தாள்.

"புடவையால நான் புதுசா தெரியறேன்னா, வீட்டுக்கு போய் புடவையை மாத்தியதும் நான் பழசாகி விடுவேன் இல்லையா?"

"பழசோ, புதுசோ புடவை சௌகர்யமாத்தான் இருக்கு" என்றபடி அவள் இடுப்பை அணைத்து நடந்தான் ரோஹித்.

"யாருக்கு சௌகர்யம்?" என்றபடி அவன் கைகளை விலக்கினாள் நைனிதா.

சமீர் வீட்டிற்குள் அவர்கள் நுழைகையில் ஹாலில் இன்னும் சில விருந்தினர் இருந்தனர். "இங்கு வசிக்கும் சில இந்தியர்களை உங்களுக்கு அறிமுகம் செய்ய நினைத்தேன்" என்றபடி சமீர் அவர்களை இவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஒருசில தமிழர்களும், வட இந்தியர்களுமாய் விருந்து களை கட்டியது. நைனிதா எல்லோருடனும் உற்சாகமாக பேசியபடி எதேச்சையாக திரும்பிய போது ரோஹித் தன்னை பார்ப்பதை

உணர்ந்ததும், "வெவ்வெவ்வெ" என அழகு காட்டினாள். ரோஹித் வாய்விட்டு சிரிக்கத் தொடங்கினான்.

விருந்து முடிந்து வீடு வர வெகுநேரமாகி விட்டது. குளிர் உடலை உலுக்கத் தொடங்கியது.

கதவைத் திறப்பதற்குள் கைகால்கள் உதறத் தொடங்கின. "என் ஸ்வெட்டர் எங்கே காணோம்?" கேட்டு முடிப்பதற்குள் நைனிதாவின் குரல் வெடவெடத்தது. குளிருக்கு கைகளை குறுக்கியபடி அலமாரியில் கம்பளிக் கோட்டைத் தேடிக் கொண்டிருந்த நைனிதாவின் அருகே வந்தான் ரோஹித்.

"ரொம்ப குளிருதா நைனி?"

"குளிர்றதா? உதறுதுப்பா?"

"இப்ப சரியாயிடும் பார்" என்றபடி அவளை நோக்கி குனிந்தான் ரோஹித்.

வீட்டுக் கூரையிலும், புல்வெளியிலும், தெருவெங்கும் ஐஸ்கட்டிகளாய் பனி உறைந்திருக்க, வீட்டின் கார்பெட் தரையைத் தாண்டி ஜில்லிடத் தொடங்கிய சமயம் ஹீட்டரை ஆன் பண்ணாமலேயே அவர்களுக்குள் ஒரு வெப்பம் படரத் தொடங்கியது.

# 10

காலையில் நைனிதா கண் விழித்த போது அருகே ரோஹித் நல்ல உறக்கத்தில் இருந்தான். சத்தமில்லாமல் எழுந்து பல்துலக்கி வெளியே வந்து காபியுடன் ஹாலில்



அமர்ந்தபோது மனதிலும் உடலிலும் இனம் புரியாத இனிய உணர்ச்சி ஒன்று பரவியது. ஒருவரை ஒருவர் வளைக்கவோ, வளையவோ முற்படாமல் நடந்து போன சங்கமம் மிக இயல்பானதாகவே இருந்தது. சோபாவில் பின்னால் சாய்ந்து கண்களை மூடினாள் நைனிதா. சில நிமிடங்கள் இனிமையான தனிமையில் கழிய கண் இமைகளின் ஈரம் உணர்ந்து பார்த்தபோது ரோஹித் அவள் கன்னங்களைப் பற்றி மீண்டும் முத்தமிட்டான்.

சோபாவை சுற்றி வந்து எதிரில் அமர்ந்து "ஹாய் பொண்டாட்டி" என்றான் கண்களை சிமிட்டி.

அவன் கண்களை நேராய் சந்திக்க முடியாமல் எதுவோ தடுக்க, ரோஹித் அவள் முகத்தை நிமிர்த்தினான். "இப்படி கூச்சப்பட வேண்டிய அவசியமில்ல. இயல்பாய் இரு. எல்லா கணவன் மனைவிக்குள்ளும் நடக்கும் நிகழ்ச்சிதான் இது."

"நாம் கணவன் மனைவியா ரோஹித்?"

"அதிலென்ன சந்தேகம் உனக்கு? உன்னை முதல் நாள் பார்த்தபோது ஏற்பட்ட ஈர்ப்பு நாளடைவில் காதலாகி மனத்திற்குள்ளேயே உன்னை மனைவியாக்கி பிரிந்திருக்க முடியாமல் உன்னைத் துரத்திக் கொண்டு ஐரோப்பாவின் வடமேற்கே வந்திருக்கிறேன். உடலின் கவர்ச்சியால் மனதை ஈர்க்க முயலுவதுதான் அரேஞ்ட் மேரேஜ். மனதின் ஈர்ப்பு உடலில் முடிவடைவது முழுமையான காதல். நமக்கும் அதுதான் நடந்திருக்கிறது. மனதளவில் நீ எப்போதோ என் மனைவி. நேற்றுதான் அதற்கான உரிமையை எடுத்துக் கொண்டேன். நீ அப்படி உணரவில்லையா நைனி?"

"உன்னைத் தவிர யாரும் என்னை நெருங்க முடியாது என்பதை நானும் உணர்ந்துதான் இருந்தேன். என் மனதில் முதலும் முடிவுமாய் இடம் பிடித்த ஆண் நீதான் என்பதால் எந்த குற்ற உணர்வும் எனக்குத் தோணவில்லை."

"குட்" என்ற ரோஹித் அவள் கைகளைப் பற்றி எழுப்பினான்.

"என் பொண்டாட்டி கொஞ்சம் கிச்சனிலும் வேலை செய்யணும். ஏன்னா சென்னை போனதும் நான் ரொம்ப பிஸியாகி விடுவேன். ரெண்டு பேரும் சேர்ந்து வேலை செஞ்சாதான் சமாளிக்க முடியும். இப்பவே எங்கிட்ட டிரைனிங் எடுத்துக்கோ."

"அதைப் பத்தி எல்லாம் நீ கவலையே படாதே ரோஹித். இந்த சமையலறை சமாச்சாரம் நம் பெண்களின் ஜீனிலேயே வரும் சமாச்சாரம். என்னால் எளிதாய் அதை புறக்கணிக்க முடியாது. உனக்கு சூப்பராய் சமைத்துப் போடுவேன். கவலைப்படாதே."

இருவரும் பேசியபடியே சமைத்தனர். "நாமும் இப்போ ஒரு 'சம்போ' தம்பதிகள். இல்லையா ரோஹித்?" என்றாள் நைனிதா.

"நம்ம நாட்டிலேயே நாம சின்ன வயசுல கதைகள்ல கேள்விப்பட்டதில்ல, கந்தர்வ மணம்னு. பெற்றோர் இல்லாமல், திருமணம் செய்யாமல் ஆணும் பெண்ணும் பார்த்தவுடன் பழகி, இணைந்து விடுவதைத்தான் கந்தர்வ மணம் என்கிறார்கள். நம் சாஸ்திரங்களும் அதை அனுமதிக்கின்றன."

சாப்பிட்ட பின் ரோஹித் வெளியே கிளம்பினான். "எனக்கு இன்னிக்கு மிஸ்டர் ஹெல்கே ஐப் பார்க்கப் போகணும். தாமதமானாக் கூட கவலைப்படாதே.



என்னைத் தேடி கிளம்பிடாதே. ஏன்னா என்னால மறுபடி அடி வாங்க முடியாது."

ரோஹித் பயத்துடன் கன்னங்களைப் பிடித்துக் கொள்ள நைனிதா பெரிதாய் சிரிக்கத் தொடங்கினாள்.

ரோஹித்தும் சிரித்தபடியே கிளம்பிப் போக, அவனோடு தன் மகிழ்ச்சி, கலகலப்பு எல்லாமே சேர்ந்து போய் விட்டதாக தோன்றியது நைனிதாவுக்கு. சராசரி இந்திய மனைவியாய் அவனுக்காக மாலைவரை காத்திருந்தாள்.

தேனிலவுக்கு வந்திருக்கும் புதுமணத் தம்பதிகளைப் போல அவர்கள் வாழ்க்கை அந்த ஒருமாதமும் இனிமையாய் சென்றது. இருவரும் ஒரு ஞாயிற்றுக்கிழமை ஸ்கைஜும்ப் பார்க்கப் போனார்கள். ஹோல்மன் கொலன் என்னும் இடத்தில் அமைந்துள்ள இந்த பனிச்சறுக்கு பாறைதான் ஐரோப்பாவிலேயே மிக உயரமானது என்றான் ரோஹித்.

நார்வே பனி சூழ்ந்த நாடாதலால் இவர்கள் தேசிய விளையாட்டு ஸ்கைஜும்ப் என்று நைனிதா கேள்விப் பட்டிருந்தாள்.

மிக உயரமான இடத்திலிருந்து புறப்படும் விளையாட்டு வீரர்கள் பனிச்சறுக்கு பலகையில் வேகத்துடன் சென்று இடையே இருக்கும் சறுக்கு மாத்தை தாண்டி பனிப்பாறைக்கு சென்ற போது நைனிதாவுக்கு அடிவயிறு கலங்கியது.

"இவ்வளவு உயரத்திலிருந்து சறுக்கும் போது பாலன்ஸ் தவறினால் என்னவாகும்?" என்றாள் ரோஹித்திடம்.

"வெற்றியா, தோல்வியா? வாழ்வா, சாவாங்கிற த்ரில் தான் விளையாட்டே. யோசிக்க ஆரம்பித்தோமானால் த்ரில்லை அனுபவிக்க முடியாது" என்றான் ரோஹித்.

விளையாட்டு முடிந்து கும்பலாய் கலைந்து செல்கையில் சர்வகலா சாலையில் தன்னுடன் பயின்றவர்கள் சிலரை நைனிதா சந்தித்தாள். அவளைப் பார்த்ததும் பியாட்ரிஸ் ஓடிவந்து கட்டிக் கொண்டாள். ரோஹித்தைப் பார்த்ததும் "உன் ப்ரண்டா? ரொம்ப ஸ்மார்ட்டாக இருக்கிறான். இனிமேலாவது சந்தோஷமாய் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும்" என்றாள்.

"ஏதாவது ட்ரிங்ஸ் சாப்பிடலாமே" என்றபடி அங்கிருந்த ரெஸ்ட்டாரண்டுக்குள் நுழைந்து வோட்க்கா அருந்தினார்கள். நைனிதாவும் ரோஹித்தும் ஒரு கூல் ட்ரிங்சை குடித்தபடி சுற்றிலும் பார்த்தபடி பேசிக் கொண்டிருந்தனர். ஆண் பெண் பேதமின்றி எல்லோரும் சிகரெட்டும் குடியுமாய் இருக்கையில் அவர்களுடன் வந்திருந்த ஆல்டோ என்பவன் இவர்களுடன் சேர்ந்து ஒரு கூல்ட்ரிங்சை அருந்தியபடி அமர்ந்திருந்தான்.

"ஏன் நீ குடிக்க வில்லையா?" என்றான் ரோஹித்.

"இன்று நான் டிரைவ் செய்வதாக இருப்பதால் ஊர் போய் சேரும்வரை குடிக்க மாட்டேன். இவர்களை டிராப் பண்ணியதும் என் வீட்டுக்கு போய் குடிக்க பாட்டில்கள் வாங்கி வைத்திருக்கிறேன்."

"பொதுவாக நார்வீஜியர்கள் சனிக்கிழமை வந்துவிட்டால் போதும் வரைமுறை இன்றி குடித்து தீர்ப்பார்கள். ஞாயிறன்று கோட்டை பராமரிப்பது, சலவை செய்வது என்று மற்ற நாட்களில் செய்ய முடியாத வேலைகளுக்கு நேரம் ஒதுக்குகிறார்கள். எவ்வளவு பெரிய குடிவெறியர்களாக இருந்தாலும் வாகனத்தை ஓட்ட வேண்டுமானால் மதுவை தொடுவதில்லை. டிராபிக் போலீஸ் பிடித்துவிடும் என்பதில் எச்சரிக்கையாக இருப்பார்கள்" ஆல்



டோவின் பேச்சிலிருந்து இந்த விபரங்களை தெரிந்து கொண்டார்கள் இருவரும்.

"சட்டத்தை மதித்து நடந்து கொள்ளும் இவர்களின் பொறுப்புணர்வு பாராட்டப்பட வேண்டிய விஷயம் நைனி" என்றான் ரோஹித்.

"இந்தியாவில் பொறுப்புணர்வே இல்லாமல் நாம் சுதந்திரத்தை அதன் மூலமாய் கிடைக்கும் பயன்களை அனுபவிக்கிறோம். பொறுப்புணர்வற்ற சுதந்திரம் தேசத்துரோகம்" என்றாள் நைனிதா.

எல்லோரும் கிளம்புகையில் பியாட்ரிஸ் ரோஹித்தை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள். "நீ ரொம்ப மேன்லியாய் இருக்கிறாய். உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஒரு வீக் எண்ட் என் அறைக்கு வா. நாம் விடுமுறையை ஒன்றாய் கழிக்கலாம்" என்று தன் முகவரியை அவனிடம் கொடுத்துவிட்டு மீண்டும் முத்தமிட்டு பிரிந்து போனாள்.

"நைனி இந்த மாதிரி ப்ரண்ட்ஸ் இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள் உனக்கு? அவர்களையும் மீட் பண்ணலாம்" என்றான் ரோஹித் ஆர்வத்துடன். பொதுவாக ஐரோப்பிய பெண்களுக்கு மாநிறமும், உயரமும், உடற்கட்டுமாய் இருக்கும் ஆசிய ஆண்களிடம் ஏற்படும் கவர்ச்சி பற்றி அறிந்திருந்ததால் நைனிதா பியாட்ரிஸ்சின் செய்கையை கண்டு கொள்ளாமல் இருந்தாள். ரோஹித் சீண்டவும் பதில் பேசாது அவனை முறைத்தாள். சிறிது நேரம் சுற்றிவிட்டு மாலையில் அவர்கள் வீடு திரும்பினார்கள். வீடு திரும்பியதும் கண்ணாடியின் முன் நின்ற ரோஹித், "நைனி என்ன இருந்தாலும் நம் இந்தியப் பெண்களுக்கு காதல் உணர்வை வெளிப்படுத்த தெரியவில்லை" என்றான் அவளிடம்.

"ஏன் அப்படி சொல்ற?"

"உன்னையே எடுத்துக் கொள்ளேன். காதலிக்கும் போது நீ என் கன்னத்தில் அடித்தாய். பியாட்ரிஸ் கட்டி அணைக்கிறாள். கன்னத்தில் எப்படி முத்தமிட்டாள் தெரியுமா? இன்னமும் ஜில்லென்று இருக்கு" ரோஹித் கண்கள் சொருக நின்றிருந்தான்.

"நீ தப்பா புரிஞ்சுகிட்ட ரோஹித். நான் கூட அருமையாய் காதலிப்பேன். நீதான் அதுக்கு சான்சே குடுக்கல" என்றாள் நைனிதா இனிமையாய்.

"நிஜமாவா? எங்கே உன் ஆழமான காதலை கொஞ்சம் காட்டு கண்ணே?" என ரோஹித் ஆர்வத்துடன் அவளை நெருங்கவும் கொத்தாக அவன் முடியைப் பற்றினாள் நைனிதா.

"இங்கிலீஷ் முத்தம் கேட்குதாடா உனக்கு? எவளாவது கூப்பிட்டா உடனே ஓடிடுவியா?" என அவன் முதுகில் குத்தவும் ரோஹித் கத்தினான்.

"ஐயோ என் பொண்டாட்டி அடிக்கறா. காப்பாத்துங்க.... காப்பாத்துங்க..."

"ஷட்டப் ரோஹித்..."

"முடியாது. நீ என்னை கொடுமைப்படுத்தறதை கேட்க இந்த ஊரில் யாருமே இல்லையான்னு எனக்கு தெரியணும்."

"போ. போய் தெருவில் நின்று கத்து போ."

"குட் ஐடியா" என்றபடி ரோஹித் கதவைத் திறந்து வெளியே செல்லவும் நைனிதா அவனை கலவரத்துடன் பார்த்தாள். அவன் கேட்டைத் திறந்து தெருவுக்கு செல்லவும். "ரோஹித் விளையாட்டு போதும். யார் காதிலாவது



விழுந்தால் மொழி புரியாட்டிக் கூட ஏதோ கலாட்டா நடக்குதுன்னு நினைப்பாங்க. உள்ளே வா."

ரோஹித் முடியாதென தலையசைத்தான்.

"ப்ளீஸ் ரோஹித்."

நைனிதாவின் கெஞ்சலை பொருட்படுத்தாமல் ரோஹித் தன் குரலை உயர்த்தினான். "ஹலோ லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்..."

தெருவில் போய்க் கொண்டிருந்த ஒரு சிலர் நின்று திரும்பிப் பார்த்தனர்.

"ரோஹித்.. சொன்னா கேளு. உள்ளே வா"... என்றாள் நைனிதா குரலை உயர்த்தாமல்.

அவளை திரும்பியும் பாராமல் ரோஹித் தெருவை, அதில் விரையும் கார்களை, இவனை பார்த்தபடி நின்றிருப்பவர்களைப் பார்த்து கத்தினான்.

"ஐ...லவ்...நைனி.. லவ் மை ஒய்ப் நைனி. நைனி ஐ லவ் யு" அங்கிருந்தவர்கள் சிரித்தபடி நகர்ந்தனர். ஒரு சிலர் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து வாழ்த்து கூறினர்.

"யார் உன்னுடைய அந்த அதிர்ஷ்டசாலி மனைவி?" என்றார் ஒருவர்.

"அதோ" ரோஹித் நைனிதாவை சுட்டிக்காட்ட அவள் அழகாய் வெட்கப்பட்டாள்.

நாட்கள் விரைந்து செல்ல, ரோஹித்தும் நைனிதாவும் நார்வேயிலிருந்து இந்தியா கிளம்பும் சமயம் லண்டனிலிருந்து கேசவன் தம்பதிகள் திரும்பி வந்தனர்.

"நல்லவேளை அங்கிள், உங்களைப் பார்க்காமலே கிளம்பவேண்டி இருக்குமோன்னு நினைச்சிட்டே இருந்தோம்" என்றாள் நைனிதா.

"நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருப்பதை நான் பாக்காட்டி எப்படி?'' என்றார் கேசவன் நிறைவுடன்.

''நைனிதா நீ இங்கிருந்து கிளம்புமுன் நம் முறைப்படி ஒரு திருமணம் செய்து கொண்டால் எங்களுக்கும் திருப்தியாக இருக்கும். நீங்களும் தயக்கமின்றி உங்க வீட்டினரை எதிர்கொள்ள முடியும். நாங்க ஏற்பாடு செய்யட்டுமா?'' என்றாள் கங்கா.

"ஆன்ட்டி நீங்க ரொம்ப வருஷமா இங்கேயே வசிக்கிறவங்க. பல நாட்டு மக்களை பாத்து பழகினவங்க. சம்பிரதாயங்களால் மட்டும்தான் ஒரு பந்தம் முழுமையடைவதாக நீங்க கூட நினைக்கறீங்களா?''

"இல்லைதான். இருந்தாலும் சடங்கு சம்பிரதாயங்கள் நமக்கு ஒரு பாதுகாப்பை தருகின்றன நைனிதா. கௌசிக்கின் மனைவி ஸ்வீடிஷ் பெண்தான் என்றாலும் அவங்க முறைப்படி சர்ச்சிலும், இந்தியா வந்த போது நம்ம முறைப்படி கோவிலில் உறவினர்களை அழைத்தும் திருமணம் செய்தோம். இப்ப ஸாரா கையில் மோதிரமும் இல்லை. கழுத்தில் தாலியும் இல்லை. ஆனாலும் கௌசிக் அவளை புறக்கணிக்க முடியாது. அரசாங்கத்துக்கு, உறவினர்களுக்கு பதில் சொல்ல வேண்டும் அவன்.''

''அப்படியானால் என் பெற்றோர்களின் வாழ்க்கையை ஏன் எந்த அரசாங்கமும் உறவினர்களும் கேள்வி கேட்கவில்லை ஆன்ட்டி?'' கங்கா பதில் பேச முடியாமல் யோசிக்க, ரோஹித் சொன்னான்.

''நைனி நாம் ஏற்கனவே பேசியபடி உன்னுடைய கருத்துதான் எனக்கும். ஆனால் நம் நாட்டில் இதை எத்தனை பேருக்கு புரிய வைக்க முடியும்? இதனால் ஏதும் அவப்பெயர் ஏற்பட்டால் அது என்னை விட பெண் என்பதால் உன்னைத்தான் அதிகம் பாதிக்கும். அதைப் பற்றி நீ யோசித்தாயா?''



''நான் எதைப்பற்றியும் யோசிக்கப் போவதில்லை ரோஹித். நீ என் கூட இருந்தால் என்னால் எந்த சூழ்நிலையையும் சமாளிக்க முடியும்.''

''நீ எப்பவும் அந்த நம்பிக்கையுடன் இருந்தால் சரி'' என்றான் ரோஹித்.

''இருந்தாலும் நைனிதா....'' என கங்கா ஏதோ சொல்ல முயலவும், ''நீ எதுவும் சொல்லாதே கங்கா'' என்றார் கேசவன். ''அவர்கள் சின்னக் குழந்தைகள் இல்லை. பொறுப்பான வேலையில் இருப்பவர்கள். அவர்களுடைய உணர்ச்சிகளுக்கு நாம் மதிப்பளித்துதான் ஆகவேண்டும்.''

நைனிதாவும் ரோஹித்தும் இந்தியா திரும்புவதற்கான ஏற்பாட்டில் இருந்தார்கள். ரோஹித் அவனது நண்பன் மூலமாய் சென்னையில் வீடு பார்க்க சொல்லியிருந்தான். அவனது நண்பன் தான் ஒரு வேலையாய் மலேசியா செல்வதாகவும், திரும்பி வா ஒரு வருடம் ஆகும். அது வரை வீட்டை பர்னிச்சர்கள், பாத்திரங்களுடன் சேர்த்து உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்றும் சொன்னான்.

ரோஹித் அவனிடம் அட்வான்ஸ், வாடகையெல்லாம் பிக்ஸ் செய்து கொண்டு நைனியிடம் விபரம் சொன்னான்.

நைனிதா ஏமாற்றத்துடன் தலையசைத்தாள். ''நான் உங்க குடும்பத்துடன் வந்து இருக்கலாம் என்றிருந்தேன் ரோஹித். உங்க வீட்டினரை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.''

''ஆனால் அவங்களுக்கு இப்ப நம்மை பிடிக்குமா இல்லையான்னு தெரிஞ்சிட்டு கூட இருப்பதை பற்றி முடிவு செய்யலாம். எதற்கும் போனவுடன் வசிக்க நமக்கு

ஒரு தனி வீடு இருப்பது நல்லது. உன் கல்லூரிக்கும் பக்கமாய் இருக்கும்'' என்றான் ரோஹித்.

கேசவன் தம்பதிகளிடம் விடைபெற்று இருவரும் கிளம்புகையில் சொந்த பெற்றோரை பிரிவது போல் இருவருக்கும் வருத்தமாக இருந்தது. வெறிச்சோடிய தெருக்களை கடந்து டாக்ஸி செல்கையில் ''ரோஹித் உண்மையில் நான் இங்கே வரும்போது என் வாழ்க்கையில் பெரிய திருப்புமுனை இந்த நாட்டில் நடக்கும் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை'' என்றாள் நைனிதா.

''இந்தியாவில் இதைவிடப் பெரிய திருப்பம் கூட நமக்காக காத்திருக்கலாம் நைனி. தயாராய் இரு'' என்று அவள் கைகளை கோர்த்தபடி ஏர்போர்ட்டினுள் நுழைந்தான் ரோஹித்.

நைனிதா விமான நிலையத்தில் தனக்கு ஏற்கனவே அறிமுகமான அமெரிக்கப் பெண் ஹேசல் என்பவளை சந்தித்தாள். ''விடுமுறையை கழிக்க அமெரிக்கா போகிறாயா?'' என்றாள் நைனிதா அவளிடம்.

''இல்லை. நிரந்தரமாக என் தாய்நாட்டிற்கு செல்கிறேன்.''

''உன் கணவன் எங்கே?''

''என் கணவன் அலுவலகத்தில் அவனுடன் பணிபுரியும் ஒரு பெண்ணுடன் தவறான உறவு கொண்டிருக்கிறான். அவனுக்கு திருந்த ஒருமுறை சந்தர்ப்பம் அளித்துப் பார்த்தேன். அதில் ஏதும் பயனில்லாததால் நான் என் நாட்டிற்கு திரும்பச் செல்கிறேன்.''

நைனிதாவுக்கு ஹேசல் உருவத்தில் அம்மா தெரிந்தாள். உன் அப்பா அலுவலகத்தில் பணிபுரியும் பெண்



களிடம் நெருக்கமான உறவு வைத்திருக்கிறார் என்றாள். அமெரிக்காவானால் என்ன, அமிஞ்சிக்கரையானால் என்ன? பெண்களின் பிரச்சனை ஒன்றுதான் என்ற நினைவில் நைனிதா வாய்விட்டு சிரித்தாள்.

''என்ன விஷயம் நைனி?'' என்றான் ரோஹித் ப்ளைட்டில் அமர்ந்ததும்.

''கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும் நிறைந்த நம் நாட்டில்தான் பகிரங்கமாக எதையும் செய்யத் துணிவின்றி ரகசியமாய் அதை மீறி தவறான உறவு கொள்கிறார்கள். ப்ரீலவ் எனப்படும் வரைமுறைகளற்ற உறவு கொள்ளும் ஐரோப்பிய சமூகத்தில் கூட இந்த திருட்டுத்தனம் ஏன் வந்தது? அந்த நாட்டு அதிபராக இருந்தவரே மக்கள் முன் தலைகுனிந்து நிற்கிற நிலை எதனால் ஏற்பட்டது?'' என்றாள் நைனிதா.

''நாம் கற்புக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை அவர்கள் நேர்மைக்கு கொடுக்கிறார்கள் நைனி. ஒரு ஆணோ பெண்ணோ இரண்டு அல்லது மூன்று முறை திருமணம் செய்து கொள்வதால் திருமணத்திற்கு முன்பு உறவு கொள்வதால் அவர்கள் நேர்மை கெடுவதில்லை. ஆனால் மணமான பின் ஒருவருக்கு தெரியாமல் மற்றவர் அது கணவனோ, மனைவியோ ஒழுக்கம் தவறினால் அது இழிவான விஷயம். ஆனால் இதைப் பற்றி எல்லாம் நீ ரொம்ப யோசித்து குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. எனக்கு இன்னொரு பெண்ணை சமாளிக்கிற தைர்யம் எல்லாம் இல்லை நைனி. உன்னை பார்த்தாலே சில சமயம் பயமா இருக்கு.''

''நானென்ன பேயா, பூதமா? நீ பயப்பட?'' என நைனிதா செல்லமாய் கோபித்துக் கொண்டதும், ''இரண்

டும் இல்லை. என் தேவதை'' என அவளை முத்த மிட்டான் ரோஹித்.

''சே! என்ன ரோஹித் இது. ப்ளைட்ல போய்...'' நைனிதா சிணுங்கினாள்.

''இந்தியா போனதும் இந்த மாதிரி பகிரங்கமா உன்னை கொஞ்ச முடியாது. அதனால் நாம் போய் சேருகிறவரை நான் என்ன செஞ்சாலும் நீ அமைதியாகத்தான் இருந் தாகணும்.''

''அந்தரங்க உணர்வுகளை என்னால் பகிரங்கப்படுத்த முடியாது. அது எந்த நாடானாலும் சரி.''

''ஓ.கே. அப்படின்னா இங்கேயே உட்கார். அந்த ஏர்ஹோஸ்டஸ் பாத்தியா, ரொம்ப நேரமா என்னையே பாத்துட்டு இருக்கா. நான் போய் என்னன்னு விசாரிச்சிட்டு வரேன்.'' என ரோஹித் எழுந்திருக்கவும் நைனிதா சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''என்ன அடிக்கறதுக்கு ஏதாவது கிடைக்குமான்னு பாக்கறியா? இது ப்ளைட்மா. எதுவும் கிடைக்காது.''

''இல்ல, இங்க ஏதாவது திறக்கறமாதிரி ஜன்னல் இருக்கான்னு பார்க்கறேன்.''

''எதுக்கு?''

''உன்னை கீழே தள்ளி விடத்தான்.''

''கொலைகாரி...''

ப்ளைட்டில் ஏறியதிலிருந்து உற்சாகமாய் இருக்கும் அந்த தம்பதிகளைப் பார்த்ததும் பணிப்பெண்ணின் முகத்திலும் சிரிப்பு பரவியது. உணவு ட்ராலியை உருட் டியபடி அவர்கள் அருகே வந்து ''உங்களுக்கு என்ன உணவு வேண்டும்? சைவமா, அசைவமா?'' என்றாள் புன்னகையுடன்.



# 11

முன்பே முடிவு செய்திருந்தபடி நைனிதாவும் ரோஹித்தும் சென்னை போய் சேர்ந்ததும், ''வீட்டுக்கு போன பிறகு போன் செய்கிறேன்'' என்றபடி அவரவர் வீடுகளுக்கு சென்றார்கள். முன்கூட்டியே தகவல் தெரி விக்காததால் அவர்களை அழைத்துப் போக யாரும் வரவில்லை.

நைனிதா டாக்ஸியை விட்டு இறங்கி வீட்டிற்குள் நுழையும்போது சிதம்பரம் டைனிங்டேபிளில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

''ஓ... உன் படிப்பு முடிந்து போயிற்றா? உனக்கு உப யோகமாக இருந்ததா? பிரயாணம் சுகமாய் இருந்ததா?'' என்றபடி தொடர்ந்து சாப்பிடத் தொடங்கினார்.

அம்மா வழக்கம் போல் அவளது அறையில் இருந்தாள். நைனிதாவைப் பார்த்ததும் ''வந்துட்டியா! மறுபடி எப்ப வேலையில சேரணும்? உங்கப்பா நாளை பிஸினஸ் விஷயமா கொல்கத்தா போறாராம். நீங்கள் எல்லாம் ஏதாவது காரணம் சொல்லிட்டு எங்க வேணா போவீங்க. நான் ஒருத்தி இருக்கேங்கிற நினைப்பில்லாம...''

நைனிதாவுக்கு சில மாதங்களாய் மனசில் பொங்கிய உற்சாகமும், உல்லாசமும் வடிந்து போனது. எந்த நிலையிலும் இந்த வீடு மாறாது. இத்தனை நாள் பிரிவுக்கு பின்னர் மகளைப் பார்க்கும் போதும் பாசமாய் ஒரு வார்த்தை பேசாமல் தங்கள் பிரச்சனைகளிலேயே மூழ்கி கிடப்பவர்கள் எப்போதும் அதை விட்டு வெளியே வர

மாட்டார்கள். இவர்களுக்காக என் வாழ்க்கையை விரய மாக்கிக் கொள்வது வடிகட்டிய முட்டாள்தனம்.

கலாவதி தொடர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருக்க நைனிதா சத்தமில்லாமல் எழுந்து உள்ளே சென்றாள். தன் அறைக்கு சென்றபோது எதிரே சரணின் அறைக்கதவு திறந்தது. அவளை எதிர்பார்த்திராத வியப்புடன் சரண் 'ஹாய்' என்றான்.

''என்ன போன் கூட பண்ணாமல் வந்திருக்கிறாய்? டிரிப் எப்படி இருந்தது? எந்தெந்த நாட்டுக்கெல்லாம் போனாய்?'' என அவன் விசாரிக்கவும் நைனிதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. நம்மைப் பற்றி நினைக்கவும், விசாரிக்கவும் இந்த வீட்டில் ஒருவனாவது இருக்கிறான் என்ற நிம்மதியில் நைனிதா அவனிடம் தன் படிப்பைப் பற்றி, பொதுவாக பேசிக் கொண்டிருந்தாள்.

சாந்தம்மா கொண்டு வந்த டீயை அவளுடன் அமர்ந்து குடித்தபின் ''எனக்கு க்ளாசுக்கு நேரமாச்சு'' என்று அவன் கிளம்பினான்.

நைனிதா வியப்புடன் பார்க்கவும், ''என் வாழ்க்கையை நான் வாழ வேண்டாமா? கிடைக்காத விஷயங்களுக்கு ஏங்கறதில்லைன்னு முடிவெடுத்துட்டேன்'' என்றான்.

''வெரிகுட்'' என்றாள் நைனிதா மகிழ்ச்சியுடன் அவன் கைகளை குலுக்கி.

''நீ கூட இங்கிருந்ததை விட அழகாய்ட்ட'' என்று சிரித்தபடி அவன் கிளம்பிப் போனான்.

நைனிதா வியப்புடன் பார்த்தபடி நின்றிருக்க, காலி டீ கப்பை எடுக்க வந்த சாந்தம்மா ''சரண் இப்ப ரொம்ப நல்லபடியா மாறிடிச்சும்மா. வெளியே அதிகமா போறதே



யில்லை. காலேஜ் விட்டதும் வீட்டிற்கு வந்து படித்துக் கொண்டேதான் இருக்கும்'' என்றாள்.

''ஆமாம் சாந்தம்மா. எனக்கும் சந்தோஷமாக இருக் கிறது'' என்றாள் நைனிதா.

அப்பா நாளை கிளம்புவதற்குள் அவரிடம் பேசியாக வேண்டும் என்று முடிவெடுத்த நைனிதா பெரிய பெட் டியை பிரித்து அதில் தன் சர்டிபிகேட்களையும் முக்கிய பொருட்களையும் எடுத்து வைக்கத் தொடங்கினாள்.

''இப்பதானம்மா ஊர்லயிருந்து வந்தீங்க, மறுபடி கிளம்பப் போறீங்களா?'' என்ற சாந்தம்மாவிடம் ''உனக்கு நைட் பதில் சொல்றேன்'' என்றபடி நைனிதா தன் வேலையை கவனித்தாள்.

இரவு சிதம்பரம் வழக்கத்தை விட முன்னதாக வந்து விட்டிருந்தார். ''அப்பா உங்கிட்ட ஒரு முக்கியமான விஷ யம் பேசணும். கொஞ்சம் வெயிட் பண்ணுங்கப்பா வரு கிறேன்'' என்று நைனிதா போய் கலாவதியை அழைத்து வந்தாள்.

மனைவியைப் பார்த்ததும் சிதம்பரத்தின் முகம் கடுப் பாயிற்று. ''ஏதாவது பஞ்சாயத்தா? அதுக்கெல்லாம் இப்போ எனக்கு நேரமில்லை'' என்றார்.

''என்னிக்குமே நேரமிருந்தாலும் உட்கார்ந்து பேச உங்களுக்கு மனசிருக்காதுன்னு தெரியும் எனக்கு'' என்றாள் கலாவதி.

''தெரியுதில்ல, பின்ன எதுக்கு இந்த ஏற்பாடெல்லாம்?''

''எனக்குத் தெரியாது.''

சிதம்பரம் ஏதோ பேச வாயெடுக்கவும் நைனிதா முந்திக் கொண்டாள்.

"உங்க ரெண்டு பேர் பிரச்சனையைத் தவிர வேறு விஷயமே இல்லையா இந்த வீட்டில்? நான் என்னைப் பத்தி பேசணும்."

"என்ன பேசணும்? பணம் ஏதாவது வேணுமா? வேறு எங்கியாவது படிக்கப் போகணுமா?" என்றார் சிதம்பரம்.

"இன்னும் எதுக்கு படிக்கணும்? பெரிய பெரிய இடத்தி லிருந்தெல்லாம் வரன் வருது. என் அண்ணனும் அமெரிக்காவிலிருந்து அவர் மகனுக்கு கேட்டு போன் பண்ணிட்டே இருக்கார். பொண்ணுக்கு கல்யாணம் பண்ணனும்னு பொறுப்பு இருந்தாத்தானே?"

"என்ன உங்க அண்ணன் பையனுக்கு கொடுக்க ணுமா?" என்றார் சிதம்பரம் கிண்டலாய்.

"ஏன் அவரை விட பெரிய இடம் உங்களுக்கு கிடைத்துவிடுமா?" என்றாள் கலாவதி.

"உங்க வீட்ல பொண் எடுத்து என் நிம்மதி போச்சு. இதில பொண்ணையும் அங்கேயே கொடுக்கணுமா?"

"அம்மா... அப்பா ப்ளீஸ். நான் சொல்றதை கேளுங்க" என்றாள் நைனிதா உரத்த குரலில். "நீங்க யாரும் எனக்கு வரன் பார்க்க வேண்டாம். அதுக்காக அடிச்சிக்கவும் வேண்டாம். நானே பாத்து பழகி, நாங்க கணவன் மனைவியாவும் ஆயாச்சு."

சிதம்பரமும் கலாவதியும் திடுக்கிடுவது வெளிப் படையாக தெரிந்தது.

"என்னடீ குண்டைத் தூக்கிப் போடற? இந்த வீட்ல இருக்கிற பிரச்சனை போதாதுன்னு நீ வேறயா?" என கலாவதி பெருத்த குரலில் அலற ஆரம்பிக்க 'ஷ்' என்று அவளை அடக்கினார் சிதம்பரம்.



"அந்தப் பையன் யார்? குடும்பம் எப்படி?" என்றார் மகளிடம்.

ரோஹித்தின் வேலை, குடும்ப விபரங்களை கேட்டு சமாதானமானவராக, "பாலசுந்தரத்தை எனக்கு நன்றாக தெரியும். நீங்க ரெண்டு பேரும் எங்க பாத்து, எப்படி கல்யாணம் பண்ணிகிட்டீங்க?" என்றார்.

"சென்னையில்தான் முதன்முதலில் சந்தித்தோம். ரோஹித் அவனது வேலையாய் நார்வே வந்திருந்தபோது பழகி பிடித்துப் போய் கணவன் மனைவியாகி விட்டோம்."

"உங்க கல்யாணத்தை யார் நடத்தி வைத்தார்கள்? கேசவனா? அவன் கூட எனக்கு தகவல் தரவில்லை?"

"யாரும் நடத்தி வைக்கவில்லை."

"அப்படியென்றால்?"

"நாங்க கணவன் மனைவியாகத்தான் வாழ்ந்தோம். வாழவும் போகிறோம். ஆனால் திருமணம் செய்து கொள் ளாமல்."

"என்னடி சொல்ற?" என்றாள் கலாவதி பயத்துடன்.

"உண்மையைத்தான் சொல்கிறேன். மனசு ஒத்து போறதுதான் முக்கியம். சம்பிரதாயங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. சடங்கு சம்பிரதாயப்படி நடந்த திருமணத்தின் அவல நிலையை நான் பிறந்ததிலிருந்து பார்த்து வந்திருக்கிறேன். அப்படியிருக்க எனக்கு எப்படி அதில் ஈடுபாடு வரும்?"

அதிர்ந்து போனவர்களாய் சிதம்பரமும் கலாவதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நாங்க சந்தோஷமா இல்லைங்கிறதுக்காக நீ வைப்பாட் டியா வாழ போறீயாடீ?" என்றாள் கலாவதி குரோதத்துடன்.

'ச்சீ' என்றாள் நைனிதா அருவெறுப்புடன். "உனக்கு நாகரீகமா பேசத் தெரியாதுன்னு எனக்கு மறந்து போச்சும்மா".

"நானில்லடி- நாளைக்கு ஊரே பேசும்."

"நான் காயப்பட்டு நிற்கும் போது மருந்து போடாத ஊர் சந்தோஷமா வாழும்போது கலைக்க பாத்துச்சின்னா அந்த ஊரைப் பத்தி நான் ஏன் கவலைப்படணும்?"

"நைனிதா நீ சாதுவான பொண்ணு. புத்திசாலின்னு நினைச்சேன். இப்படி நடந்துக்குவேன்னு நினைச்சிக் கூட பார்க்கல" என்றார் சிதம்பரம் அடிபட்டவராக.

"இதை மட்டுமா நீங்க நினைச்சிப் பார்க்கல? உங்க பிள்ளைகளுக்கும் மனசிருக்கு. சரியான முறையில் அவங்களை கையாளலைன்னா அவர்கள் விபரீத முடிவுகளை தேடிப் போவார்கள்னு கூடத்தான் நீங்க நினைக்கல. என்னுடைய இந்த முடிவுக்கு நீங்க இருவரும்தான் காரணம். சரணுக்கு உங்களிடம் ஏற்பட்டிருக்கும் ஒதுக்கம் வெறுப்பாகிவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இல்லை எனில் அவனுக்கும் புத்தி வக்கரித்துப் போகும் என்னைப் போல. உங்களுக்கு வயதான பிறகு கை நழுவிப் போன பிள்ளைகளை நினைத்து வருந்தி எந்த பிரயோசனமும் இல்லை" மேலே பேசமுடியாமல் நைனிதாவுக்கு உணர்ச்சி வேகத்தில் தொண்டை அடைத்தது.

தன் அறைக்கு போக திரும்பியபோது, ஹாலின் ஓரத்தில் சரண் அமைதியாய் நின்றிருந்தான். நைனிதா அவனைப் பார்த்ததும் அவள் அருகில் வந்தான். "நீ செய்றது சரின்னு என்னால மனப்பூர்வமா சொல்ல முடியல. ஆனா தங்களோட மண வாழ்க்கையை சீர்ப்படுத்திக்க தெரியாத நம் பெற்றோர் உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சி தருவாங்களாங்கறது சந்தேகம்தான். பணம், அந்தஸ்து பார்ப்பாங்களே தவிர, மனசை பாக்கமாட்டாங்க. ரோஹித்தை உனக்கு பிடிச்சிருக்கு. நீ சந்தோஷமா இருக்கேங்கறது உன் முகத்தைப் பார்த்தாலே தெரியுது. ஒரு தாம்பத்தியத்துக்கு ம்யூச்சுவல் அண்டர்ஸ்டாண்டிங்தான் ரொம்ப முக்கியம். நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கணும்" என்றான் கலங்கிய கண்களுடன்.

இனி இந்த வீட்டில் இவன் தனி என்ற நினைவில் "சரண் நீயும் என்னோடு வந்துவிடு" என்றாள் நைனிதா.

"பார்க்கலாம். எனக்கு தோணும்போது வருகிறேன்" என்றான் சரண்.

காலையில் நைனிதா பெட்டியுடன் ரோஹித்தும் அவளும் தங்குவதற்கென பார்த்து வைத்திருந்த வீட்டிற்கு போவதென முடிவெடுத்து கிளம்பினாள். ரோஹித்தின் பெற்றோர்களிடமிருந்து பதில் வரும்வரை அங்கே தங்கலாம் என்று நினைத்தாள்.

நைனிதா கீழே வந்த போது வழக்கமாய் அந்த நேரத்தில் வீட்டில் இருக்காத அப்பா அதிசயமாய் சோபாவில் அமர்ந்திருந்தார். அதை விட அதிசயமாய் அப்பாவைப் பார்த்ததும், வீட்டின் பின்புறமோ, தன் அறைக்கோ சென்று விடும் அம்மா இன்று அப்பாவின் எதிரிலேயே இருந்தாள். என் மீதுள்ள கோபம் இருவரையும் சேர்த்து வைத்தால் நல்லதுதான் என்று நினைத்தபடி நைனிதா அவர்களிடம் விடை பெற்றாள்.

"சோ, எங்க மானத்தை வாங்கறதுன்னு தீர்மானிச்சிட்டே இல்ல? பிறந்ததிலிருந்து உனக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து சொந்தக்காலில் நீ நிற்குமளவிற்கு உருவாக்கியதற்கு இந்த அவமானம்தான் நீ குடுக்கற பரிசா?" என்றார் சிதம்பரம்.

"இதில் அவமானம் எங்கிருந்து வந்தது அப்பா? ஒரு பெண் கணவனுடன் வாழ்வதுதானே நடைமுறை?"

"கணவன் என்று நீதான் சொல்கிறாய். சட்டமோ சமூகமோ சொல்லாது."

"அதைப்பற்றி எனக்கு கவலையில்லை. ரோஹித் எனக்கு என்ன உறவாகணும்னு நாங்கதான் முடிவு செய்யணும். இதில் தலையிட சமூகத்திற்கு யார் அதிகாரம் தந்தது?"

கலாவதி கோபத்துடன் குறுக்கிட்டாள். "ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள்னு உன்னை உபயோகப் படுத்திவிட்டு அவன் தூக்கி எறிஞ்சிட்டு போயிடுவான், யாரும் அவனை கேள்வி கேட்க முடியாது. எனக்கு கல்யாணமே நடக்கலைன்னு வேறொரு பெண்ணை அவன் திருமணம் செய்து கொண்டாலும் உன்னால் எதுவும் செய்ய முடியாது."

"எனக்கு அவன் மீது நம்பிக்கை இருக்கிறது" என்றாள் நைனிதா உறுதியான குரலில்.

"இப்ப தெரியாது உனக்கு. ஒருநாள் தனியா நிற்கிறப்ப தெரியும் நான் சொன்னது என்னன்னு?" கலாவதி சபிப்பது போல் சொன்னதும்,

நைனிதாவுக்கு வருத்தமாக இருந்தது. வெளிநாட்டு வாழ்க்கையில் பழகிப் போன கேசவன் தம்பதிகளின் பெருந்தன்மையை தனது பெற்றோரிடம் எதிர்பார்க்கக் கூடாது என்று நினைத்தபடி நைனிதா காத்திருந்த வாடகைக் காரில் ஏறினாள். ரோஹித்திற்கு டயல் செய்த படி வீட்டைத் திரும்பிப் பார்க்கையில் பால்கனி க்ரில்லை பிடித்தபடி சரணும், வாயிலருகே கண்களைத் துடைத்த படி சாந்தம்மாவும் நிற்பது தெரிந்தது.



# 12

ரோஹித் சுற்றிலும் வீட்டைப் பார்த்தான். இரண்டு படுக்கை அறைகளுடன் கச்சிதமான ப்ளாட். சோபா, டீ.வி, வாஷிங்மெஷின், காஸ் அடுப்பு, சமையலறைப் பொருட்கள் அனைத்தும் இருந்தன. காய்கறியும், பாலும் எங்கே கிடைக்குமென விசாரித்து அதையும் வாங்கிவந்து ப்ரிஜ்ஜில் வைத்த போது அவனது செல்போன் ஒலித்தது. நைனிதாவின் நம்பரைப் பார்த்ததும் "யாரது?" என்றான் ரோஹித் அலட்சியமாக.

"நான் நைனிதா ரோஹித்."

"ஐயம் ஸாரி. எனக்கு அப்படி யாரையும் தெரியாது." என்றபடி கட் பண்ணினான்.

திரும்பவும் மணி அடித்தது. எடுத்ததும் "ரோஹித் விளையாடாதே. நான் உன்னிடம் முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்" என்றாள் நைனிதா.

"நீங்க யார்னே தெரியாமே உங்ககூட எப்படி பேச முடியும்? நீங்க ஏதோ நெம்பர் தப்பா போட்டுட்டீங்கன்னு நினைக்கிறேன். சரியான நெம்பர் பார்த்து பண்ணுங்க" என மறுபடி கட் பண்ணினான்.

"டேய், எப்ப ஜோக் பண்றதுன்னு தெரியாது? இடியட். நான் எங்க வீட்லயிருந்து கிளம்பி நம்ம புது வீட்டுக்கு வந்துட்டிருக்கேன். நீ எங்க இருக்க? வீடு சாவி யார்கிட்ட இருக்கு?"

"அடடா ஒரு பையன் அழகா இருந்தா விடமாட் டீங்களே! உடனே துரத்த ஆரம்பிச்சிடுவீங்களே

இதுக்கெல்லாம் நான் அசர மாட்டேன். வேற ஆள் பாருங்க."

"ஏய் நான் மட்டும் உன் எதிர்ல இருந்தேன், நீ அவ்வளவுதான்."

"எம்மா ஒருதரம் சொன்னாப் புரியாது? நீங்க யார்னே தெரியாதுங்கறேன். சும்மா தொல்லை பண்ணிட்டு. நான் என் புது வீட்ல ஜாலியா இருக்கேன். இனிமே கூப்பிடாதீங்க."

"கூப்பிட மாட்டேண்டா. நேர்ல வர்றேன்."

ரோஹித் சிரித்தபடி போனை கட் பண்ணினான்.

ஜன்னல் வழியாய் தெருவை வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்த பதினைந்து நிமிடத்தில் ஒரு டாக்ஸி அந்த அபார்ட்மெண்ட் வாசலில் நின்றது. அதிலிருந்து இறங்கிய நைனிதா கேட்டிலிருந்து வாட்ச்மேனிடம் விபரம் கேட்பது தெரிந்ததும் ரோஹித் வாயில் கதவைத் திறந்துவிட்டு காத்திருந்தான். சில நிமிடங்களில் உள்ளே வந்த நைனிதா அவனைக் காணாமல் குரல் கொடுத்தாள்.

"ரோஹித்."

உள்ளேயிருந்து வந்த ரோஹித் "என்ன விஷயம்?" என்றான் கடுமையான முகத்துடன்.

"என்னது, என்ன விஷயம்னு கேட்கற?"

"புரியலையா? இங்க எதுக்கு வந்துருக்க?"

"சே! எப்பவும் விளையாட்டுதானா உனக்கு?" என்று சிரித்தபடி நைனிதா பெட்டியுடன் அறைக்குள் செல்ல முயலவும் ரோஹித் வழி மறித்தான்.

"ஏதோ வெளிநாட்டில் சந்தித்துப் பழகினோம். சந்தோஷமாய் இருந்தோம். அத்துடன் எல்லாம் முடிஞ்சி



போச்சு. இங்கு நீ யாரோ, நான் யாரோ? நீ இப்படி பெட்டியுடன் நான் தனியாக இருக்குமிடத்திற்கு வந்தால் பார்க்கிறவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?"

அதுவரை முகத்திலிருந்த சிரிப்பு மறைந்துபோக நைனிதா ஒரு நிமிடம் அசையாமல் நின்றாள். "நீ சொல்வது உண்மைதான் ரோஹித். ஸாரி. நான் வருகிறேன்" என பெட்டியுடன் வாயிலை நோக்கி நடந்தாள்.

ஒரு நிமிடம் கைகட்டி வேடிக்கைப் பார்த்த ரோஹித், அவள் வாயில் கதவைத் திறக்க முற்பட்டதும் அவள் அருகே ஓடி கையிலிருந்த பெட்டியைப் பிடுங்கினான்.

"உள்ளே வா நைனி."

"முடியாது. உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதபோது நான் ஏன் உன் வீட்டுக்கு வரணும்?" கோபமாக தலையைத் திருப்பினாள் நைனிதா. அந்த கோபத்திற்கு நேர் மாறாய் கரிய பெரிய கண்களிலிருந்து நீர் ததும்பி நீளமான இமைகளின் வழியே வடியத் தொடங்கவும் ரோஹித் துடித்துப் போனான். "நைனி, என்னடா இது? எவ்வளவு தைர்யசாலி நீ! நீயா அழறது? நீ அழுது நான் பார்த்ததே இல்லையே!" அவள் முகத்தைப் பற்றி கண்ணீரைத் துடைக்கவும் நைனிதா அவன் கைகளை உதறினாள்.

"விடு என்னை?"

"நான் போன்னு சொன்னா உடனே போயிடுவியா நைனி? இது என் வீடுன்னு சொல்ல வேண்டாமா? என்னையாடா போகச் சொன்னேன்னு சட்டையைப் பிடித்து உலுக்க வேண்டாமா? என்ன பொண்டாட்டி நீ?"

"உன்னுடன் வாழ்வதற்காக தனியே புறப்பட்டு வந்திருக்கிறேன் ரோஹித். என் பெற்றோர் எப்படி

என்னிடம் பாசத்தை கொட்டியதில்லையோ அதே போல் கோபத்தையும் காட்டியதில்லை. ஆனா இன்னிக்கு அப்பா கோபித்துக் கொண்டார். அம்மா கிட்டத்தட்ட சாபமே கொடுத்தார்கள். நான் நடந்து கொள்ளும் முறை நியாய மானதுதான் என்ற நம்பிக்கை ஒரு பக்கம் இருந்தாலும் பெற்றோர் வருந்துவது மறு பக்கம் வருத்தமாக இருந்தது. அந்த வருத்தத்தில் உன்னைத் தேடி வந்தால் நீயும் அழ வைத்துப் பார்க்கிறாய்."

"ஸாரி... நைனி... வெரி ஸாரி... உன்னை வருத்தப்பட வைக்க நான் செய்வேனா? உன்னை சீண்டிவிட்டால் என்னுடன் சண்டை போடுவாய். அடிப்பாய். மோதலில் தொடங்கி பின் காதலில் முடியும் என்று நினைத்துச் செய்தேன்." நைனிதா திமிறத் திமிற அவளை அணைத் துக் கொண்ட ரோஹித், "எனக்கும் இன்றிலிருந்து நீதான் எல்லாம்" என்றான் அவள் காதருகே.

திகைப்புடன் அவன் முகத்தைப் பார்த்தாள் நைனிதா. "ஏன் ரோஹித், உன் பெற்றோர்கள் என்ன சொன்னார்கள்?"

ரோஹித்திற்கு நடந்த நிகழ்ச்சிகள் கண் முன் நிழ லாடின. ஏர்போர்ட்டில் நைனிதாவுக்கு விடை கொடுத்து அவள் வீட்டிற்கு அனுப்பிய பின் ரோஹித் ஒரு டாக் ஸியை பிடித்து தன் வீட்டிற்குச் சென்றான். வீட்டினருக்கு அவனை எதிர்பாராமல் பார்த்தது வியப்பாக இருந்தது.

"என்னடா ஒரு போன்கூட பண்ணாம அடுத்த தெருவி லிருந்து வர்ற மாதிரி வந்து நிக்கற?" என்றாள் லட்சுமி.

"டிக்கெட் கிடைச்ச பிறகு போன் செய்யலாம்னு இருந் தேன். கிடைச்ச பிறகு கிளம்பத்தான் நேரம் சரியா இருந்தது. சரி நம்ம வீட்டுக்குத்தானே போறோம்னு பண்ணாமலே இருந்துட்டேன்" என்றான் ரோஹித்.



குளித்துவிட்டு வந்து ஆற அமர சாப்பிட்டுவிட்டு வைசாலியையும், ப்ரணவ்வையும் கொஞ்சி அவர்களுக்கு வாங்கி வந்த பொருட்களை எல்லாம் கொடுத்தான். பின்னர் அப்பா, ராஜா, கார்த்திக்கிடம் வியாபார விஷயங்களைத் தெரிவித்தான்.

"என்னால நம்பவே முடியல" என்றான் கார்த்திக். "ரோஹித் சும்மா டூர் போயிருக்கிறான். அவன் வந்த பிறகு நாமதான் போய் வியாபார விஷயங்களை கவனிக் கணும்னு நினைச்சிட்டு இருந்தேன். ஆனால் ரோஹித் எல்லா விஷயத்தையும் முடிச்சிட்டு வந்துட்டானே! அதிசயம்தான்."

"பின்ன என் தம்பின்னா, சும்மாவா?" என்றான் ராஜா.

"அப்ப நான் யார்? உனக்கு மாமனா இல்ல மச்சினனா?" என்றான் கார்த்திக்.

அன்று குழந்தைகள் ஸ்கூலுக்கு லீவ் போட்டிருந் தார்கள். பெரியவர்களும் வீட்டிலேயே இருந்ததால் வீடு கலகலப்பாக இருந்தது.

"ரோஹித் ஆள் முன்னைவிட மெருகேறி கலராய் ஸ்மார்ட்டாய் ஆகிவிட்டான் இல்லையா?" என்றான் ராஜா.

"அதெல்லாம் கல்யாண களைடா. வயசாச்சில்ல? சீக்கிரமா நாம போன பாத்த பொண்ணையே பேசி முடிச்சிடலாம்" என்றாள் லட்சுமி. தன் திருமணம் பற்றி ஆளுக்காள் பேசவும் இனிமேலும் அமைதியாய் இருப்பதில் லாபமில்லை என்று ரோஹித் மெதுவாய் வாய் திறந்தான்.

நைனிதாவுக்கும் தனக்கும் ஏற்பட்டுப் போன காதலைப் பற்றி, தங்களுக்குள் ஏற்பட்ட நெருக்கத்தையும், தாங்கள்

சேர்ந்து வாழப் போவதாக முடிவு செய்திருப்பதையும் கூறியதும் வீட்டினர் அதிர்ந்து போனார்கள்.

"அந்த பெண் பாக்கறதுக்கு நல்லவளா தெரிஞ்சாளே, இப்படிப்பட்ட பொண்ணுன்னு நினைக்கலையே!" என்றாள் சுகுணா ஆற்றாமையுடன்.

"நைனிதா ரொம்ப நல்ல பெண் அண்ணி. பாசாங்கே இல்லாத குணம். மற்றவர் அபிப்ராயத்திற்காக நடிக்கத் தெரியாதவள்."

"என்னடா நல்ல பெண்?" என்றாள் லட்சுமி கோபத்துடன். "நல்ல குடும்பத்தில் பிறந்த மானமுள்ள எந்த பெண்ணாவது கழுத்தில் தாலி இல்லாமல் ஒருவனுடன் சேர்ந்த வாழ ஒத்துக் கொள்வாளா? இதிலிருந்தே தெரியவில்லையா? அவள் எப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து வந்தவள் என்று."

"அம்மா நானும் கூடத்தான் தாலி கட்டாமலேயே அவளுடன் வாழப் போகிறேன். அதற்காக நம் குடும்பத்தையும் கேவலம் என்பாயா?"

ரோஹித் கேட்டதும் லட்சுமி வாயடைத்துப் போனாள்.

"ரோஹித் உன் வெளிநாட்டுப் பயணத்துக்கு இப்படி ஒரு காரணம் இருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை" என்றான் கார்த்திக்.

"அப்பாவே நீ காதல் திருமணம் செய்து கொள்ள சம்மதம் கொடுத்திருக்கிறார். அப்படியிருக்க அந்த பெண்ணை நேராய் அழைத்து வந்து அறிமுகப்படுத்தி பெற்றோர் முன்னிலையில் மணந்து கொள்ளாமல் இது என்னடா அசிங்கம்? நார்வேயில் நீ கற்றுக் கொண்ட நாகரீகம் இதுதானா? ரோஹித் யாரோ பெண்ணுடன்



தவறான உறவு வைத்திருக்கிறான் என்றுதான் தெரிந்தவர்கள் பேசுவார்களே தவிர உன் மனைவி என்று யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்." ராஜா தன்னால் முடிந்த வரை எடுத்துச் சொன்னான்.

"ஊராரின் வார்த்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நீ எத்தனை முறை வெளிநாடுகளுக்குப் போயிருக்கிறாய்? ஸ்வீடனில் திருமணம் ஆகாமலேயே சாகிற வரை சேர்ந்து வாழ்கிற 'சம்போ' தம்பதிகளை பார்த்திருக்கிறாய் தானே! அவர்களை யாரும் கௌரவக் குறைவாக நடத்துவதில்லையே! பல நாட்டு மக்களை பார்த்துப் பழகிய உனக்கு ஏன் இந்த குறுகிய மனம்?"

"ரோஹித் அவர்களது கலாச்சாரம் வேறு. நம்முடைய கலாச்சாரம் வேறு. நம்முடைய பழக்கங்கள் வேறு என்பது கூடவா உனக்கு புரியவில்லை?" ராஜா ஆதங்கத்துடன் கேட்டான்.

"அடிப்படையில் எல்லா மனிதர்களுக்கும் மனம் ஒன்றுதான்" என்றான் ரோஹித்.

ஏதோ பேச முற்பட்ட கார்த்திக்கை அதுவரை அமைதியாய் இருந்த பாலசுந்தரம் கையமர்த்தினார்.

இங்க பாரு ரோஹித். நீயும் சரி நைனிதாவும் சரி நல்ல குடும்பத்திலிருந்து வந்தவர்கள். இதுவரை கண்ணியமான வாழ்க்கை வாழ்ந்தவங்க. பல தேசங்களையும் மனிதர்களையும் பார்த்து பழகியதால் புத்தி விசாலமாகலாமே தவிர நம் கோட்பாடுகளை உடைத்தெறிய முடியாது. ஸ்வீடனில் ஒருவன் அடிபட்டால் ஸ்வீடிஷ் மொழியில் கத்துவான். நமக்கு வலிச்சா 'அம்மா'ன்னுதான் கத்துவோம். வேறுமொழி தெரிஞ்சாலும் கத்தத் தோணாது. தாய் மொழிக்கும், நாட்டிற்கும், பண்பாட்டிற்கும் இருக்கி

சக்தி அது. உங்க இருவரின் அன்பும் உயர்வானதாக இருக்க வேண்டுமானால் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். சமூகம் அங்கீகரிக்காத எந்த உறவும் கேலிக்கிடமாகிவிடும். நீங்க ரெண்டு பேரும் ஆடம்பரமில்லாம சிம்பிளாகவாவது திருமணம் செய்து கொள்ள வேண்டும். இல்லை அதெல்லாம் முடியாது. எங்கள் விருப்பப்படி தான் இருப்போம் என்றால் உங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் இங்கு யாருக்கும் இல்லை. உங்க விருப்பப்படி இருக்கலாம். ஆனால் இந்த வீட்டில் வேண்டாம். நாங்க பழமையில் ஊறிப் போனவங்க. இனிமே எங்களை மாத்திக்க முடியாது'' என்றபடி எழுந்து தன் அறைக்குச் சென்றார்.

எல்லோரும் பேச மனமற்று ஆளுக்கொரு திசையில் கலைந்து போக, ரோஹித்தின் அருகே வந்த சபிதா, ''இப்படி பண்ணிட்டீங்களே தம்பி? நைனிதாவுடன் நாம எல்லோரும் ஒரே வீட்டில் இருப்போம்னு இல்ல நினைச்சிட்டிருந்தேன்'' என்றாள்.

''இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல ரோஹித். நைனிதாவுடன் பேசுங்க. உங்களை நீங்க விரும்பிய பெண்ணைத் தானே கட்டிக்கச் சொல்றோம்! எதற்கு இந்த அர்த்தமற்ற பிடிவாதம்?'' என்றாள் சுகுணா கெஞ்சலாய்.

நைனிதாவின் அழகிய முகம் அவன் கண் முன் வந்தது. அவள் நம்பாத ஒரு விஷயத்தை வற்புறுத்தி வாழ்க்கையில் இருவரும் சேர்ந்து எடுத்த முதல் முடிவையே மாற்ற மனமற்றவனாய் பதில் ஏதும் சொல்லாமல் அமைதியாய் அங்கிருந்து அகன்றான் ரோஹித்.

காலையில் அத்தனை கலகலப்பாய் இருந்த வீட்டில் எங்கிருந்தோ கனத்த மௌனம் வந்து சூழ்ந்தது. மதிய



உணவு யாரும் தொடாமல் டேபிளில் அப்படியே இருந்தது. ரோஹித் மிக மிக சங்கடமாய் உணர்ந்தான். இதுவரை வீட்டில் இந்த மாதிரி ஒரு சூழ்நிலை நிலவியதில்லை. சரியோ தவறோ குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசி உடனே சமாதானமாகி விடுவார்கள் என்பதால் குடும்பத்திற்குள் மனக்கசப்போ அதனால் நிம்மதி கெட்டதோ இல்லை. முதன் முதலாய் தன்னால் இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டது அவனுக்கு வருத்தமாக இருந்தது. இங்கிருந்தால் எல்லோரும் நமக்கு அறிவுரை சொல்லி, அதை மறுத்தால் வருத்தப்படுவது தான் நடக்கும். எனவே, ரோஹித் தன் நண்பனைப் போய் பார்த்து தங்களுக்கென ஏற்பாடு செய்திருந்த அவன் ப்ளாட் சாவியை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

வீட்டில் அம்மாவும் அப்பாவும் கோவிலுக்கு போயிருந்தனர். ராஜாவும் கார்த்திக்கும் வெளியே போயிருக்க, அண்ணிகளும் குழந்தைகளும் மட்டும் இருந்தனர். தன் பொருட்களை பெட்டியிலும் ஏர்பேக்கிலும் எடுத்து அடுக்கியவன் சமையலறையிலிருந்த பெண்களை கூப்பிட்டான்.

''நான் கிளம்பறேன் அண்ணி. அப்பா சொன்னது போல் உங்களை எல்லாம் என் முடிவால் சங்கடப்படுத்த விரும்பல. எங்களுக்கு என் நண்பனின் வீடு ஒன்று காலியாய் கிடைத்திருக்கிறது. உங்கள் கௌரவம் குறுக்கிடாமல் இருந்தால் சொல்லுங்கள். ஒரு நாள் உங்களை என் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன். அம்மா, அப்பா, ராஜா, கார்த்திக்கிடம் சொல்லி விடுங்கள்'' என்றபடி மண்டியிட்டு ப்ரணவ்வையும், வைசாலியையும் முத்தமிட்டான்.

''ரோஹித் நல்ல தாம்பத்யத்தின் அடையாளமே மகிழ்ச்சியும் மனநிம்மதியும்தான். நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் வாழவேண்டும்.''

மணமாகி வந்த பதினைந்து வருடங்களில் கொழுந்தனை சொந்தத் தம்பியாகவே பாவிக்கத் தொடங்கி விட்ட சுகுணாவின் குரல் தழுதழுத்தது.

''என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க அண்ணி'' என்றபடி ரோஹித் சுகுணாவின் காலில் விழ சபிதாவால் கண்ணீரை அடக்க முடியவில்லை. திருமணம் முடிந்து நண்பர்களும் உறவினர்களும் புடைசூழ கேலியும் கிண்டலுமாய் வாழ்க்கையை தொடங்க வேண்டியவர்கள் இத்தனை சுற்றமும் அருகிலிருந்தும் அநாதையாய் இருக்கும் நிலையில் இருவரும் கண்ணீர் மல்க விடை கொடுத்தனர்.

ரோஹித் சொல்லி முடித்ததும் நைனிதா வருத்தத்துடன் தலையசைத்தாள்.

''எனக்கு நல்ல குடும்ப சூழல் அமையாததால் குடும்ப உறவுகளுக்கு ஆசைப்பட்டேன் ரோஹித். ஆனால் அது உன் குடும்பத்திலிருந்து உன்னைப் பிரித்து விடும் என்று நான் நினைக்கவேயில்லை.''

''என் வீட்டினருக்கு என் மேல் கோபம் இல்லை, வருத்தம்தான். நம்முடைய கொள்கைகளைத்தான் அவங்களால ஏத்துக்க முடியல. இந்த சமூகம் மெதுவாய் மாறும் நைனி. உடன்கட்டை ஏறுவதையும், பெண் அடிமைத்தனத்தையுமே நீதிகளாய் ஒரு காலத்தில் போதித்த சமூகம்தானே இது! இன்னிக்கு விதவை திருமணத்தையும், விவாகரத்தையும் பெண் உரிமை சட்டமும் இயற்றப்படவில்லையா? அது போல நம்மையும் நமக்குப் பின்னால் வருபவர்கள் முன் மாதிரியாக நினைப்பார்கள்.''

சிறிது நேரம் அமைதியில் கழிய, ''ரோஹித் நீ எப்போது வேலையில் சேரப் போகிறாய்?'' என்றாள் நைனிதா.



''இன்னும் இரண்டு நாளில் என் விடுமுறை முடிகிறது. உடனே சேர வேண்டும். நீ?''

''நான் அடுத்த வாரத்திலிருந்து வருவதாக கல்லூரிக்குத் தகவல் சொல்லி விட்டேன்.''

இருவரும் இரவெல்லாம் பேசிக் கொண்டிருந்து விட்டு உறங்குகையில் விடியற்காலை ஆகியிருந்தது. அவர்களது வீடு போல பெரியதாக இல்லை எனினும் அந்த சிறிய வீட்டில் ஒரு நிம்மதியும் திருப்தியும் மனதில் ஏற்படுவதை இருவருமே உணர்ந்தார்கள்.

இருவரும் வேலையில் சேர்ந்தவுடன் நாட்கள் வேகமாக நகர்ந்தது. ரோஹித் அவளிடம் சொன்னான். ''எனக்கு மருத்துவமனைக்குப் போனதும்தான் நைனி மனசே நிம்மதியாச்சு. என்ன இருந்தாலும் இதுதான் என் தொழில். நார்வேக்கு உன்னை பாக்க வர்றதுக்காக அப்பாவின் பிஸினஸ் பிரச்சனைகளில் சிக்கிக் கொண்டு போதும் போதும்னு ஆயாச்சு. நல்லவேளை முக்கிய விஷயங்களை எல்லாம் ராஜா கம்ப்யூட்டரில் பார்த்துக் கொண்டதால் நான் தப்பினேன். பிடிச்ச வேலையை செய்யும் போதுதான் நைனி அதை முழுத்திறமையுடன் செய்ய முடிகிறது. எனக்கு பிடிச்ச பொண்ணு. புடிச்ச வேலை. நான் ரொம்ப லக்கி நைனி.''

''லக்கிதான் ரோஹித். ஆனால் என்னைப் பாரேன். எனக்கு புடிச்ச வேலை மட்டும்தான் கிடைச்சிருக்கு'' என்றாள் நைனிதா சோகத்துடன்.

''ஐய்யய்யோ. உனக்கு உன் புருஷனை பிடிக்காதா? ஏன்?''

''என்னை உருப்படியா எந்த வேலையும் செய்ய விட மாட்டான். எப்பவும் சீண்டுவான். அல்லது சண்டை

போடுவான் கெஞ்சுவான். வீட்டிற்கு வந்ததும் என்னை காதலிப்பதைத் தவிர வேறு வேலையே இல்லை அவ னுக்கு. சரியான முரட்டுக் காதலன்."

"அடப்பாவமே, அப்படியானால் நைனி அதற்கு வழி சொல்லட்டுமா?"

"சொல்லேன்."

"பியாட்ரிஸ் என்று ஒரு பெண் உன் கணவனை காதலிப்பதாகச் சொன்னாளே! நீ வேண்டுமானால் அவளுக்கு ஒரு சான்ஸ் கொடுக்கலாமே!" குறும்புடன் மின்னிய ரோஹித்தின் கண்களைப் பார்த்த நைனிதா அவன் காதைத் திருகினாள்.

"பியாட்ரிஸ் இல்ல அந்த பிரம்மாவே வந்தாலும் இன்னொரு சான்ஸ் கிடைக்காது."

"நீ சரியான சுயநலம் பிடித்தவள்."

"ஆமாம். உன் விஷயத்தில் சுயநலமாத்தான் இருக் கணும். இல்லாட்டி நீ என்னை முழுங்கிடமாட்ட?"

"நீ எவ்வளவு உஷாரா இருந்தாலும் நான் உன்னை விழுங்கத்தான் போகிறேன்" என்றபடி ரோஹித் அவளை வளைக்க, நைனிதா மகிழ்ச்சியுடன் இரையானாள்.

## 13

நைனிதாவுக்கு கல்லூரியில் முதல்நாள் ஆரவார மான வரவேற்பு கிடைத்தது. பிரின்ஸிபாலும் சக ஆசிரியை களும் அவளது பயணம் பற்றி, படிப்பு பற்றி விசாரித்தனர்.



ஆறுமாத இடைவெளிக்கு பிறகு தன் வகுப்பு மாணவ மாணவிகளை சந்தித்த நைனிதாவுக்கு உத்வேகத்தில் மனம் நிறைந்தது.

"உங்களை மிஸ் பண்ணினோம் மேடம்" என்றார்கள் எல்லோரும் ஒரே குரலில்.

அன்றைய வகுப்பு கலந்துரையாடலாகவே சென்றது. நார்வேயின் அமைதி, ஸ்வீடனின் பரபரப்பு, ஜெர்மானிய ஆண்களின் ஆளுமை குணம் என பலவற்றை அலசி னார்கள். பல மாணவர்கள் வெளிநாடு சென்று வந்தவர் களாக இருந்ததால் அங்குள்ள சுத்தமான சாலைகளையும், பொது சொத்தைப் பராமரிக்கும் மக்களின் போக்கையும் பற்றிய தங்கள் வியப்பை வெளிப்படுத்தினார்கள். "நார்வே மக்கள் உலகிலேயே மனிதாபிமானம் மிகுந்தவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அது உண்மையா மேடம்?" என்றாள் ஒரு மாணவி.

"மக்கள் மட்டுமல்ல அரசாங்கம் கூட மக்களை மனிதாபிமானத்துடன் நடத்துகிறது. டிராபிக் சிக்னலை தாண்டும்போது பச்சை விளக்கெரிந்தால் அங்கு டக்டக் என்று மணிசத்தம் கேட்கும். பார்வையில்லாதவர்கள் சிக்னலை அறிந்து கொள்வதற்காக அந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ரூபாய் நாணயத்தின் நடுவே ஒரு பள்ளம் இருக்கும். அவர்கள் தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ள. நார்வேயில் குருடர்களுக்காகவே கட்டப்பட்ட பெரிய பூந்தோட்டம் ஒன்றிருக்கிறது. கண் தெரியாத அரசனால் கட்டப்பட்டது. மூலைக்கு மூலை பாட்டரிகள் பொருத்தப்பட்ட ரிக்கார்டர்கள் இருக்கின்றன. காற்றின் அசைவில் அது இயங்கி, பறவைகளின் ஒலி கேட்கிறது. பூங்காவைப் பற்றிய விபரங்கள் ஒலிக்கின்றன. நட்ட

நடுவில் பிரமாண்டமான ஸ்தூபி ஒன்றிருக்கிறது. காற்றடிக்கும்போது அது பலவிதமான இனிய இசையை எழுப்புகிறது.

பலர் தங்கள் ஓய்வு நாளில் நடக்க முடியாதவர்களை சக்கர நாற்காலியில் அழைத்துச் சென்று சுற்றிக் காண்பிப்பதை சேவையாகவே செய்து வருகிறார்கள்; இன்னும் இதுபோல நிறைய சொல்லலாம்'' என நைனிதா மாணவர்களுக்கு விளக்கம் அளித்தாள்.

வகுப்பு முடிந்ததற்கான மணியடித்து எல்லோரும் கலைய முற்படுகையில் மேடம் வெளிநாட்டுப் பயணம் உங்களை நன்றாக மாற்றி விட்டிருக்கிறது'' என்றாள் ஒரு மாணவி.

''ஆமாம். மோனோலிசா, ஸ்லிப்பிங் பியூட்டி என்றெல்லாம் கல்லூரியில் உங்களுக்கு பட்டப் பெயர்கள் உண்டு. ஆனால் இப்போது பட்டர்ப்ளை மாதிரி சிறகடிக்கிறீர்கள். உங்கள் முகத்தில் தெரியும் மகிழ்ச்சி, நடையில் தெரியும் துள்ளல் இதற்கெல்லாம் என்ன காரணம்? அல்லது யார் காரணம்?''

''உங்கள் சந்தேகங்கள் வகுப்பறைகளுடன் நிற்கட்டும்'' என்று சிரித்தபடி அவர்களுக்கு பதில் சொன்ன நைனிதா 'போக்கிரிப் பெண்கள்' என மனதினுள் செல்லமாய் கடிந்தபடி நடந்தாள்.

கல்லூரி முடிந்து வெளிவந்து பஸ்சுக்காக காத்திருக்கையில், இதுவரை பஸ்சில் போய் பழக்கம் இல்லாததால் அந்தக் கூட்டத்தைப் பார்த்து மிரட்சியாய் இருந்தது. ஒரு மணி நேரமாய் நின்றும் அவளால் ஒரு பஸ்சிலும் ஏற முடியவில்லை. இன்னிக்கு ஆட்டோவில் போய் விடலாம். பஸ் பயணத்தை நாளைக்கு பாத்துக்கலாம் என்று நினைத்தபடி



ஆட்டோவுக்காக காத்திருந்தபோது அவள் அருகே ஒரு பைக் வந்து நின்றது.

''நைனிதா வா கொண்டு போய் விடுகிறேன்'' என்றான் சரண்.

நைனிதா மிகுந்த சந்தோஷத்துடன் பில்லியனில் அமர்ந்தாள்.

வேகமாகச் சென்ற வண்டியின் எதிர்காற்றுக்கு பறந்த முடியை ஒதுக்கியபடி ''அம்மா, அப்பா எப்படியிருக்கிறார்கள் சரண்?'' என்றாள் நைனிதா.

''அமைதியாய் இருக்கிறார்கள். வெளியே போனால் யார் என்ன கேட்பார்களோ என்ற பயத்தில் அம்மா கோவிலுக்குப் போவதைக் கூட விட்டு விட்டாள். அப்பா அலுவலகத்தைத் தவிர பார்ட்டி, க்ளப் என்று எங்கும் போவதைக் காணோம். இருவருக்கும் அடிக்கடி நடக்கும் சண்டைகள் கூட இல்லை.''

''அப்படியானால் அவர்களுக்குள் ஒரு நெருக்கம் ஏற்பட்டிருக்கிறதா சரண்?'' நைனிதா ஆர்வத்துடன் விசாரித்தாள்.

''அதென்னவோ தெரியாது. இப்போதெல்லாம் தினமும் எனக்கு அம்மாதான் சாப்பாடு எடுத்து வைக்கிறாள். அப்பா 'என்ன படிக்கிறாய்? எப்போது வந்தாய்?' என்று என்னிடம் விசாரிக்க ஆரம்பித்திருக்கிறார். வீட்டில் இருப்பவர்கள் என் மேல் கவனம் செலுத்துகிறார்கள் என்பது எனக்கு தனித்தெம்பை தருகிறது. தாங்க்ஸ் நைனிதா. உன்னால்தான் இது நடந்தது.''

''மகனை கவனிக்கவில்லை எனில் அவனும் தங்கள் கையை விட்டுப் போய் விடுவான் என்பதை அவர்கள்

இப்போதுதான் உணர்ந்திருக்க வேண்டும்'' என்றாள் நைனிதா.

விட்டு வாயிலில் அவளை அவன் இறக்கி விட்டதும் ''உள்ளே வா சரண்'' என்றாள் நைனிதா.

''நாளை கண்டிப்பாக வருகிறேன்'' என்று கையசைத்து விட்டு சென்றான் சரண்.

நைனிதா இரவு சமையலை முடித்து விட்டு மணியைப் பார்த்தாள்.

ரோஹித் இன்னும் வரவில்லை. யோசனையுடன் அவன் போனுக்கு டயல் செய்யும்போதே காலிங் பெல் சத்தமிட்டது. கதவைத் திறந்ததும் ரோஹித் சோர்ந்த முகத்துடன் உள்ளே வந்தான்.

''என் இவ்வளவு நேரம் ரோஹித்?''

''பஸ்ல ஒரே கூட்டம் நைனி. ஏறவே முடியல. ரொம்ப நேரம் வெயிட் பண்ணிட்டு கடைசியில் நேரமாச்சேன்னு ஒரு பஸ்ல ஏறி நின்னுட்டே வந்தேன். பீக் அவர்ஸ்ங்கிறதால ஆட்டோவும் இவ்வளவு தூரம் வரமாட்டேங்கிறான். இன்னிக்கு ஹாஸ்பெட்டல்ல ஒரே கூட்டம் வேறு?'' ''நாம லோன் போட்டு ஒரு கார் வாங்கிடலாமா ரோஹித்'' என்றாள் நைனிதா.

''நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனா கார் வாங்கினாக் கூட நாம ரெண்டு பேரும் ஒரே நேரத்தில் போய் திரும்ப முடியாதே! எனக்கு ஷிப்ட் மாறும். சோ வேற எதாவது ஏற்பாடு செய்யணும்.''

''பேசாம ரெண்டு பேருக்கும் ஆளுக்கொரு டூ வீலர் வாங்கிட்டா?''



''குட் ஐடியா'' என்றான் ரோஹித். ''அதுகூட அடுத்த மாதம் தான் முடியும். அதுவரை சமாளிக்கத்தான் வேண்டும்.''

ரோஹித்திற்கு பல்ஸரும், நைனிக்கு ஸ்கூட்டியும் வாங்குவதென முடிவு செய்து விட்டு இருவரும் தூங்கப் போனார்கள்.

மறுநாள் காலையில் வழக்கம் போல வேலைக்குக் கிளம்பும் அவசரத்தில் காலிங் பெல் அடித்தது.

''ரோஹித் யாருனு பாரேன்'' என்றாள் நைனிதா.

''நான் ஷேவிங்கில் இருக்கிறேன். நீ போய்ப் பார்.''

''அடுப்பில பால் பொங்கப் போகுது ரோஹித். விட்டால் பொங்கிடும். போயேன் ப்ளீஸ்.''

ரோஹித் எரிச்சலுடன் போய் கதவைத் திறந்தவன் சரணைப் பார்த்ததும் முகம் மலர்ந்தான்.

''ஸாரி நீங்க கிளம்பற அவசரத்தில் தொல்லை செய்ய வந்திருக்கிறேன்'' என்றான் சரண்.

''அதெல்லாம் இல்ல. உட்கார் சரண்'' என்று உள்ளே போனான் ரோஹித். பாலை இறக்கி விட்டு குக்கரை அடுப்பில் ஏற்றிய நைனிதாவிடம், ''நீ நிதானமா பால்ல காபி கலந்து குடிச்சிட்டு வா. அதுவரை சரண் ஹாலில் காத்திருக்கட்டும்'' என்றான்.

''சரணா?'' வியப்புடன் வெளியே வந்தாள் நைனிதா. ''என்னடா நேத்துதான் என்னை டிராப் பண்ணின. இப்ப சொல்லாம கொள்ளாம வந்து நிக்கற?''

''நான்தான் சொன்னேனே, நாளைக்கு வர்றேன்னு.''

சரண் சிரித்தபடி அட்டை பாக்கெட்டிலிருந்து ஒரு சாவியை எடுத்து நைனிதாவிடம் கொடுத்தான்.

"என்ன சாவி இது?"

"உன்னோட ஸ்கூட்டர் சாவி."

"எங்கிட்ட ஸ்கூட்டரே இல்லையே! உனக்கு தெரியாதா என்ன?"

"இப்ப உங்கிட்ட இருக்கு நைனிதா."

"என்னடா சொல்ற?" என்றாள் நைனிதா குழப்பத்துடன்.

"இங்கே வந்து பார் தெரியும்." நைனிதாவை பால்கனிக்கு அழைத்துச் சென்று காட்டினான் சரண். கீழே லேடீஸ் ஸ்கூட்டர் ஒன்று புத்தம் புதிதாய் நின்றிருந்தது.

"வாவ்... இது எது உனக்கு?"

"உனக்காகத்தான் நான் வாங்கினேன். நேத்து பஸ்ல ஏற முடியாம நீ தவிச்சதைப் பார்த்ததும் எனக்கு வருத்தமாக இருந்தது. காரே வாங்கித் தரணும்னு ஆசைதான். ஆனா என் ஸேவிங் இவ்வளவுதான் இருந்தது. கொஞ்சம் பொறுத்துக்கோ. நான் வேலைக்குப் போனதும் உனக்குக் கார் வாங்கித் தருகிறேன். இந்த ஸ்கூட்டர் பிடிச்சிருக்கா உனக்கு?"

"ரொம்ப..." என்ற நைனிதாவுக்கு உணர்ச்சி வசத்தில் பேச முடியாமல் தொண்டை அடைத்தது. சமாளித்துக் கொண்டவளாக, "உனக்கேதுடா ஸேவிங்ஸ்? அப்பா பாக்கெட் மணி எவ்வளவு கொடுத்தாலும் செலவழிச்சிட்டு பத்தலைன்னு அம்மாகிட்ட சண்டைக்கு நிப்பியே!"

"நீ நார்வே போனதிலிருந்து சேர்க்க ஆரம்பிச்சேன்."

மனம் நெகிழ்ந்து போனதை சமாளித்துக் கொண்டு "வெயிட் பண்ணு. சரண் சாப்பிட்டு விட்டுப் போகலாம்" என்றபடி சமையலை கவனிக்கப் போனாள். சமைத்து முடித்து அவர்கள் இருவரும் தயாராகி சரணுடன் அமர்ந்து சாப்பிட்டனர்.



கேசரியும், மெத்தென்ற இட்லியும், தக்காளி குருமாவுமாய் சாப்பிடுகையில் சரண் ரோஹித்திடம் சொன்னான். "நீங்க ரொம்ப லக்கி மாமா. நைனிதா எவ்வளவு நல்லா சமைக்க கத்துக்கிட்டா பாருங்க. இந்த மாதிரி நான் சாப்பிட்டதேயில்லை."

"நானும்தான் சாப்பிட்டதில்லை. சொல்லப்போனா உங்கக்காவுக்கு இதையெல்லாம் சமைக்கத் தெரியும்னே எனக்கு இப்பதான் தெரியும். எனக்கா இருந்தா காலைல நாய்க்கு வைக்கிற மாதிரி ரெண்டு ரொட்டியோ இல்ல நூடுல்சோ வெப்பா. ஏதோ உன் தயவால நானும் இன்னிக்கு நல்ல சாப்பாடு சாப்பிடறேன்."

சரணுக்கு சிரிப்பில் புரை ஏறியது.

ரோஹித்தை முறைத்தாள் நைனிதா. "சும்மா சொல்லாதே ரோஹித். நேத்துகூட நான் செஞ்ச பிரியாணியை எனக்குக் கூட மிச்சம் வெக்காம நீ சாப்பிடல?"

"ஓ... அது நீயா செஞ்ச? நான் ஹோட்டல்ல வாங்கினதுன்னு நினைச்சேன்."

"ஏன் நினைக்கமாட்ட? நல்லா நினைப்ப."

"சரண் நான் அப்பவே சொல்லலை? உங்கக்கா சூப்பரா சமைப்பான்னு" என ரோஹித் ப்ளேட்டை மாத்தவும். "பொய்யா சொல்ற?" என விளையாட்டாய் அவன் முதுகில் குத்தினாள் நைனிதா.

"சரண் பாத்தியா என் நிலைமையை. தினம் இப்படி அடி உதைதான். உங்கக்கா என்னை எப்படி கொடுமைப் படுத்தறா பார். சரண் இங்கே நீ பாத்ததை மட்டும் வெளியே சொல்லிடாதே. பொண்டாட்டி கையால அடி வாங்கறது தெரிஞ்சா என் இமேஜ் போயிடும்..." ரோஹித் புலம்பவும் சரண் சிரித்தபடியே கைகழுவ எழுந்தான்.

இருவரிடமும் விடை பெற்று சரண் போகையில் ரோஹித்திடம், "இந்த மாதிரி நான் சிரிச்சதே இல்லை. நைனிதா உங்களை ஏன் விரும்பினான்னு இப்பதான் எனக்கு தெரியுது. எப்பவும் நீங்க ரெண்டு பேரும் இதே மாதிரி சிரிச்சிட்டே இருக்கணும்" என்று அவன் கையைக் குலுக்கினான்.

வீட்டில் எதிலும் பட்டுக் கொள்ளாமல், பொறுப்பின்றி யாருக்கும் அடங்காமல் இருந்த சரணுக்கு திடீரென்று ஏற்பட்டு விட்ட மன முதிர்ச்சி நைனிதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ரோஹித் வீட்டைப் பூட்டிவிட்டு, வர அவனுக்கு முன் கீழே இறங்கி ஓடிய நைனிதா "ரோஹித், உனக்கு லிப்ட் வேணுமா? நான் உன்னை டிராப் பண்றேன்" என்றாள் பெருமையுடன். "டிராப் பண்றதெல்லாம் சரிதான். உன் தம்பி ஒரு முக்கியமான விஷயத்தை தெரிஞ்சுக்காமயே கிப்ட் கொடுத்திருக்கான். உனக்கு ஸ்கூட்டர் ஓட்டத் தெரியுமா முதலில்?"

"என்னையா கேட்ட? பைக் ரேசில் சேம்பியன் ஷிப் வாங்கினவ கிட்ட கேட்கிற கேள்வியா இது?"

"பைக்கில் ரேசில் நீ சேம்பியன் ஷிப் வாங்கினது பைக்குகளை துடைத்து க்ளீன் பண்ணத்தானே!"

"சே! யு ஆர் இன்சல்டிங் மீ."

இருவரும் சிரித்தபடி நின்றிருந்த போது ஒரு கார் வந்து அவர்கள் கேட்டின் அருகே நின்றது. அதிலிருந்து இறங்கிய ரோஹித்தின் வீட்டு டிரைவர் அவனுக்கு வணக்கம் சொன்னான்.

"நீங்க உபயோகிச்சிட்டிருந்த காரை உங்ககிட்ட கொடுத்துட்டு வரச் சொல்லி அண்ணன்கள் அனுப்பி வெச்சாங்க" என்றான்.



"அப்பாவுக்கு தெரியுமா?" என்றான் ரோஹித்.

"தெரியுங்க. அப்பா முன்னாடிதான் என்னைக் கூப்பிட்டுச் சொன்னாங்க" என்ற டிரைவர் கார் சாவியை ரோஹித்திடம் கொடுத்து விட்டு கிளம்பிப் போனான்.

தான் வீட்டினரின் பேச்சைக் கேட்காத போதும் அவர்கள் தன்னைப் பற்றி யோசித்திருக்கிறார்கள் என்பது ரோஹித்தின் மனதைத் தொட்டது. யோசனையுடன் நின்றிருந்தவனை உலுக்கினாள் நைனிதா.

"லேட்டாச்சு. கிளம்பலாம் ரோஹித்."

சமாளித்துக் கொண்ட ரோஹித் சிரித்தான். "உனக்கு லிப்ட் வேணுமா இப்போது?"

"நான் ரைட்ல போகணும். நீ லெப்ட்ல போகணும். யாரும் யாருக்கும் லிப்ட் தர முடியாது. நான் என் வண்டில போறேன் ரோஹித். நீ உன் கார்ல போ. மாலையில வந்ததும் ரெண்டு பேரும் சேர்ந்து எங்காவது போகலாம்."

"ஓ.கே. பை."

"பை."

"நைனி ரெடியா?" ரோஹித் மூன்றாவது முறையாக உள்ளே திரும்பி குரல் கொடுத்தான்.

"நல்லா டிரஸ் பண்ணிட்டு வாணும்னு சொல்லிட்டு இவ்வளவு அவசரப்பட்டா எப்படி ரோஹித்?" என்றபடியே வந்தாள் நைனிதா.

ரோஹித்தின் நண்பன் திருமண வரவேற்பிற்கு இருவரும் கிளம்பிக் கொண்டிருந்தனர். இருவரும் சேர்ந்து முதன் முதலாய் செல்லும் விசேஷம் என்பதால் இரண்டு நாளாய் ரோஹித் அவளை துளைத்துக் கொண்டிருந்தான்.

நாவல் பழ நிறப் புடவையும், தோளில் வழியும் பூவும், புடவை கலரிலேயே கழுத்தில் மெல்லிய பதக்கமுமாய்

வந்த நைனிதா "நல்லாயிருக்கா?" என்றாள் கண்ணாடியைப் பார்த்தபடி.

திரும்பிப் "போகலாம் ரோஹித்" என்றாள். அவன் அசையாமல் நிற்கவும்.

"கிளம்பு ரோஹித்" என்றாள்.

"கண்டிப்பாகப் போகணுமா?" என்றான் ரோஹித்.

"ஆளை நிக்க விடாம விரட்டி ரெடியாக வெச்சிட்டு இதென்ன கேள்வி ரோஹித்?"

"எனக்கென்னவோ உன்னைப் பார்த்தால் போகணும்னே தோணல" என்றபடி ரோஹித் அவள் கன்னங்களை வருடினான்.

"ஓ... நீ அங்க வர்றியா?" என்று சிரித்த நைனிதா, "உனக்குப் போகணும்னு தோணாட்டி நீ இங்கேயே இரு. நான் போய்விட்டு வந்து விடுகிறேன்" என கிளம்பினாள்.

"சே! என்தான் இந்தக் கல்யாணத்துக்குப் போகலாம்னு முடிவு செஞ்சோமோ தெரியல. பொண்டாட்டிய ஆசையா அலங்காரம் பண்ணிக் கூட இருந்து பார்க்க முடியாத புருஷன் உலகத்துலயே நானாதான் இருப்பேன்." ரோஹித் புலம்பியபடியே வர நைனிதா சிரித்தபடியே காரில் ஏறி அமர்ந்தாள்.

திருமண வீட்டில் ரோஹித்தின் நண்பன் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று மணப் பெண்ணிடம் அறிமுகப்படுத்தி வைத்தான்.

கைகுலுக்கி பரிசுப் பொருளை கொடுத்து விட்டுச் சாப்பிடச் சென்றார்கள்.

டைனிங் ஹாலிலிருந்து வந்த விருந்தின் மணமும், பன்னீர் சந்தனம் பூக்களின் வாசமும், கும்பல் கும்பலாய்



சிரித்த முகத்துடன் பேசிக் கொண்டிருப்பவர்களையும், நீண்ட நாளைக்குப் பிறகு திருமண வீட்டில் சந்தித்து அளவளாவுபவர்களையும் ரோஹித் ஒரு சுவாரஸ்யத்துடன் வேடிக்கைப் பார்த்தான். அன்றைய நிகழ்ச்சியில் பெண்ணும் மாப்பிள்ளையும்தான் கதாநாயகன், கதாநாயகி. அங்கு வந்திருக்கும் கூட்டமும், நடத்தப்படும் அறிமுகங்களும், சடங்குகளும் அவர்களை மையப்படுத்தியே நிகழ்வதை ரசித்தான். ராஜாவுக்கும், கார்த்திக்கும் திருமணமானபோது அவன் இதைப் பற்றி எல்லாம் யோசித்ததே இல்லை. இப்போது பார்க்கையில் அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ, வாழ்க்கையில் திருமணம் என்பதும் ரசனைக்குரிய விஷயம்தான் என்று தோன்றியது. மெல்லிசை கச்சேரி ஒருபுறம் நடந்து கொண்டிருந்தது. அதில் பாடுபடுபவர்கள் சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி திருமணம் சம்பந்தப்பட்ட பாடல்களாக பாடிக் கொண்டிருந்தார்கள்.

வாரணம் ஆயிரம் சூழ வலம் வந்து ஆண்டாள் கைத்தலம் பற்ற கனா கண்ட பாடலை ஒரு பெண் காதலுடன் பாடிக் கொண்டிருந்தாள். அமைதியாய் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த நைனிதாவிடம் "என்ன நைனி, நீயும் உற்றார் உறவினர் புடைசூழ திருமணம் செய்வது பற்றி கனாக்காண ஆரம்பித்து விட்டாயா?" என்றான் ரோஹித்.

"ஆண்டாள் கடவுளை காதலித்தாள். கடவுளை கரம் பற்ற இத்தனை முஸ்தீபுகள் தேவைப்பட்டன. நான் உன்னைத் நானே காதலித்தேன். உன்னுடன் இருப்பதிலேயே நிறைவடைகிறேன்" என்றாள் நைனிதா.

இத்தனை நாள் தாம்பத்தியத்தில் நைனிதாவின் பளிங்கு போன்ற மனதும், பாசாங்கே இல்லாத வெளிப்படையான அன்பும் எப்போதும் போல் இப்போதும் அவனை நெகிழ்த்தியது.

பேசிக் கொண்டிருக்கையிலேயே கல்லூரியில் அவனுடன் படித்த சிலர் உள்ளே நுழைவது தெரிந்ததும், "நைனிதா அவர்களுடன் பேசிவிட்டு வந்து விடுகிறேன். இன்னும் பத்தே நிமிடத்தில் கிளம்பி விடலாம். இரு வருகிறன்" என்று எழுந்து போனான்.

அவனை பார்த்ததும் அந்த நண்பர்கள் கூட்டத்தி லிருந்து ஒருவன் ரோஹித்தை பார்த்து கையசைக்கவும், "ஹாய் தருண். எப்படியிருக்கிறாய்?" என்றான் ரோஹித் அவன் கைகளை குலுக்கி.

அவர்கள் சுவாரஸ்யமாய் ஏதோ பேச ஆரம்பிக்க, நைனிதாவுக்கு பேச யாருமில்லாமல் போரடித்தது. அவ ளுக்கு அருகில் ஒரு பெண்கள் கூட்டம் அமர்ந்திருந்தது. அவளை திரும்பிப் பார்த்து தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். அவர்களுடன் பேசலாம் என்று நினைத்து மெதுவாய் சிரிக்கவும் பார்க்காதது போல் திரும்பிக் கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் நைனிதாவுக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. எழுந்து போய் சாப்பாட்டறை யில் கேட்டு வாங்கி நீரைக் குடித்து விட்டு வரும்போது பெண்கள் கும்பலிலிருந்த குரல்கள் உரத்துக் கேட்டன.

"இந்த பெண்ணைத்தான் நம்ம லட்சுமியோட கடைசி பையன் சேர்த்துக்கிட்டிருக்கானாம்."

"நிஜமாவா? பொண்ணு சினிமா ஸ்டார் மாதிரி இருக்கா."

"அழகில மயங்கிதான் பையன் குடும்பத்தை எல்லாம் மறந்து விட்டு இவ கூட போயிட்டான். இல்லாட்டி போவானா?"



"பாத்தா படிச்சவ மாதிரி இருக்காளே!"

"படிச்சவதான். வசதியான குடும்பம் வேறயாம். எல்லாம் இருந்தும் உடம்பு திமிர் பிடிச்சி பொண்ணுங்க அலையுதுங்க. எல்லாம் காலம் அப்படி."

நைனிதா அதிர்ந்து போய் அப்படியே நின்றிருந்தாள். தன்னைப் பற்றி மோசமான விமர்சனங்களை கேட்டுப் பழகியிராததால் முதலில் துடித்துப் போனாள். தூணுக்குப் பின்னே இருந்த சேரில் சரிந்து அமர்ந்து யோசித்தபோது இது போன்ற விமர்சனங்களை எதிர் கொள்ள முன்பே தயார் செய்து கொள்ளாதது நம் தவறுதான் என்று தோன்றியது. திருமணமான ஆணும் பெண்ணும் செய்யும் பல தவறுகளை இந்த சமூகம் கண்டு கொள்வதில்லை. கண வன் வேறு பெண் மீது மோகம் கொள்வதையும், குடித்து விட்டு வந்து மனைவியை இம்சிப்பதையும் பொறுத்துக் கொள்கிறது. "அவன் ஆம்பிள்ளை. இப்படி இப்படி இருந் தாலும் சகிச்சிக்கணும்" என வக்காலத்து வாங்குகிறது.

மனைவி கணவன் வீட்டவர்களை அரவணைத்து போகாததையும், புடவையும் நகையும் வாங்கித் தரும் இயந்திரமாக கணவனை கருதுவதையும் கூட கேவலமாக விமர்சிப்பதில்லை. அவ சுபாவம் அப்படி என்று முடித்து விடுகிறது. மனம் ஒப்பி உயிருக்குயிராய் வாழும் எங் களை விமர்சிக்கும் உரிமையை யார் உங்களுக்குத் தந்தது? என்று எல்லோரையும் பார்த்துக் கத்த வேண்டும் போலிருந்தது. நைனிதா சில நிமிடங்கள் கண்களை மூடி ஆசுவாசப் படுத்திக் கொண்டு திரும்பிப் பார்த்தபோது ரோஹித் நண்பர்களுடன் சிரித்துக் கொண்டிருந்தான். அமைதியாய் அவனுக்காக காத்திருந்தாள்.

# 14

ரோஹித்திற்கு வெகு நாட்களுக்குப் பிறகு சந்தித்த நண்பர்களுடன் பேசுவது மிகுந்த சந்தோஷமாய் இருந்தது. அவர்களில் பலர் கல்யாணம், குழந்தை என செட்டில் ஆகியிருந்தார்கள். கலாட்டா பேர்வழியான தருணிடம் "நீ எப்போ மாட்டப் போகிறாய்?" என்று விசாரித்துக் கொண்டிருந்தார்கள். "நான் நினைக்கிற மாதிரி எல்லாம் நடந்தால் இன்னிக்கே எனக்கு எங்கேஜ்மென்ட் நடந்தாலும் நடக்கும்" என்றான் தருண்.

"நீ ரீல் விடுவதை இன்னும் விடலையா?" என எல்லோரும் தருணை கிண்டல் செய்ய தருண் ரோஹித்தை தனியாய் அழைத்து வந்தான்.

"ரோஹித் நாங்க உள்ளே வரும்போது நீ ஒரு பெண்ணுடன் பேசியபடி இருந்தாயே! யார் அவள்? உனக்கு சொந்தமா?"

"எந்த பெண்?" ரோஹித் குழம்பினான்.

"இதோ எனக்கு நேராய் சற்று தூரத்தில் தனியாய் உட்கார்ந்திருக்கிறாள். உடனே திரும்பாதே. மெதுவாய் பார். டார்க் ப்ளு ஸாரி. உயரமாய்... இந்த கூட்டத்திலேயே தனியாய் ஒரு குயின் மாதிரி இருக்கிறாள். வந்ததிலிருந்து என்னால் பார்வையை திருப்பவே முடியவில்லை. அவளை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவளுக்கும் என்னைப் பிடித்திருந்தால் மேற்கொண்டு ஏற்பாடு செய்யலாம்."



தருண் காட்டிய திசையில் திரும்பிப் பார்த்த ரோஹித்துக்கு அங்கு அமர்ந்திருந்த நைனிதாவைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது.

"கண்டபடி உளராதே தருண். அவளுக்கு திருமணமாகவில்லை என்று தெரியுமா உனக்கு? அவள் கணவனுடன் கூட வந்திருக்கலாம். அவள் கணவன் யாரிடமாவது பேசப் போயிருக்கலாம்."

"எனக்கு நிச்சயமாய் தெரிகிறது ரோஹித். அவளுக்குத் திருமணம் ஆகவில்லை. அவள் காலில் மெட்டி இல்லை. கழுத்தில் கருகமணியோ, தாலி, கோர்த்த செயினோ கூட இல்லை. மணமான பெண்ணுக்குரிய எந்த அடையாளமும் இல்லை."

"இதெல்லாம் இல்லைன்னா அவளுக்கு கல்யாணமாகலைன்னு அர்த்தமா? நீ ஒரு டாக்டரா இருந்துட்டு இந்த மாதிரி பங்ஷனுக்கு வந்த இடத்தில் ஒரு பெண்ணைப் பார்த்துட்டு புலம்பறியே வெட்கமா இல்லையா உனக்கு?"

"இதில் வெட்கப்பட என்ன இருக்கு ரோஹித். லவ் அட் பர்ஸ்ட் சைட்ன்னு நீ கேள்விப்பட்டதில்லையா? எனக்காக அவளிடம் பேசு, ப்ளீஸ்."

ரோஹித்திற்கு அவனைப் பளாரென்று மாறி மாறி அறைய வேண்டும் போலிருந்தது. சூடாக அவன் பேச வாய் திறந்த போது மணமகனின் அப்பா வந்து "வாங்க சாப்பிடப் போகலாம்" என்றார்.

ரோஹித் தான் சாப்பிட்டு விட்டதாகச் சொன்னதும் "அப்ப நாங்க போய் சாப்பிட்டுவிட்டு வருகிறோம். நான் சொன்னதை மறந்துடாதே" என்றபடி தருண் நண்பர்களுடன் சாப்பிடப் போனான். அவர்கள் டைனிங்

ஹாலுக்குள் செல்லும் வரை காத்திருந்த ரோஹித் அவர்கள் தலை மறைந்ததும் நைனிதாவிடம் வந்து ''வா போகலாம்'' என்றான்.

நைனிதாவும் அவனும் கிளம்பி வரும்போது, காரில் கனத்த அமைதி நிலவியது. இருவருமே பேச முற்படாமல் அவரவர் சிந்தனைகளில் இருந்தார்கள். வீடு வந்து உடை மாற்றித் தூங்கப் போகும் வரை எல்லாம் அமைதியாகவே நடந்தது. படுத்த சிறிது நேரத்தில் தூங்கி விடும் ரோஹித் இரவெல்லாம் புரண்டு புரண்டு படுக்கவும்,

''என்ன ரோஹித் உடம்பு சரியில்லையா?'' என புறங்கையால் அவன் நெற்றியை தொட்டுப் பார்த்தாள் நைனிதா.

''எனக்கு உடம்புக்கு எதுவுமில்லையே!''

''பிறகேன் நீ தூங்கல.''

''நீ கூடத்தான் தூங்கல.''

''ஆமாம்'' என்றபடி எழுந்து அமர்ந்தாள் நைனிதா. ''இனிமே நாம இந்த மாதிரி விசேஷங்களுக்கு எல்லாம் போக வேண்டாம்னு தோணுது ரோஹித்.''

ஏன் என்றே கேட்காமல் உடனடியாய் ''சரி'' என்றான் ரோஹித்.

தருணின் பேச்சு அவன் மனதை புண்ணாக்கியிருந்தது. தன் மனைவியை மற்றொரு ஆடவன் ஆசையுடன் பார்த்ததையும், அதை தன்னிடமே விவரித்ததையும் அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. இதை விட அவமானம் ஒரு ஆணுக்கு இருக்க முடியாது என்று தோன்றியது. விஷயத்தைச் சொல்லி நைனிதாவை வருத்தப்படுத்தாமல் தனக்குள்ளேயே குமுறினான். நைனிதாவும் அதே முடிவில்தான் இருந்தாள். திருமண





வீட்டில் பேசிய பெண்களின் பேச்சை சொல்லி அவனை குழப்ப வேண்டாம் என்று முடிவு செய்திருந்ததால் அந்த இரவு இருவருக்கும் பேச்சின்றி, உறக்கமின்றி கழிந்தது.

நைனிதாவுக்கு அன்று கடைசி பீரியட் க்ளாஸ் எதுவும் இல்லை. பரீட்சை பேப்பர்களை திருத்தியபடி ஸ்டாப் ரூமில் அமர்ந்திருந்தபோது பியூன் வந்து பிரின்ஸ்பால் கூப்பிடுவதாகச் சொன்னான்.

பேப்பர்களை டிராயரில் வைத்து பூட்டிவிட்டு நைனிதா எழுந்து போனாள்.

அவளைப் பார்த்ததும் பிரின்ஸிபால் கல்யாணி முரளிதரன் உட்காரச் சொல்லி எதிரிலிருந்த சேரைக் காட்டினாள்.

''நடந்து முடிந்த தேர்வை மாணவர்கள் எப்படி செய்திருக்கிறார்கள்?'' என்று விசாரித்தாள்.

''வகுப்பறையில் எந்த மாணவனாவது தொல்லை கொடுக்கிறானா? அவமரியாதையாக நடந்து கொள்கிறார்களா?'' என்று கேட்டாள்.

''அப்படி யாரும் இல்லை'' என்று நைனிதா சொன்னதும், ''நீங்கள் சொல்வது ஆச்சரியமாய் இருக்கிறது நைனிதா. உங்கள் வகுப்பில் இரண்டாம் வருடம் படிக்கும் கமலேஷ் டீச்சர்களை கிண்டல் செய்வதாகவும் மரியாதையின்றி நடந்து கொள்வதாகவும் உங்கள் சக டீச்சர்கள் சொல்கிறார்கள்'' என்றாள் கல்யாணி முரளிதரன்.

''அவன் கொஞ்சம் முரட்டு சுபாவம் உடையவன்தான் மேடம். ஆனால் அவனது முரட்டுத்தனத்துக்கு காரணம் மற்றவர்கள் தன்னை கவனிக்க வேண்டும் என்பதுதான். அவனை அடிக்கடி பாராட்டி தட்டிக் கொடுத்தால் போதும். தன்னை கவனிக்கிறார்கள் என்ற திருப்தியில் அவன் முரட்டுத் தனத்தை கைவிட்டு சராசரி மாணவனாகி விடுவான்.''

"யூ ஆர் பிரில்லியண்ட். மாணவர்களுக்கு உங்கள் மேல் இருக்கும் பிரியத்துக்கு காரணம் இல்லாமல் இல்லை."

"தேங்க் யூ" என்றாள் நைனிதா புன்னகையுடன்.

சிறிது நேரம் டேபிள் வெயிட்டை உருட்டியபடி யோசித்த பிரின்ஸிபால் சட்டென பேசத் தொடங்கினாள். "நைனிதா இந்த கல்லூரியில் நீங்கள் மாணவியாக இருந்த போதிருந்தே நான் முதல்வராக இருக்கிறேன். உங்கள் புத்திசாலித்தனத்தையும் அமரிக்கையான குணத்தையும் பார்த்து உங்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தேன். படிப்பை முடித்த பிறகு இந்த கல்லூரிக்கே ஆசிரியையாய் வரவேண்டும் என்று வற்புறுத்தினேன்."

"உண்மைதான் மேடம். நான் பெருமைப்படும் விஷயம் அது" என்றாள் நைனிதா.

"ஆனால் இப்போது நான் கேள்விப்படுகின்ற, பார்க்கின்ற சில விஷயங்கள் கொஞ்சமும் பெருமைப்படும் படியாய் இல்லை நைனிதா. உன் மாணவர்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாய் வாழ வேண்டிய நீ கொண்ட தவறான உறவால் இத்தனை நாள் சேமித்த புகழையும், பெருமையையும் குலைத்துக் கொண்டாய். இத்தனை அழகும், படிப்பும், பணமும் கொண்ட நீ எதற்காக இப்படி ஒரு மோசமான உறவில் ஈடுபட்டாய்?"

"மேடம் ப்ளீஸ் ஸ்டாப் இட். நான் எந்தத் தவறான உறவிலும் ஈடுபடவில்லை. ரோஹித் என் கணவன். நாங்கள் கணவன் மனைவியாகத்தான் வாழ்கிறோம். ஒருவரை ஒருவர் உயிராய் நேசிக்கிறோம். ரோஹித் படித்தவன். நல்ல குடும்பப் பாரம்பரியம் கொண்டவன். ஆப்டர் ஆல் ஒரு கயிறு என் கழுத்தில் இல்லை



என்பதற்காக எங்கள் உறவை கொச்சைப்படுத்த முடியாது" நைனிதா கோபத்துடன் எழுந்து வெளியேறினாள்.

ஸ்டாப் ரூமுக்கு வந்து வண்டி சாவியையும், எடுத்துக் கொண்டு கிளம்பியபோது கல்லூரி அலுவலகத்தில் பணி புரியும் நடுத்தர வயது பெண் அவள் எதிரே நின்றிருந்தாள்.

"யெஸ் ஏதாவது வேண்டுமா உங்களுக்கு?" என்றாள் நைனிதா.

"எனக்கு எதுவும் வேண்டாம்மா. உங்ககிட்டதான் பேச வந்தேன்."

"என்ன பேசணும்?"

"நம்ம பிரின்சிபால் மேடம் உங்ககிட்ட பேசிட்டு இருந்தப்ப, நான் ஒரு பைல் எடுப்பதற்காக அந்த ரூமுக்கு வந்தேன். ஏதேச்சையா அவங்க பேசினது என் காதில் விழுந்தது. அந்தம்மாவுக்கு ரிட்டையர்டு ஆகிற வயசாச்சு. கிழம் அப்படித்தான் பேசும். அதையெல்லாம் நாம கண்டுக்கக் கூடாது. மனுஷன் வாழறது ஒருமுறைதான். அதை சந்தோஷமா அனுபவிச்சி வாழணும். எனக்கு திருமணமானதும் என் கணவன் என்னை அடக்கியாளப் பாத்தான். போடான்னு சொல்லிட்டு வந்துட்டேன். அழகான பெண்களைப் பாதுகாக்கவும், பணம் செலவழிக்கவும் எத்தனையோ ஆண்கள் காத்திருக்கிறார்கள். இப்போ என் பெயரைச் சொன்னாலே உருகும் ஆண்கள், பெரிய வரிசையே உண்டு. பணத்துக்குப் பணம். சுகத்துக்கு சுகம்" அந்த பெண்மணியின் விளக்கத்தில் நைனிதாவுக்கு மூச்சு முட்டியது.

மேலும் அவள் ஏதோ சொல்ல முற்படுகையில் 'ஷட்டப்' என சீறினாள் நைனிதா. "இதுக்கு மேல் ஒரு வார்த்தை பேசின, நான் பொல்லாதவள் ஆயிடுவேன். ஜாக்கிரதை."

அவன் பயந்து பின் வாங்க நைனிதா புயலாய் அங்கிருந்து வெளியேறினாள். இந்த மாதிரி ஒரு நடத்தைக் கெட்ட பெண் என்னுடன் சரி சமமாய் எப்படிப் பேசும்படி ஆயிற்று என்று ஆத்திரம் வந்தது. என் முகத்தில் சேற்றை வாரி இறைக்கும் அளவிற்கு துணிச்சல் எங்கிருந்து வந்தது? நம் நாட்டில் மட்டும் ஏன் எல்லோரும் இப்படி நடந்து கொள்கிறார்கள்? நைனிதாவுக்கு இருந்த கோபத்திலும் டென்ஷனிலும் எதிலும் அடிபடாமல் வீடு வந்து சேர்ந்ததே பெரிய விஷயமாய் பட்டது.

சூடான நீரில் குளித்துவிட்டு, சிம்பிளாய் ஒரு சமையலை முடித்து ஹாட் பேக்கில் வைத்துவிட்டு டெஸ்ட் பேப்பரை திருத்த உட்கார்ந்தபோது மனம் அதில் செல்லாமல் முரண்டியது. எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு போய் படுத்தபோது தலை விண்ணென்று தெறித்தது. படுக்க முடியாமல் எழுந்து அமர்ந்தவள் ரோஹித்தின் ஷெல்ப்பைத் தேடி ஒரு மாத்திரையை விழுங்கி விட்டு படுத்தாள்.

காலையில் எழுந்து அவள் கல்லூரிக்கு கிளம்பும்போது ரோஹித் தூங்கிக் கொண்டிருந்தான். இரவு தாமதமாக வந்திருப்பான் பாவம் என்று நினைத்தபடி ''ரோஹித் எழுந்திருக்கலையா?'' என அவனை எழுப்பினாள் நைனிதா.

''இன்னிக்கு ஹாஸ்பெட்டலுக்கு ஈவினிங் போனா போதும்'' என்றபடி கண்களைத் திறந்தான் ரோஹித்.

கறுப்பு நிற புடவையில் கோதுமை நிறம் இன்னும் எடுப்பாய் தெரிய, ''அப்போ கதவை சாத்திக்கோ ரோஹித்'' என்று பளீரென்று சிரித்தபடி கிளம்பினவளை அழைத்தான் ரோஹித்.



''நைனி.''

''என்ன ரோஹித்?'' கதவு வரை சென்ற நைனிதா திரும்பி வந்தாள்.

''வேறு புடவை கட்டிட்டுப் போ நைனி.''

''ஏன்? இது நீ செலக்ட் பண்ணின புடவையாச்சே. உனக்கு ரொம்ப பிடிச்சி எடுத்ததாச்சே?''

'எனக்கு மட்டும் பிடிச்சா பரவாயில்லை, எல்லோருக்கும் பிடிக்குதே.' வாய்க்குள் முணுமுணுத்தான் ரோஹித்.

''என்ன சொல்ற? தெளிவா சொல்லு. எனக்கு டைம் ஆச்சு.'' என்றாள் நைனிதா பொறுமையிழந்து.

''காலேஜுக்கு இந்த மாதிரி கலர்ஸ் வேண்டாம். ரொம்ப அட்ராக்டிவ்வா தெரியுது. ஏதாவது லைட் கலர்ஸ் கட்டிட்டுப் போ.''

பதில் பேசாமல் உள்ளே சென்று சந்தன நிற புடவையில் திரும்பி வந்தவளிடம் ''இந்த புடவையாலும் உன் பர்சனலிட்டியை குறைக்க முடியல'' என்றான்.

''எதுக்குக் குறைக்கணும்? ஏன் இப்படி ஸ்டுப்பிட்டா பேசற? முக்கால் கால் பேண்டும், பாவாடையும் அணிந்த போது கூட நீ இந்த டிரஸ்ல அழகா இருக்கேன்னு சொல்லி ரசிச்சுகிட்டுதான இருந்த. இப்ப கெட்டியான காட்டன் புடவைக்கு ஏன் இப்படி யோசிக்கிறாய்?''

தருணைப் போல இன்னொருவன் பேசினால் என்னால் மறுபடியும் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது என்று தோன்றியது ரோஹித்திற்கு.

மெதுவான குரலில் அவளிடம் சொன்னான், ''நீ படிக்கப் போகும் ஸ்டூடண்டாகவோ, என் மனைவியாகவோ இருக்கும்போது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஆனால் ஒரு கல்லூரி ஆசானாய் என்பதால் பலதையும் யோசிக்க வேண்டும்.''

''ரொம்ப யோசிக்காதே ரோஹித். அது மனசுக்கு நல்லதில்லை'' என்று சிரித்தபடி நைனிதா கிளம்பிப் போனாள்.

நாட்கள் யாருக்கும் காத்திருக்காமல் விரைந்தன. அவர்கள் வாழ்க்கை ஒரே மாதிரி போய்க் கொண்டிருந்தது. சரண் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தான். ரோஹித் வீட்டினர் வெளியிடங்களில் சந்திக்கும்போது அவனிடம் சகஜமாகப் பேசினர். ''எப்படியிருக்கிறாய்?'' என்று அவனை நலம் விசாரிப்பதுடன் நிறுத்திக் கொண்டார்கள். நைனிதாவைப் பற்றி யாரும் ஒரு வார்த்தை விசாரிக்கவோ, திட்டவோ கூட இல்லை.

நைனிதாவிற்கும் அவனுக்கும் இடையே வேர் விட்டுப் போன அன்பில் சிறிதும் மாற்றமில்லை என்றாலும் ரோஹித் வீட்டில் ஏதோ ஒரு குறையை உணரத் தொடங்கினான். உறவினர், நண்பர்கள் வீட்டு நிகழ்ச்சிகளுக்குச் சென்று மற்றவர் முன் காட்சிப் பொருளாவதை தவிர்க்க அவர்கள் எங்கும் செல்வதில்லை. அதனால் அவர்கள் வீட்டிற்கும் யாரும் வருவதில்லை. தாங்கள் ஒரு தனித் தீவாய் நிற்பது போலிருந்தது அவனுக்கு.

அன்று மருத்துவமனையின் டாக்டர்கள் ஓய்வறையில் உ அருந்தியபடி எல்லோரும் பேசிக் கொண்டிருக்கையில் சக டாக்டர் ஒருவன் உரிமையுடன் ரோஹித்திடம் சொன்னான்.

''ரோஹித் ஏதோ ஒரு பெண்ணை பார்த்தோம். பழகினோம். அவனுடன் சந்தோஷமாக இருந்தோம் என்பதெல்லாம் சரிதான். இன்னும் எவ்வளவு நாள் இப்படியே இருக்க முடியும்? உனக்கு சின்ன வயசுதானே! ஒரு பெண்ணைப் பார்த்து மணந்து குடும்பம் குழந்தைன்னு எல்லோரையும் போல் இருக்கப் பார்.''

ரோஹித் ஆத்திரத்துடன் சொன்னவனின் சட்டையைப் பிடித்தான்.

''அவள் என் மனைவிடா முட்டாள்'' என்றான் கோபத்துடன்.

''உன் நல்லதுக்குத்தான் சொன்னேன். சம்பாதிப்பதை எல்லாம் இழந்துவிட்டு, நாளை வாழ்க்கையும் தொலைத்துவிட்டு தெருவில் நிற்கக் கூடாதே என்று சொன்னேன். கேட்பதும் கேட்காததும் உன் விருப்பம்.''

''நீ யார்டா என்னைப் பத்திப் பேச? ராஸ்கல்'' என ரோஹித் அவன் மீது பாய முற்பட சுற்றிலுமிருந்தவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தினார்கள்.

''மற்றவர் பர்சனல் விஷயங்களில் தலையிடாதே'' அவனிடமும் 'அவன் உன் நன்மைக்குத்தானே சொல்றான்' என ரோஹித்திடமும் சொல்லிப் பிரித்து வைத்தனர். வார்டிலிருந்த நோயாளிகளும் பணிபுரிபவர்களும் சத்தம் கேட்டு எட்டிப் பார்க்க ரோஹித் மிகவும் அவமானமாக உணர்ந்தான். அங்கே இருக்க பிடிக்காமல் வெளியே வந்தவன் கார் பார்க்கிங் போய் தன் காரை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு வெளியே வந்தான். வீட்டிற்குச் செல்ல பிடிக்காமல் எங்கே செல்வதென்று தெரியாமல் இலக்கின்றி கைகள் ஸ்டியரிங்கை திருப்பின.

ஊரறிய திருமணம் செய்யவில்லை என்பதற்காக எங்கள் வாழ்க்கையை அசிங்கப்படுத்த இவர்கள் யார்? சென்ற வாரத்தில் ஒரு நாள் அவனது சக டாக்டர் மும்பை

போய் விட்டு திரும்பி வரும்போது ஒரு பெண்ணுடன் வந்தான். ஒரு பெண்ணை முன்பே தான் காதலித்து வந்ததாகவும் தன் பெற்றோர் எதிர்ப்பினால் இத்தனை நாள் திருமணம் நடக்காமல் இருந்தது என்றும் இப்போது அவனது பெற்றோர் அவனை ஏற்றுக் கொண்டு மும்பையிலேயே திருமணம் நடந்தது என்றும் சொன்னான். எல்லோரும் அதை நம்பினார்கள்.

யாரும் எதிர்த்து கேள்வி கேட்கவில்லை. எங்களை ஏன் திருமணத்திற்கு அழைக்கவில்லை? உங்கள் திருமணம் எங்கே நடந்தது? சாட்சிகள் யார்? என்று யாரும் எதுவும் கேட்கவில்லை. அந்த பெண்ணின் வகிட்டில் தீட்டியிருந்த குங்குமமும், கழுத்தில் மின்னிய தாலியும் எல்லோர் வாயையும் கட்டிப்போட்டது. இவன் அந்த பெண்ணை அழைத்துவரும் முன் இங்கு பல பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்ததைக் கூட யாரும் பொருட்படுத்தவில்லை. திருமணமாகி விட்டது என்ற ஒரே காரணத்திற்காக ஒருவனின் அயோக்கியத்தனங்களைக் கூட ஏற்றுக் கொள்ளும் இந்த சமூகம் எவ்வளவு கேவலமானது? இதே சமூகம்தான் ஒழுக்க நெறியுடன் வாழும் எங்கள் இருவரையும் பரிகசிக்கிறது. கேள்வி கேட்கிறது. இந்த கேள்விகளால் எங்கள் இருவருக்கும் இடையே கண்ணுக்கு தெரியாத திரை விழத் தொடங்கியிருக்கிறது. வீட்டில் முன்பு போல கலகலப்பும் சிரிப்பும் நின்றுபோய்விட்டது. ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்த முயலாமல் இருவரும் அவரவர் சிந்தனைகளில் ஆழ்ந்து போகத் தொடங்கியிருந்தனர். எவ்வளவோ உற்சாகத்துடன் ஆரம்பித்த தங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒரு அபஸ்வரம் தட்டத் தொடங்கியிருக்கிறது. விரைவில் இதை சரி



செய்து கொள்ள வேண்டும். இல்லை எனில் தங்களுக்குள் நிலவும் சின்ன அமைதி பெரிய இடைவெளியை ஏற்படுத்திவிடும். என்ன செய்யலாம்? என குழம்பிய ரோஹித் காரை ஒதுக்குப்புறமாக ஒரு மரத்தடியில் நிறுத்தினான்.

திருமணம் என்ற வார்த்தையே வெறுத்து, இறுகிப் போய் கிடந்த நைனிதாவை முதன்முதலில் பார்த்ததும் அவன்தான் காதல் வசப்பட்டான். படிக்கச் சென்றவளை துரத்திக் கொண்டு வெளிநாட்டுக்கே ஓடி, அவள் மனதை வசப்படுத்தி ஆயுள் முழுதும் சந்தோஷமாய் வாழலாம் என்ற முடிவுடன் இந்தியா திரும்பினார்கள். இங்கே வந்த பிறகு குடும்ப உறவிலும், பொருளாதார பிரச்சனைகளிலும் சிக்கித் தவிக்கும் சராசரி இந்தியனின் வாழ்க்கைப் போல் இவர்களது வாழ்க்கையும் சம்பிரதாய பிரச்சனைகளில் மாட்டிக் கொண்டிருக்கிறது. நைனிதாவை எந்த விதத்திலும் யாராலும் காயப்பட்டு விடாமல் இதிலிருந்து விடுவிக்க வேண்டும்.

நேற்று கல்லூரியிலிருந்து திரும்பி வந்த நைனிதா அவன் நினைவுக்கு வந்தாள். கசங்கிய புடவையும், கலைந்து பறந்த கூந்தலுமாய் அவளைப் பார்த்த அவன் திகைத்துப் போய் ''நைனி உனக்கு என்னாச்சு?'' என்றான்.

''நான் நன்றாகத்தானே இருக்கிறேன்.''

''இல்லையே. நன்றாக இருந்திருந்தால் இப்படியே வெளியில் சென்றிருப்பாயா? என்னாச்சுன்னு சொல்?''

மெல்லிய கோபத்துடன் அவனைப் பார்த்தாள் நைனிதா. ''எப்படி இருக்கணும்னு சொல்லு ரோஹித். நான்

சாதாரணமா ஒரு காட்டன் ஸாரி கட்டினா கூட உனக்கு பிடிக்காதப்போ நான் என்ன செய்ய முடியும் சொல்?''

ரோஹித்துக்கு அவனது மனமே சுட்டது. யார் மீதோ உள்ள கோபத்தை இவளிடம் கொட்டியது தவறுதான். ஆசைப்பட்டு சொந்தமாக்கிக் கொண்ட அழகிய ஓவியத்தை நானே சீர்குலைப்பதா என்று உறுத்தலுடன் ''ஸாரி நைனி'' என அவள் கைகளைப் பற்றினான்.

''நான் அப்போது மருத்துவமனை வேலை விஷயமாய் ஒரு குழப்பத்தில் இருந்தேன். அந்த கோபத்தை உன் மீது காட்டியிருக்கிறேன். நான் வேறு யார் மீது கோபப்பட முடியும் சொல்?'' என கெஞ்சலும் கொஞ்சலுமாய் அவளை சரிகட்டுவதற்குள் அவன் திணறித்தான் போனான்.

நார்வேயில் வசித்த சந்தோஷமான தருணங்கள் இப்போது நினைவு வர ''அங்கேயே போய் விட்டால் என்ன?'' என்று தோன்றியது. போய்விடலாம். கேசவன் அங்கிளும் ஆன்ட்டியும் சொந்த பிள்ளைகளைப் போல் பாவிப்பார்கள். சம வயதினராய் கௌசிக்கும் அவன் மனைவியும் இருக்கிறார்கள். நிறைய இந்திய தமிழ் பாகிஸ்தானிய குடும்பங்கள் எதையும் துருவாமல், விமர்சிக்காமல் அன்பு செலுத்துவார்கள். நாமும் நிம்மதியாய் சந்தோஷமாய் இருக்கலாம். ரோஹித் தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தான். விரைவில் நார்வே கிளம்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நினைத்தவனுக்கு மனம் அமைதியடைந்தது. ஒரு பிரச்சனைக்கு தீர்வு கண்டு விட்ட நிம்மதியால் வீட்டிற்கு போக எண்ணினான். காரை ரிவர்ஸ் எடுத்து திருப்பினான் ரோஹித். பக்கவாட்டில் வந்து கொண்டிருந்த பெரிய லாரியை கவனிக்காமல் பின்புறம் பார்த்தபடி ரிவர்ஸ் எடுத்து திரும்பும்போது, அவன் திரும்பி விடுவான் என்ற நிச்சயத்தில் வேகத்தை குறைக்காமல் வந்த லாரி சடாரென காரின் பின்புற கதவின் மீது மோதியது. மோதிய வேகத்தில் டிரைவர் சீட்டின் கதவு திறந்துகொள்ள ரோஹித் அதன் வழியாய் தூக்கி எறியப்பட்டு சாலையில் விழுந்தான். விழுந்த வேகத்தில் அருகேயிருந்த மைல் கல்லில் தலையின் பின்புறம் மோத உடனே மயக்கமானான்.



நைனிதா வேகமாய் அந்த மருத்துமனையினுள் ஓடினாள். ரிஷப்சனில் நின்றிருந்த பெண்ணிடம் ''ரோஹித் எங்கே?' என்றாள் பதட்டத்துடன். அவள் கம்ப்யூட்டர் திரையில் நோயாளியின் விபரங்களை தேடவும், அதற்குள் பொறுமையிழந்த நைனிதா ''சீக்கிரம் சொல்'' என்று உலுக்கியதில் அவள் கையிலிருந்த மௌஸ் நழுவியது. அருகே நின்றிருந்த ஒரு நர்ஸ் ''இப்ப வந்த ஆக்ஸிடண்ட் கேஸ்தானே! எமர்ஜென்சி வார்டில் அட்மிட் செய்திருப்பார்கள். இந்த வராண்டாவில் வலதுபுறம் திரும்பி நேராய் போங்கள்'' என்றாள்.

நைனிதா எமர்ஜென்ஸி ஐ.சி.யுவிற்கு போய்சேர்ந்த போது ரோஹித்தின் குடும்பம் மொத்தமும் அறைவாசலில் நின்றிருந்தது. ரோஹித் எங்கே இருக்கிறான் என்று அவர்களிடம் அவள் கேட்க வாயெடுத்த போது, ஐ.சி.யுவிலிருந்து ஒரு டாக்டர்கள் கூட்டம் வெளியே வந்தது. வேகமாக தங்களுக்குள் பேசியபடி நடந்துபோன டாக்டர்களின் பின்னால் ஓடி ராஜாவும், கார்த்திக்கும் ''ரோஹித்திற்கு எப்படியிருக்கிறது டாக்டர்?'' என்றார்கள் பதட்டத்துடன்.

"இன்னும் இருபத்திநான்கு மணி நேரம் போகணும். இன்னும் மயக்கம் தெளியவேயில்லை. ஸ்கேன் ரிப்போர்ட் பார்த்த பிறகுதான் சொல்ல முடியும்" என்றார்கள் போகிற போக்கில்.

நைனிதா நடுங்கிய கைகளால் சேரை பிடித்தவள், நிற்க முடியாமல் கால்களும் துவண்டுபோக மெதுவாக அதில் அமர்ந்தாள். அவள் கல்லூரியில் இருந்தபோது போன் வந்தது. செங்கல்பட்டு அருகே ரோஹித்தின் கார் அடிபட்டு கிடப்பதாகவும், அவன் மயக்கமாய் இருக்கிறான் என்றும், செல்போனில் அவன் கடைசியாய் பேசிய போன் நெம்பரைப் பார்த்து அவளை கூப்பிடுவதாகவும் போலீஸார் சொன்னார்கள். நைனிதா பதட்டத்துடன் அவர்கள் கேட்ட விபரங்களை தெரிவித்து, ரோஹித்தின் பெற்றோர் முகவரியையும் சொன்னாள். அவன் அனுமதிக்கப்பட்டிருக்கும் மருத்துவமனையின் பெயரைக் கேட்டுக்கொண்டு உடனே விரைந்தாள். காலையில் மருத்துவமனை போவதற்காக கிளம்பிய ரோஹித் எதற்காக செங்கல்பட்டு போயிருப்பான் என்று அவளுக்கு குழப்பமாகவே இருந்தது. ரோஹித்தை ஒருமுறையாவது பார்த்துவிட வேண்டும் போலிருந்தது. ஆனால் 'கண்டிப்பாய்' யாரையும் பார்க்க அனுமதிக்க முடியாது என்றார்கள் டாக்டர்கள்.

ரோஹித்தின் பெற்றோரும், அண்ணிகளும் சோகத்துடன் ஒரு பக்கம் அமர்ந்திருக்க ராஜாவும் கார்த்திக்கும் போன் பேசுவதும், பணம் கட்டப் போவதும், டாக்டர்களை விசாரிப்பதுமாய் பரபரப்பாக இருந்தார்கள்.



நைனிதா அங்கிருப்பதை யாருமே பொருட்படுத்தவில்லை.

மருத்துவமனை ரிஜிஸ்டரில் புதிய நோயாளி பற்றிய விபரங்களை பாலசுந்தரத்திடம் மருத்துவமனை நிர்வாகம் கேட்டபோது, ரோஹித் ஒரு டாக்டர் என்பதையும், அவன் வேலை பார்க்கும் மருத்துவமனை மற்றும் தன் வீட்டு முகவரியை சொல்லிவிட்டு கையெழுத்திட்டார் அவர். அவன் மனைவி என்று தன் பெயரை அவர் குறிப்பிடவில்லை என்பதை நைனிதா திகைப்புடன் கவனித்தாள்.

தகவல் கேள்விப்பட்டதும் ஓடிவந்த சரண், என்ன பேசுவதென்று தெரியாமல் திகைப்புடன் நைனிதாவின் அருகிலேயே இருந்தான். ஒருநாள் மிக மெதுவாய் நகர்ந்து செல்ல, அடுத்த நாள் வந்த சீப் டாக்டர் பாலசுந்தரத்திடம் சொன்னார். "ஸ்கேன் ரிப்போர்ட் வந்துவிட்டது. உடலில் எந்த காயமோ, எலும்பு முறிவோ எதுவும் இல்லை. காரிலிருந்து விழுந்த வேகத்தில் பின்னந்தலையில் சிறுமூளையில் பாதிக்கப்பட்டு கோமா ஸ்டேஜில் இருக்கிறார். பொதுவாக கோமா நிலைக்கு செல்பவர்கள் இத்தனை நாளில் குணமடைவார்கள் என்று உறுதியாக எதுவும் சொல்ல முடியாது. நாளைக்கே குணமாகலாம். நான்கு வருடங்களும் ஆகலாம். அல்லது கடைசிவரை இப்படியே இருந்தாலும் இருக்கலாம்" சொல்லவேண்டியதை சொல்லி முடித்துவிட்டு அவர் போனதும் லட்சுமி நெஞ்சில அறைந்து கொண்டு அழுதாள்.

"ரோஹித், உன் தலையெழுத்து இப்படியா ஆகணும்? இப்படி வந்து விழுந்து கிடக்கவா எங்களை எல்லாம் விட்டுட்டு போன? என்னிக்காவது ஒருநாள் எல்லாம் சரியாயிடும். நாமெல்லாம் சந்தோஷமா இருக்கலாம்னு நினைச்சிருந்தேனே!" என கதறவும், சபிதாவும், சுகுணாவும் மாமியாரை அணைத்துக் கொண்டு விசும்பி அழுதனர். ஆண்கள் முகத்தைப் பொத்தியபடி மௌனமாய் கண்ணீர் வடித்தனர்.

நைனிதா அதிர்ச்சியில் சிலையாய் உறைந்திருந்தாள். கேட்ட விஷயத்தை நம்பமாட்டேன் என மனம் முரண்டியது.

முதல்நாள் 'ஏன் இப்படி நலுங்கிய உடையில் இருக்கிறாய்? பளிச்சின்னு அழகா என் தேவதை மாதிரி வாணும்' என புதிய உடையை அவளை அணியச் சொல்லி அழகு பார்த்தவன், காலையில் சிரித்தபடியே வழக்கம் போல் முத்தமிட்டு கிளம்பியவனுக்கு இப்போது அந்த நினைவே இல்லை. அவனுக்கு யாரையும் அடையாளம் தெரியாது. யாருடனும் பேச முடியாது. பார்க்க முடியாது என்பது அவளுக்கு நம்பவே முடியாததாய் இருந்தது.

சிறுவயதிலிருந்து அவள் அனுபவித்து வந்த தனிமையிலிருந்து விடுவித்து மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை என்றால் என்ன என்பதை ரோஹித்துதான் காட்டினான். வேலைகளையும், எண்ணங்களையும், அனுபவங்களையும், திட்டங்களையும் பகிர்ந்து கொள்ளும் தோழனாய் இருந்தான். எல்லாமே அவன்தான் என்று கரைந்து போய் நான் என்பதே மறந்துபோய் நிற்கையில் ஏன் இப்படி விழுந்து கிடக்கிறான்?



"நைனிதா கவலைப்படாதே. மாமாவுக்கு சரியாகிவிடும். கடவுள் நம்மை கைவிடமாட்டார்." சரண் அவளிடம் திரும்ப திரும்ப சொன்னதெல்லாம் மனதில் பதியவேயில்லை.

மாலையில் ரோஹித்தை ஒவ்வொருவராய் போய் பார்த்துவிட்டு வர டாக்டர் அனுமதித்திருந்தார். ரோஹித் குடும்பத்தினர் ஒவ்வொருவராய் போய் வந்ததும் உள்ளே நுழைய முற்பட்ட நைனிதாவை ட்யூட்டி நர்ஸ் தடுத்தார்.

"நீங்க யாரைப் பார்க்கணும்?"

"ரோஹித்."

"நீங்க அவருக்கு என்னவாகணும்?"

"மனைவி."

நர்ஸ் சந்தேகத்துடன் அவளை மேலும் கீழுமாய் பார்த்தாள். "உங்களை பார்த்தால் அப்படி தெரியலையே!"

"நம்புங்கள். நான் நிஜமாகவே அவரது மனைவிதான்" என்றாள் நைனிதா இதழ்கள் துடிக்க.

ரோஹித்தின் அட்மிஷன் விபரங்களை புரட்டிப் பார்த்த அந்த நர்ஸ், நோயாளி மணமானவரா என்று எதுவும் எழுதப்படவில்லை. உங்களைப் பார்த்தாலும் தெரியவில்லை. நீங்கள் சொல்வதை நான் எப்படி நம்புவது? என்றாள்.

"அவர் அப்பா என் பெயரை சேர்க்காமல் விட்டிருக்கலாம். நான் ஒரு கல்லூரி பேராசிரியை. நான் சொல்வதை நீங்கள் நம்பத்தான் வேண்டும். நான்தான் ரோஹித்தின் மனைவி."

வயதில் மூத்த அந்த தலைமை நர்ஸுக்கு நைனிதாவின் முகத்தைப் பார்க்க பாவமாக இருந்தது.

"உன்னை நோயாளியைப் பார்க்க அனுமதிக்கிறேன். ஆனால் நீ சொல்கிற மாதிரி உண்மையாலுமே நீ அவர் மனைவி என்றால் பேஷண்ட் திருமணமானவர் என்ற தகவலை எங்களுக்கு தரணும். ஒருவேளை நீங்கள் காதல் திருமணம் செய்து கொண்டதால் உன் கணவர் குடும்பத்தினர் அதுபற்றிய தகவலை தராமல் விட்டிருக்கலாம். ஆனால் அவர் மனைவி என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கடமை உனக்கிருக்கிறது. அடுத்த முறை வரும்போது உன் கல்யாணப் பத்திரிகை அல்லது திருமண சான்றிதழ் எதையாவது கொண்டு வா. உன் கணவனின் லைப் இன்ஷ்யூரன்ஸ், வேலை பார்க்கும் இடத்தில கிடைக்கும் பிடிப்பு பணம் எல்லாம் கூட அப்போதுதான் கிடைக்கும். அவ்வளவு ஏன் ஒரு டெத் சர்டிபிகேட் வாங்கணும்னா கூட நீதான் மனைவி என்ற ப்ரூப் வேணும்..."

மேற்கொண்டு அவள் பேசுவதற்கு முன் நைனிதா காதைப் பொத்திக் கொண்டாள். "ஐயோ, வேறு எதுவும் சொல்லாதீங்க. தயவு செஞ்சி எதுவும் பேசாதீங்க. ரோஹித்திற்கு எதுவும் ஆகாது. நாளைக்கே தூங்கி விழிக்கிற மாதிரி விழித்துவிடுவார்."

அதற்குமேல் எதுவும் பேசாமல் அந்த நர்ஸ் வழிவிட நைனிதா ஐ.சி.யுவினுள் சென்றாள். ரோஹித் மருத்துவ மனை கட்டிலில் கண்மூடி படுத்திருந்தான். அவன் உடலில் விபத்து நடந்ததற்கான அடையாளம் எதுவுமே இல்லை. நைனிதா மெதுவாய் அவன் தலையை



வருடினாள். "ரோஹித் எழுந்து வா ரோஹித். நம்ம வீட்டுக்கு போயிடலாம். எனக்கு இங்கே ரொம்ப பயமா இருக்கு. எல்லோரும் என்னென்னவோ பேசறாங்க. நீ வா. நம்ம வீட்டுக்கு போயிடலாம்" என்றாள் அவனிடம்.

அவனிடம் அசைவே இல்லை. "எவ்வளவு நேரம் ரோஹித் தூங்குவ? போதும் தூங்கினது. வா போகலாம். உனக்கு பிடிச்ச சப்பாத்தியும் சிக்கன் குருமாவும் செஞ்சு தருகிறேன்."

சில சமயம் வீட்டில் ரோஹித் தூங்குவது போல் படுத்திருப்பான். நைனிதா குரல் கொடுத்து ஓய்ந்து போய் அவன் அருகில் வந்து 'எழுந்திரு' என்று உலுக்கியதும் அவன் கைகளை இறுக்கமாய் பிடித்து அவளை இழுத்துக் கொள்வான். அவனிடமிருந்து விடுபட சில நிமிடங்கள் இனிமையான போராட்டம் நடக்கும். அது போல இப்போதும் விழித்து தன்னை இழுத்துக் கொள்ள மாட்டானா என்ற எதிர்பார்ப்பில் நைனிதா பேசிக் கொண்டே இருந்தாள்.

ஒரு டியூட்டி நர்ஸ் வந்து அவளை உலுக்கினாள். "பெரிய டாக்டர் வர்ற நேரமாச்சு. விசிட்டர்ஸ் இருக்கறதைப் பார்த்தா எங்களை திட்டுவார். எழுந்து வெளியே வா."

எழுந்து வெளியே வந்தபோது புதிய இடத்தில் புதிய சூழ்நிலையில் அவனை தனியாக விட்டு வர மனசே இல்லாமல் வந்தாள். இரண்டு நாட்கள் வராண்டாவிலேயே கிடந்த பின் மூன்றாவது நாள் டாக்டர் சொன்னார். "நோயாளியின் நிலையில் எந்த முன்னேற்றமும்

இல்லை. அதனால் ஐ.சி.யுவில் வைத்திருக்க தேவையில்லை. தனி ரூமுக்கு மாற்றி விடலாம். மருத்துவ கண்காணிப்பு தொடர்ந்து இருக்கும்.''

வேறுவழியின்றி பாலசந்தரம் தலையசைக்க ரோஹித் தனியறைக்கு மாற்றப்பட்டான். ரோஹித் வீட்டினர் இரண்டு மூன்று பேராக வந்து தங்கிக் கொண்டிருந்தனர். அவனது உறவினர்களும் பார்க்க வந்து கொண்டிருந்தனர். மெதுவான குரலில் அவர்கள் ரோஹித் குடும்பத்தினரிடம் பேசுவதும், வெளியே வந்து வராண்டாவில் அமர்ந்திருந்த நைனிதாவை திரும்பிப் பார்த்துவிட்டு போவதுமாய் இருந்தனர்.

அன்று ரோஹித் வேலைபார்த்த மருத்துவமனையிலிருந்து அவனைப் பார்க்க அவனுடன் பணிபுரியும் மருத்துவர்கள் வந்திருந்தனர். அதில் ஒரு சொன்னான். "ரோஹித்திற்கு இப்படியாகும் என்று நான் நினைக்கவே இல்லை. அவனுக்கு விபத்து நடந்த அன்று கூட நான் அவனுக்கு அறிவுரை கூறினேன். தவறான உறவுகளை விட்டுவிட்டு ஒரு நல்ல பெண்ணாய் பார்த்து மணந்து கொள் என்று சொன்னேன். என்மீது கோபத்துடன் வெளியே சென்று விட்டான். மறுபடி அவனை இந்த நிலைமையில் பார்ப்பேன் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை.''

வெளியே அமர்ந்திருந்த நைனிதாவுக்கு அவன் பேச்சு காதில் விழுந்து தூக்கிவாரிப் போட்டது. ஆக ரோஹித்தும் அவமானப்பட்டிருக்கிறான். கோபப்பட்டிருக்கிறான். அந்த மனநிலையில் இருந்த போதுதான் விபத்து



நடந்திருக்கிறது. அவனுடைய அவமானத்திற்கு காரணம் நான் என்று நினைத்திருப்பானா? என் மீது கோபம் வந்திருக்கும். கடைசியில் ரோஹித், உன்னுடைய இந்த நிலைக்கு நானா காரணம்? நைனிதா மனதிற்குள் மறுகத் தொடங்கினாள்.

தலைமை நர்ஸ் ஷிப்ட் மாறி சென்றுவிட இரவு பணிக்கு வந்த நர்ஸ் நோயாளிகளைப் பார்க்க வந்த விசிட்டர்களை விரட்டிக் கொண்டிருந்தாள். ''விசிட்டர்ஸ் டைம் முடிஞ்சி போச்சு கிளம்புங்க'' என்று ஒவ்வொரு அறையாக எட்டிப் பார்த்து செக் பண்ணியவள் ரோஹித்தின் அறையிலும் குரல் கொடுத்துவிட்டு வெளியே அமர்ந்திருந்த நைனிதாவை பார்த்ததும் ''நீ யாரை பார்க்க வந்தாய்? ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? நேரமாச்சு கிளம்பு'' என்றாள்.

''நான் ரோஹித்தின் மனைவி. இங்கேதான் இருப்பேன்'' என்றாள் நைனிதா உறுதியுடன்.

அந்த நர்ஸ் சந்தேகத்துடன் பாலசந்தரத்தைப் பார்க்க அவர் மௌனம் சாதித்தார். ஏதோ சொல்ல முற்பட்ட ராஜாவையும் கையமர்த்தினார்.

''அப்பா பாவம்...'' என்று கார்த்திக் தொடங்கவும், ''எனக்கு தெரியும் கார்த்திக். சம்பிரதாயங்களை தூக்கி எறிபவர்களுக்கு அதனால் ஏற்படும் விளைவுகளை தாங்கி கொள்ள முடிகிறதா என்று பார்க்க வேண்டும். ரோஹித் பிழைத்து எழுந்தால் அவர்கள் வாழ்க்கை பிரச்சனை இன்றி தொடர இந்த சோதனை அவசியம்'' மெதுவான குரலில் அவர் சொல்லவும் எல்லோரும் அத்துடன் அமைதியானார்கள்.

அறையினுள் நின்றபடி அவர்கள் பேச்சை கவனித்த நர்ஸ் "சரிதான். காதல் கல்யாணம் போலிருக்கு. பிடிக்காத மருமகள்" என்றபடி மேற்கொண்டு நைனிதாவிடம் எதுவும் பேசாமல் சென்றுவிட்டாள்.

நான்கு நாட்கள் மெதுவாய் நகர்ந்தன. நைனிதாவின் அம்மா அப்பா அவள் கல்லூரியிலிருந்து கூட யாரும் பார்க்க வரவில்லை. அவர்களுக்கு தகவல் தெரியுமா? சரண் ஏதாவது சொன்னானா? என்று கூட யோசிக்கத் தோணாமல் இருந்தாள். மூளையும் மனசும் மரத்துப் போய்விட்டிருந்தது. சரண் மட்டும் அவ்வப்போது எதையாவது வாங்கிவந்து அவளை வற்புறுத்தி சாப்பிட வைப்பதும், வீட்டுக்கு போய் வருவதுமாய் இருந்தான்.

## 15

ஐந்தாம் நாள் மாலை ரோஹித்தைப் பார்க்க வந்த முக்கிய உறவினரை வழியனுப்பும் பொருட்டு வெளி வராண்டா மூலையில் நின்றபடி ரோஹித் குடும்பத்தினர் பேசிக் கொண்டிருந்தார்கள். லட்சுமியின் கைகளைப் பிடித்தபடி அந்த உறவுப் பெண் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள். ரோஹித்தின் அருகே யாருமே இல்லாததை கவனித்த நைனிதா எழுந்து அவன் அருகே போய் அமர்ந்தாள். அவன் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டாள். அவன் தூங்குவதாக பாவித்து



மெதுவான குரலில் பேசிக் கொண்டிருந்தாள். வழக்கமாய் தாங்கள் பேசுவது போல பேசியவளுக்கு தன் கைகளுக்குள் ஏதோ அசைவு தெரிந்தது. கைகளை விரித்து பார்த்தபோது தன் கைக்குள் இருந்த ரோஹித்தின் கை லேசாக அசைய, கால் விரல்களிலும் ஒரு துடிப்பு தெரிந்தது. ரோஹித்தின் முகத்தில் ஒரு சலனம் ஏற்படவும் நைனிதா தாங்க முடியாத ஆர்வத்துடன் அவனை உலுக்கத் தொடங்கினாள்.

"ரோஹித்.. ரோஹித்.. இங்க பார்..."

நைனிதாவின் உரத்த குரலை கேட்டதும் வராண்டாவில் நின்றிருந்தவர்கள் அவசரமாய் உள்ளே ஓடிவந்தனர்.

நைனிதா விட்டால் எங்கே மறுபடி அமைதியாகி விடப்போகிறானோ என்ற பயத்தில் விடாமல் உலுக்கினாள். கன்னத்தைத் தட்டினாள். ரோஹித் கண்களை திறந்து மூடவும் லட்சுமி, "ரோஹித் இங்க பாருப்பா" என குரல் கொடுத்தாள். கட்டிலை சுற்றி குனிந்திருந்த அவன் குடும்பத்தினர் ஆளுக்காள் ரோஹித் என கத்தவும், ரோஹித் தூக்கத்திலிருந்து விழிப்பது போல மெதுவாய் கண்களைத் திறந்தான். கட்டிலை சுற்றியிருந்தவர்களை அவன் எதிர்பாராத குழப்பத்துடன் பார்க்க, அந்த ஒரு நொடியில் நைனிதாவின் உயிர் துடித்தது.

ரோஹித் இப்போது என்ன செய்வான்? என்னால் அவன் பணிபுரியும் இடத்தில் நண்பர்களிடையேயும் அவமானப்பட்டு அதனால் விபத்து நேரும் அளவுக்கு வேதனையடைந்திருக்கிறான். இந்த சமயம் அவன்

நினைத்தால் அவளை நிராகரிக்க முடியும். கோர்ட்டுக்கு போக வேண்டாம். வக்கீல் வைத்து வாதாட வேண்டாம். நாலு பேர் முன்னிலையில் பஞ்சாயத்துகூட வேண்டாம். சும்மா முகம் திருப்பினாலே போதும். அவளை புரியாதது போல ஒரு பார்வை பார்த்தால் போதும். அந்த பார்வையே அவளை விலக்கி நிறுத்திவிடும்.

அவள் எதை சொல்லி அவளை நிரூபிப்பாள்? உயிரோடு உயிர் கலந்து போனதற்கு சாட்சியாய் யாரை கூப்பிட முடியும்? நைனிதா எகிறும் இதயத்துடன் காத்திருக்க, சுற்றி வந்த ரோஹித்தின் பார்வை அவள் முகத்தில் நிலைத்தது. இதழ்கள் விரிந்தன. "நைனி" என்றான் புன்னகையினூடே.

நைனிதாவிற்கு ஐந்து நாட்களாய் கலங்காத கண் இப்போது கலங்கியது. அவன் கைகளை பிடித்தபடி "நைனியை ஐந்து நாட்களாய் ஏன் மறந்து போனாய் ரோஹித்?" என்று கதறித் தீர்கையில் எல்லோர் கண்களிலும் நீர் நிரம்பியது.

தூக்கத்தில் எழும்பியவனைப் போல் ரோஹித் தன் குடும்பத்தினரை குழப்பத்துடன் பார்த்து, "அப்பா நீங்க எல்லோரும் எப்ப வந்தீங்க? நான் ஏன் ஹாஸ்பெட்டல்ல இருக்கேன்?" என்றான்.

லட்சுமி மகனின் தலையை வருடி முத்தமிட, பாலசுந்தரம் கரகரத்த குரலை செருமியபடி "உன் பொண்டாட்டி கிட்ட கேட்டு எல்லா விபரத்தையும் தெரிஞ்சுக்க" என்று வெளியே சென்று வாயிலிலிருந்த பிள்ளையாருக்கு நன்றி சொன்னார்.



ரோஹித் கேள்விக் குறியுடன் நைனிதாவைப் பார்க்க, நைனிதா தன் கண்களைத் துடைத்து புன்னகைத்தபடி ஐந்து நாட்களின் கதையை சொல்லத் தொடங்கினாள்.

ரோஹித் அசந்துபோய் கேட்டுக் கொண்டிருக்க, "வாங்க, வணக்கம்" என்ற உற்சாக குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

சிதம்பரமும் கலாவதியும் உள்ளே வந்து கொண்டிருந்தனர்.

பின்னால் வந்து கொண்டிருந்த சரணைக் காட்டிய கலாவதி "இவன் எங்களிடம் விஷயத்தை சொல்லவேயில்லை. இப்போதுதான் சொன்னான்" என்றாள் மகளிடம்.

நைனிதா வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, சரண் அப்போதுதான் அறைக்குள் நுழைந்த பாலசுந்தரத்தைப் பார்த்து புன்னகைத்தான்.

"நான் சொல்ல வேண்டாம் என்று சொன்னேன்" என்றார் பாலசுந்தரம்.

எல்லோரும் அவரையே ஆச்சரியமாய் பார்க்க, அவர் சொன்னார்.

"உறவுகளையும் மரபுகளையும் தூக்கி எறிபவர்களுக்கு பிரச்சனை வரும் போது உறவுகளும், நம் மரபு சார்ந்த அடையாளங்களும் தான் கை கொடுக்கும் என்பதை இவர்கள் இருவருக்கும் தெரியப்படுத்த விரும்பினேன்.

நம்முடைய கலாச்சாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் எப்போதுமே ஆண்களைவிட பெண்களைத்தான் அதிகம் பாதிக்கும். இவர்களது வித்தியாசமான வாழ்க்கை முறையினால் நைனிதாவுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இழப்பை அதன் விளைவை அவள் தனியாக நின்றால்தான் முழுதாக உணர்ந்து கொள்ள முடியும் என்பதால் என் வீட்டினரை நைனிதாவுடன் பழக அனுமதிக்கவில்லை. மருத்துவமனைக்கு சரண் ரோஹித்தை பார்க்க வந்த முதல்நாளே நான் சரணிடம் சொன்னேன். ரோஹித்தின் நிலை எப்படி மாறினாலும் உன் அக்கா என் வீட்டுப் பெண்தான். அதில் எந்த மாற்றமும் கிடையாது. ஆனால் அவளைப் பற்றி அவளுக்கு புரியவைக்க நீ எனக்கு உதவ வேண்டும். உன் பெற்றோர்கள், நைனிதாவின் கல்லூரி ஆசிரியைகள் என்று யாரையும் நைனிதாவை நெருங்க விடாதே என்றேன்.

அக்காவின் நன்மைக்காக என்று சரண் நான் சொன்னதை செய்தான். ஆனால் அவ்வப்போது ஒதுக்குப்புறமாய் நின்று தனிமையில் சோர்ந்து கிடக்கும் தன் அக்காவைப் பார்த்து அவன் அழுவதைப் பார்க்கும்போது எனக்கே கலங்கிப் போகும். எப்படியோ எல்லாம் நல்லபடியாக நடந்து ரோஹித் பிழைத்தெழுந்து எல்லோரையும் காப்பாற்றினான்,'' என்று பாலசுந்தரம் மகனிடம் சொன்னார்.

ரோஹித் நைனிதாவுக்கு அவள் நிலையை புரிய வைக்கப் போய் நான் கூட ஒரு விஷயம் புரிந்து கொண்டேன். மனித உயிருக்கு மிஞ்சியது இந்த உலகில்





எதுவுமே இல்லை. சம்பிரதாயப்படி நடக்கவில்லை என்று உன்னை ஒதுக்கி வைத்திருந்தேனே. உனக்கு எதாவது நடந்திருந்தால் என் நம் சடங்குகள் 'அப்பா' என்று கூப்பிடுமா? உன் இடத்தை பூர்த்தி செய்யும் சக்தி அவற்றிற்கு உண்டா? கடைசிவரை நான் குற்ற உணர்விலேயே செத்திருப்பேன். ரோஹித் இப்போது சொல்கிறேன் கேள். ''மனிதனின் உயிருக்கும் அந்த உயிரின் மீது நாம் செலுத்தும் அன்பிற்கும் மிஞ்சிய சடங்கோ, சம்பிரதாயமோ எதுவுமே இல்லை. இந்த விஷயத்தை நீங்க ரெண்டு பேரும்தான் எனக்கு புரிய வெச்சீங்க. உங்களை நான் எதுவுமே கேட்கப் போவதில்லை. நாமெல்லோரும் பிரியமாய் இருந்தால் அதுவே போதும்'' பேசி முடித்ததும் பாலசுந்தரத்தின் கண்களில் நீர் நிறைந்தது. அறையில் யாரும் பேச மனமற்று சிலைகளாய் நின்றனர்.

ரோஹித்தின் வீட்டிலிருந்து வந்திருந்த இட்லியை காரமில்லாத சட்னியில் தொட்டு நைனிதா ஊட்டிவிட்டாள்.

''எல்லோரும் முன்னாடியும் உன்னை எனக்கு ஊட்டவெச்சிட்டேன் பாத்தியா?'' கண்சிமிட்டி சிரித்தான் ரோஹித்.

இவன் இப்படி எழுந்து உட்கார்ந்து சிரிப்பான் என்று சில நாள் முன்பு யாரால் சொல்ல முடியும்? ரோஹித்தை பரிசோதித்த டாக்டர்கள் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை என்றும், எதற்கும் இரண்டு நாள் தங்கிப் பார்த்துவிட்டு போகும்படியும் கூறியிருந்தனர். அவனுக்கு எதுவுமில்லை என்ற திருப்தியில் நைனிதாவை

மட்டும் அவனுடன் விட்டுவிட்டு ரோஹித்தின் பெற்றோர், எல்லோரும் வீட்டுக்கு போய் விட்டார்கள், சிதம்பரமும் கலாவதியும் சமாதானமாகி விட்டார்கள் என்பதை கண்ணால் பார்த்தும் நைனிதாவால் நம்பமுடியவில்லை.

அன்று மருத்துவமனைக்கு வந்த அம்மாவும் அப்பாவும் பாலசுந்தரம் பேசியதைக் கேட்டு நெகிழ்ந்து போனதும், நைனிதாவை அணைத்துக் கொண்டு கலங்கியதும் இப்போதும் கனவு மாதிரித்தான் இருக்கிறது. அம்மாவின் முகத்தில் முதன்முதலாய் தெரிந்த சிரிப்பு நைனிதாவின் மனதை நெகிழ்த்தியது. சரண் இவ்வளவு பொறுப்புடன், அக்கறையுடன் நடந்து கொள்வான் என்கிற விஷயம் கூட அவளுக்கு புதுசாகத்தான் இருந்தது. மாற்றங்கள் நிறைந்ததுதான் வாழ்க்கை. அவை இல்லை எனில் வாழ்வில் சுவாரஸ்யமும் இல்லை என்பது உண்மைதான் போலும்.

"நைனி என்ன யோசிக்கிறாய்?"என்றான் ரோஹித்.

''நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம் ரோஹித்'' என்றாள் நைனிதா சட்டென்று.

''என்ன சொல்கிறாய் நைனி?'' என்றான் ரோஹித் வியப்புடன்.

''உண்மையைத்தான் சொல்கிறேன்.''

''என்மீது நம்பிக்கை போயிடிச்சா நைனி?''

''நம்பிக்கை போனா எப்படி உன்கூட ஆயுசுக்கும் வாழ முடியும்? காரணம் அதில்ல ரோஹித். சமூகத்தின் நடுவே



வாழும் நாம், நம் சமூகம் விதித்திருக்கும் கோட்பாடுகளையும் பின்பற்றித்தான் ஆக வேண்டும். நமக்கு சடங்குகள் தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால், மனிதர்கள் வேணுமில்லையா? நாம் கடைபிடிக்கும் கொள்கைகள் நம் நண்பர்களையே விரோதிகளாக்கினால், கொள்கையை விட நட்புடன் வாழ்வதுதானே சிறந்தது? மனோதத்துவத்தை பாடமாய் எடுத்து மன விகாரங்களை படித்து போதித்து பழகிவிட்டதால் ஒரு சராசரி மனதின் ரியாக்ஷன் எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியாமல் போய் விட்டது ரோஹித்.

''ஆக்சுவலா விபத்து நடக்கறதுக்கு முந்தி நாம நார்வே போயிடலாம்னு நான் முடிவு செஞ்சேன் நைனி.''

''போகலாம்தான். ஆனால் தாய்நாட்டை விட்டு எங்கே போனாலும் நாம் அங்கே இரண்டாம்தர பிரஜைகள்தானே ரோஹித்? அமைதியையும் ஏகாந்தத்தையும் விரும்பும் அந்நாட்டு மக்கள் தங்கள் நாடு அகதிகளின் கூடாரமாக மாறி வருவதைப் பற்றி இப்போதே சலசலக்கிறார்கள். பிறகு எதிர்க்க ஆரம்பித்தால் அங்கே நம் வாழ்வு கேள்விக் குறியாகிவிடும்.''

''நைனி நீ என்ன சொன்னாலும் உண்மை என்னன்னு எனக்கு தெரியும்.''

''என்ன?''

''உனக்கு பட்டுப்புடவையும் நகையும் உடுத்தி அலங்கரித்துக்கொள்ள ஆசை வந்துவிட்டது. எல்லோர் முன்னிலும் ஹிரோயினா இருக்க ஆசைப்படற.''

சிரிப்புடன் நைனிதா அவன் தோளில் தட்ட, "இப்படி அடிச்சி அடிச்சே என்னை ஆஸ்பத்திரியில படுக்க வெச்சிட்ட" என்றான் ரோஹித் விளையாட்டாய்.

காபி ப்ளாஸ்க்குடன் சபிதாவும் சுகுணாவும் அறைக்குள் நுழைந்தனர். அவர்களைப் பார்த்த ரோஹித், "அண்ணி இவளை இப்படியே விட்டுட்டு ஓடிலாம்னு பார்த்தேன். முடியாது கல்யாணம் பண்ணிக்கோன்னு தொல்லை பண்றா. சொல்லுங்க. உங்களில் யாருக்கு மணப்பெண் அலங்காரம் நன்றாய் செய்யத் தெரியும்?" என்றான்.

இருவர் முகங்களும் சட்டென மலர்ந்து போனது. சுகுணா உடனே தன் செல்போனில் ரோஹித் வீட்டிற்கு தகவல் சொல்லத் தொடங்கினாள்.

நைனிதாவின் அருகே வந்த சபிதா, "அலங்காரம் பண்ணாட்டியும் என் தங்கை அழகுதான்" என்றபடி அவளை அணைத்துக் கொண்டாள்.

மாலையில் அவர்களை பார்க்க வந்த சிதம்பரம் பெரிய நிம்மதி பெருமூச்சு விட்டார். சரண் கலாவதியையும், சாந்தம்மாவையும் அழைத்துக் கொண்டு இனிப்பு பாக்கெட்டுகளுடன் வந்து சேர்ந்தான். அங்கே பணிபுரிபவர்கள், உறவினர், தெரிந்தவர்களுக்கெல்லாம் இனிப்பு வழங்கி இரு குடும்பமும் குதூகலித்தது.

"திருமணம் என்ற வார்த்தையே ஒரு குடும்பத்திற்குள் எத்தனை மகிழ்வை கொண்டு வருகிறது பார்த்தாயா நைனி?" என்றான் ரோஹித் அவளிடம்.



"திருமண விஷயத்துடன் நீ உயிர் பிழைத்ததையும் சேர்த்து கொண்டாடுகிறார்கள். நம் திருமணம் சமூகத்தினர், வீட்டினரின் திருப்திக்காகத்தான் ரோஹித். காதலுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து சிறிதும் பொறுமையற்ற மேல்நாட்டு வாழ்க்கை முறையும் நமக்கு வேண்டாம். சகிப்புத்தன்மையே வாழ்க்கையாய் போய் விட்ட இந்திய தம்பதிகளின் மனோபாவமும் வேண்டாம். நம் வாழ்க்கை அன்பும், காதலும், சகிப்புத்தன்மையும், பரஸ்பர விட்டுக் கொடுத்தலும் நிறைந்ததாய் இதுவரை இருந்த மாதிரியே எப்போதும் இருக்க வேண்டும்."

"நிச்சயமாய். ஆனால் நைனி. ஒரு விஷயத்தில் மட்டும் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்."

"என்ன விஷயம்?"

"கல்யாணம் முடிஞ்ச அன்னிக்கே பர்ஸ்ட்நைட் வெச்சாகணும்."

கலகலவென சிரித்தாள் நைனிதா. "நம்ம தாம்பத்யம் பழசு ரோஹித். கல்யாணம் மட்டும்தான் புதுசு. நினைவில்லையா உனக்கு?"

"பழசாவது புதுசாவது? பூ.. பட்டுப்புடவை.. ஊதுபத்தி.. பலகாரவாசனை... அருகில் நீ.. எதையும் விடறதா இல்லை நான்."

"ஓ.. இந்த அனுபவதுக்காகத்தான் கல்யாணம்னு சொன்ன உடனே தலையாட்டினியா?"

"புரியுதில்ல? கொஞ்சம் பக்கத்தில் வாயேன்."

"டேய்.. இது மருத்துவமனை."

"யார் சொன்னது? தேவதைகள் வசிக்குமிடம். பின்னால் பார். வெள்ளை உடை அணிந்த தேவதைகள் உன்னை சுற்றி வருவதை."

"அது ரூம் க்ளீன் பண்ண வெள்ளை யூனிபார்மில் வந்திருக்கிற ஆயா ரோஹித்."

இருவரின் சிரிப்பு சத்தமும் அறைக்கு வெளியே கேட்க, குனிந்து கேஸ் ஷீட்டில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த அந்த மூத்த தலைமை நர்ஸ் திருப்தியுடன் புன்னகைத்தாள்.